விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 23 வெள்ளிக்கிழமை (08.08.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 232

## இலங்கை மீதான ஐ.நா விசாரணை

# மும்முரம்

(ஜெனிவா)

**இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் நியமித்த ஆணைக்குழு தனது விசாரணையை மும்முரமாக ஆரம்பித்துள்ளது.**

இந்த விசாரணைக் குழுவிடம் சமர்ப்பிப்பதற்காக தகவல் மற்றும் ஆதாரங்கள் வைத்திருப்பவர்கள், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அவற்றை சமர்ப்பிக்க வேண்டும் என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

விசாரணை நியதிகள்

பணிப்பாணை மற்றும் அறிக்கைப்படுத்தல் கடப்பாடுகள் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் என்பது தொடர்பாக மார்ச்

20ஆம் பக்கம் பார்க்க....

## பிக்குமாருக்கு எதிராக நடவடிக்கை-*வாசு*

(கொழும்பு)

அமைப்புகள் கூட்டங்களையோ, கலந்துரையாடல்களையோ நடத்தும் இடத்திற்குள் பலவந்தமாக எவர் நுழைய முயற்சித்தாலும் அது சட்டவிரோதமானது என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர்களுக்கு எதிராக இலங்கையின் சட்டத்தை செயற்படுத்த வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மருதானையில் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றுக்கு பிக்குகள் சென்று தடையை ஏற்படுத்தியமை பாரதூரமான குற்றமாகும்.

19ஆம் பக்கம் பார்க்க....



சப்ரகமுவ பல்கலைக்கழக தமிழ் மாணவன் யோகராஜா நிரோஜன் பாதுகாப்பு தரப்பினால் கைது செய்யப்பட்டுள்ளமையை கண்டித்து அவரது விடுதலையை வலியுறுத்தி சக மாணவர்கள் நேற்று பல்கலைக்கழக வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## ஞானசார தேரரிடம் இழப்பீடு கோரும் ராஜித

(கொழும்பு)

பொது பலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தனக்கு எதிராக தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதால், ஒரு பில்லியன் ரூபாய் இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்ய உள்ளதாக அமைச்சர் ராஜித சேனா ரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று பிற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இன்று (நேற்று) காலை சந்தித்த போது இது பற்றிப் பேசினேன்.

20ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச விசாரணைக்கு அரசு ஏன் அஞ்சுகிறது?

### நாடாளுமன்றில் மங்கள கேள்வி

(கொழும்பு)

போர்க் குற்றச் செயல்கள் மற்றும் சர்வதேச மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான சர்வதேச சுயாதீன விசாரணைகளுக்கு அரசாங்கம் அஞ்சுவது ஏன் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர நாடாளுமன்றில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,இறுதிக்கட்டப் போரின்போது இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பில் உள்ளக விசாரணைகள் நடத்தப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

எனினும், இதுவரையில் அவ்வாறான ஓர் விசாரணை நடத்தப்படவில்லை. என்ன காரணத்திற்காக குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உரிய

20ஆம் பக்கம் பார்க்க....

## புதிய தூதுவர் நியமிப்பு

(கொழும்பு)

இலங்கை வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் ரொட்னி பெரேரா ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கையின் புதிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமையகம் பெல்ஜியத்தின் பிரசல்ஸ் நகரில் இயங்கி வருகிறது.

நியூயோர்க்கில் உள்ள கொலம்பிய பல்கலைக்கழகத்தின் சர்வதேச உறவுகள் தொடர்பான பட்டப்படிப்பை மேற்கொண்டுள்ள ரொட்னி

20ஆம் பக்கம் பார்க்க....

## மன்னார் மனிதப் புதைகுழி

## புலனாய்வு பிரிவினருக்கு நீதிமன்று புதிய உத்தரவு

(மன்னார்)

திருக்கேதீச்சரம் மனிதப்புதைகுழிகள் இருக்கும் பகுதியில் முன்னர் கிராம மக்கள் இறந்தவர்களைப புதைக்கும் இடுகாடு இருந்ததற்கான பதிவுகள் இருக்கவில்லை என நீதிமன்றத்திற்குத் தெரிவித்திருந்த மன்னார் பிரதேச சபைத் தலைவரிடம் மன்னாரில் வைத்தே வாக்குமூலம் பதிய வேண்டும் என்று நீதிமன்றம் புலனாய்வு பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளது.

அவரை, புலனாய்வு பிரிவினர் கொழும்பில் உள்ள நாலாம் மாடிக்கு வருமாறு அழைத்திருந்த போதிலும் அவர் அங்கு செல்லாத நிலையிலேயே, அவரது சார்பில் சட்டத்தரணிகள் இந்த விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு

20ஆம் பக்கம் பார்க்க....

## பௌத்த-கத்தோலிக்கர்களிடையே முரண்பாட்டை ஏற்படுத்த முயற்சி!

(கொழும்பு)

பௌத்தர்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தும் சதித் திட்டமொன்று கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அளுத்கம, பேருவளை ஆகிய பிரதேசங்களில் பௌத்தர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டதனைப் போன்ற வன்முறைகளை கத்தோலிக்க மற்றும் பௌத்தர்களுக்கு இடையில் ஏற்படுத்த முயற்சிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

திட்டமிட்ட ஓர் கும்பலொன்று சில பௌத்த பிக்குகளைப் பயன்படுத்தி இவ்வாறு மத குரோதத்தை தூண்டுவதில் ஆர்வம் காட்டி வருகின்றது.

கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் கத்தோலிக்க மக்களுக்கு எதிராக இந்த பாரிய எதிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

இன முரண்பாடுகளைத் தூண்டி

20ஆம் பக்கம் பார்க்க....



யாழ்.வின்சர் சந்தியில் நேற்று மதியம் பேருந்து ஒன்று மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சிறு காயங்களுடன் தப்பியுள்ளதுடன் மோட்டார் சைக்கிள் பேருந்திற்கு அடியில் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஆலயத்திற்கு வரும் அடியவர்கள் வீடுகளின் பாதுகாப்பை பேணவும்

## யாழ்.பொலிஸார் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூர்க்கந்தன் ஆலயத்திற்கு வருகைதரும் அடியார்கள் தமது வீடுகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு யாழ்.பொலிஸார் அறிவித்துள்ளனர்.

யாழில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற திருட்டு முயற்சியினையடுத்தே பொலிஸார் இக் கோரிக்கையினை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில், தற்போது நல்லூர்கந்தன் ஆலயத்திருவிழா ஆரம்பமாகியுள்ளதனால் பொதுமக்கள் பெரும்பாலானோர் இரவு வேளைகளிலும், பகல் வேளைகளிலும ஆலயத்திற்கு வந்து செல்கின்றனர்.

இவ்வாறு பொதுமக்கள் ஆலயத்திற்கு வருகை தரும் சமயம் பார்த்து அவர்களின் வீடுகளினை முற்றுகையிட்டு திருட்டு நடவடிக்கையில் விசமிகள் ஈடுபடுகின்றனர்.

எனவே, பொதுமக்கள் தமது வீடுகளில் பெருந்தொகைப் பணம் மற்றும் பெறுமதிமிக்க நகைகள், பொருட்கள் என்பவற்றினை வைத்து விட்டு ஆலயத்திற்கு வருவதனை முற்றாக தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

ஆலயத்திற்கு வருகை தரும்போது கூட அதிகளவான நகைகளினை அணிந்து வருவதை தவிர்ப்பது பாதுகாப்பதானதாகும்.

ஆலயத்திற்கு வருகின்றவர்கள் தமது வீடுகளில் வயோதிபர்களினை காவலுக்கிருத்திவிட்டு வருவதனையும் இயன்றளவு தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

வட்டினுள் நுழையும் கொள்ளையர்கள் வயோதிபர்களினை தாக்கிவிட்டு பொருட்களினை அபகரித்துச செல்ல முற்படுவர். இதனால் சில வேளைகளில் மரணம் கூட சம்பவித்து விடக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.


திருடர்களினை முற்றாக இல்லா தொழிப்பதற்கு பொலிஸாருக்கு பொது மக்களின் ஒத்துழைப்பும் அவசியம்.

ஆகவே, இது தொடர்பில் பொது மக்கள் பொலிஸாரின் அறிவுறுத்தல்களிற்கு அமைவாக செயற்படுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நல்லூர் ஆலயத் திருவிழாக்காலத்தில் ஆலய சூழலில் கண்காணிப்புக்கென 600 இற்கும் மேற்பட்ட பொலிஸார், ஈடுபடுத் தப்பட்டுள்ளதாகவும் விசேட திரு விழாக்காலங்களில் இத் தொகை அதிகரித்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயந்த தெரிவித்தார். (செ-4)

# தாக்கப்பட்ட தமிழ் மாணவன் பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்

## கூறுகிறார் அஜித் ரோஹன



(கொழும்பு)

அண்மையில் தாக்குதலுக்கு உள்ளான சப்ரமுக பல்கலைக்கழக தமிழ மாணவன் பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

அது தொடர்பில் கண்டறியப்படும் பட்சத்தில் அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அந்த கருத்தால் சப்ரமுக பல்கலைக்கழக தமிழ் மாணவர் மத்தியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

குறித்த மாணவன் அண்மையில் தாக்கப்பட்டிருந்ததுடன் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் ஏனைய தமிழ் பேசும் மாணவர்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

மாணவர்கள் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறாவிட்டால் சுட்டுக் கொல்லப்படுவர் எனவும் மாணவிகள் கற்பழிக்கப்படுவர என வும் சுவரொட்டிகள் மூலம் அச்சுறுத தப்பட்டது.

இந்நிலையில் குறித்த மாணவன் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் என்று தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அந்த மாணவன புனர்வாழ்வு முகாமில் இருந்து பரீட்சை எழுதி பல்கலைக்கழகத்திற்கு சித்தியடைந்தார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

புனர்வாழ்வை நிறைவுசெய்த நிலையிலேயே அவர் பல்கலைக் கழகத்திற்கு சென்றதாகவும் தெரிவித்தார்.

குறித்த மாணவன் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய சில நடவடிக்கைகளில் ஈடுபட்டு அமைதியின்மையை தோற்றுவித்தார என்று கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

அவரது கைபேசியில் உள்ள சில குறுந்தகவல்களை அடிப்படையாக்க கொண்டே இந்த குற்றச் செயல்கள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

குறித்த குற்றச் செயல்கள் உண்மையானவையா? எனக் கண்டுபிடிக்கபபட்டும் பட்சத்தில் அவரை நீதிமன்றில் நிறுத்தி வழக்குத் தொடுக்கப்படுவதுடன் தொடர்ந்தும் அவரை தடுத்து வைத்து புனர்வாழ்வு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (செ-11)

## உரிமைகளை பாதுகாக்கவும் - ஐ.நா

(கொழும்பு)

அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கான உரிமையை பாதுகாக்குமாறு ஐ.நா. இலங்கையை கேட்டுக்கொண்டுள்ளது.

மருதானையில்காணாமற்போனவர்களின் உறவினர்கள் கலந்து கொண்ட கூட்டத்தை பௌத்த பிக்குகள் குழப்பிய சம்பவத்தை தொடர்ந்தே ஐ.நா இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

குறிப்பிட்ட சம்பவம் குறித்து நேரடி தகவல்கள் தம்மிடம் இல்லை என தெரிவித்துள்ள ஐ.நாவின் பிரதி பேச்சாளர் பர்ஹான்கக் உலகில் சகல பகுதிகளிலும் அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கான உரிமையை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் ஐ.நா உறுதியாகவுள்ளது. அது மதிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)




நன்றி கலந்த வாழ்த்துக்கள்

கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஐயா அவர்களுக்கும், முன்னாள் உதவி மேயர் நீகன் அவர்களுக்கும், ஆறுகால்மடம் பழம் வீதி 3 ஆம் ஒழுங்கையில் வசிக்கும் மக்கள் ஆகிய நாம் பல வருடமாக மின்சார வசதியின்றி பல சிரமத்தின் மத்தியில் வாழ்ந்து வந்தோம். இருண்ட எங்கள் கிராமத்தை வெளிச்சத்திற்கு கொண்டு வந்த கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் நேரடியாக நின்று மின்சார வசதியை முடித்து தந்த முன்னாள் உதவி மேயர் நீகன் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆறுகால் மடம், பழம்வீதி, 3-ம் ஒழுங்கை மக்கள்.

(7233)


## மண்டைதீவு வேப்பந்திடலில் நாளை தேர்திருவிழா

(மண்டைதீவு)

மண்டைதீவு வேப்பந்திடல் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத் தேர்த் திருவழா நாளை 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை இடம்பெறும்.

கடந்த 22 வருடங்களுக்குப் பின்னர் அம்மன் தேரில் ஆரோகணித்து வீதியுலா வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)


# ஸ்ரீ ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் ம்ருத்திகா பிருந்தாவனம்



நல்லூர், யாழ்ப்பாணம்

இசை ஆராதனை

தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்திருக்கும் சங்கீத வித்துவான்

08.08.2014 மாலை - 7.00

கலைமாமணி ஆண்டாள் கோயில் சி.சிவகுமார் குழுவினரது இசை ஆராதனை இன்று (08.08.2014 மாலை 7.00 மணி) இடம் பெறும்.

அன்புடன் அழைக்கிறோம்.

தர்மகர்த்தா : ச.சிவசிதம்பரம் குடும்பம்

(7240)


## அலங்கார உற்சவம்

(வன்னி)

கிருஸ்ணாநகர், முலங்காவில் பூநகரி வெங்கடேசப் பெருமாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதற்கமைய தினமும் யாழ்.கீழ்க் கரவைச் சேர்ந்த சொல்லருவி த.கருணாகரனின் தெய்வீகப் பேருரை நடைபெறவுள்ளது.

அத்துடன் இன்று வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரத காப்பும் வழங்கப்படவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (செ)

## ஸ்ரீ ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகளின் பிருந்தாவன பிரவேச ஆராதனை

(யாழ்ப்பாணம்)

யாழ் ஸ்ரீ ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகளின் 343 ஆவது வருட பிருந்தாவன பிரவேச ஆராதனை இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம எதிர் வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை வரை இடம்பெறவுள்ளது.

இதற்கமைய காலை 8.00 மணி தொடக்கம் கொடியேற்றப்பட்டு ஸ்ரீராகவேந்திர சுவாமிகளின் திருக்கதவு திறக்கப்பட்டு அபிஷேக அர்ச்சனை ஆராதனைகளுடன் அலங்கார பூசைகளும் இடம்பெறவுள்ளது.

12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அபிஷேக ஆராதனை இடம்பெற்று சுவாமிகள் அம்பிகையை வலம் வந்து ஊஞ்சலில் அமர்ந்து தரிசனம் கொடுத்தபின் பிருந்தாவன பிரவேசம் செய்து திருக்கதவு சாத்தப்படும். எனவே இந் நிகழ்வில் அனை வரையும்கலந்து கொண்டு பயன பெறுமாறு பிருந்தாவன தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (செ-11)


# மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம்



T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

08.08.2014 முதல் 13.08.2014 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன்

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(C-8135)


## நல்லைக் கந்தன் இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின ஆதரவில் நல்லூர்கந்தன் உற்சவ காலத்தை முன்னட்டு 'பிரமகான சபையால்' நல்லை ஆதீனத்தில் இசை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றது.

இதன்படி 8-ம் திருவிழாவான இன்று வெள்ளிக் கிழமை பி.ப. 6.30 மணிக்கு செல்விகள் அருந்ததி சற்குணானந்தசர்மா, ஹரிஸ்யந்தி சற்குணானந்த சர்மா, சுவஸ்யந்தி சற்குணானந்தசர்மா ஆகியோரின் இசைக கச்சேரி இடம் பெறவுள்ளது. (செ-11)


# ஓய்வூதியர்களுக்கான கடன் திட்டம் பற்றிய கலந்துரையாடல்

பான் ஏஷியா வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த ஒரு வருட காலத்திற்கும் மேலாக வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வரும் ஓய்வூதியர்களுக்கான கடன் திட்டம் பற்றிய கலந்துரையாடல் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரதான மண்டபத்தில் (D.S.OFFICE KARACHCHI MAIN HALL) எதிர்வரும் 9 ஆம் திகதி (09.08.2014 சனிக்கிழமை) காலை 10 மணியளவில் இடம்பெறவுள்ளது.

**இக்கடனின் சிறப்பம்சங்களாவன**

- ரூபா 500,000/- வரையான கடன் தொகை
- மிக இலகுவான செயற்படுத்தல்
- பிணைகள், பொறுப்புக்கள் தேவையற்றது.
- 70 வயது வரையான கடன் மீளச் செலுத்தும் வசதி

**நிபந்தனைகள்**

- ரூபா 10,000/- இற்கு அதிகமான ஓய்வூதியம் பெறுபவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- கடன் பாதுகாப்புத் திட்டம் ஒழுங்கு செய்யப்படும். (ஒழுங்குகள் அனைத்தும் வங்கியினால் செய்யப்படும்)

**எமது வங்கியில் ஏற்கெனவே கடன் பெற்றவர்களும் மேலதிகக் கடன் தொகையைப் பெறும் வாய்ப்புகள் உண்டு.**

**இவை பற்றிய மேலதிக விபரங்களை கலந்துரையாடலில் பங்குபற்றி அறிந்து கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்**

| | |
|---|---|
| கலந்துரையாடல் நடைபெறும் இடம் | கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரதான மண்டபம் |
| காலம் | 09.08.2014 காலை 10.00 மணி |
| மேலதிக விபரங்களுக்கு | பான் ஏஷியா வங்கி<br>161, கண்டி வீதி, கிளிநொச்சி.<br>0214925844,0214925952/3 |

(C-8132)

பான் ஏஷியா பேங்கிங் கோபரேஷன் பி.எல்.சி, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் நடாத்தப்படும் ஓர் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகும்.
Fitch Rating "BBB (lka)"

பான் ஏஷியா வங்கி


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மனிதப் புதைகுழிகளை தோண்டும் பணி ஆரம்பம்!

(கொழும்பு)

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் உள்ளதாக கூறப்படும் பாரிய மனிதப் புதைகுழியை தோண்டும் பணிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் தரப்பு இதனை தெரிவித்துள்ளது. இந்த மனித புதைகுழியில் 1990 ஆம் ஆண்டு கொல்லப்பட்ட 160 முஸ்லிம்களின் சடலங்கள் புதைக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படுகிறது. ஏற்கனவே இந்த புதைகுழி தோண்டப்படவிருந்த போதிலும் ஒரு முறைப்பாடு மாத்திரமே தமக்கு கிடைத்துள்ளதாக காத்தான்குடி நீதிமன்றத்துக்கு களுவாஞ்சிக்குடி பொலிஸார் கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதி அறிவித்தமையை அடுத்து அந்த பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன.

எனினும் காணாமற் போனோர் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு இந்த புதை குழி தொடர்பில் 100 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து களுவாஞ்சிக்குடி புதைகுழி தோண்டப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அங்கு புதைக்கபபட்ட சடலங்களை தோண்டியெடுத்து அவற்றை மத சம்பிரதாய கிரியைகளுடன் அடக்கம் செய்யப்பட வேண்டும் என முஸ்லிம் அமைப்புகள் கோரிக்கை விடுத்து வருகின்றன. (6)

# பொதுவேட்பாளர் யார் என்பதை ஐ.தே.க. தீர்மானிக்கவில்லையாம்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் தொடர்பாக இதுவரை எந்த தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தோறகடிக்க கூடிய ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது குறித்து பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை ஒழிப்பது உட்பட ஐக்கிய தேசியக் கட்சியின் இலக்கை கொண்ட ஏனைய அரசியல் கட்சிகளுடன் பணியாற்றும் நம்பிக்கையை கொண்டிருப்பதாகவும் அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவி ஒழிக்கப்படும் எனவும் அதன் இறுதி மூச்சு அடுத்த ஆண்டிற்குள் முடிந்து விடும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (6)






## இன்றைய இராசி பலன்

**08.08.2014**

ஆடி23, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
துவாதசி காலை 7.50 மணிவரை
திரயோதசி பின்னிரவு 5.37 மணிவரை
பூராடம் பின்னிரவு 3.31 மணிவரை
இராகுகாலம் 10.34-12.04 மணிவரை
சுபநேரம் 6.04-7.34 மணிவரை
பிரதோச விரதம், வரலட்சுமி விரதம்

வளவன்

**மேடம்** – தொழில்ரீதியாக ஏற்பட்ட மறைமுக எதிர்ப்புக்களைச் சமாளிப்பீர்கள், ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், வருமானம் திருப்தி தரும்.

**இடபம்** – ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், உறவினர், நண்பர்களிடம் பேசும் போது நிதானம் தேவை, குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கும்.

**மிதுனம்** – இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**கடகம்** – உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வியாபார விருத்தியுண்டு, கைமாற்றாக கொடுத்த பணம் மீண்டும் கைக்கு கிடைக்கலாம், ஆரோக்கியமான நாள்.

**சிம்மம்** – பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் மேலாங்கும் நாள்.

**கன்னி** – பெற்றோர் மீது பிரியம் கூடும், பயணங்களால் பலனுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்படலாம், சுபகாரியச் செலவுகள் கூடும்.

**துலாம்** – உடன் பிறப்புக்கள் வழியில் உற்சாகமான தகவல்கள் வந்து சேரலாம், தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** – புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், உறவினர்களும் நண்பர்களும் பக்கபலமாக இருப்பர், நல்ல காரியத் [illegible] நாள்.

**தனுசு** – கனிவாகப் பேசி காரியம் சாதிக்கவேண்டிய நாள், அம்பிகை வழிபாட்டால் இன்பம் காணவேண்டிய நாள், எதிர்பாராத காரியமொன்று நடைபெறலாம்.

**மகரம்** – திட்டமிட்ட காரியங்களில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம், இறை வழிபாட்டு சிந்தனை மேலோங்கும், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும், கோபப்படும் சூழ்நிலை உருவாகலாம்.

**கும்பம்** – விழாக்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, நண்பர்களின் ஒத்துழைப்போடு நல்லகாரியம் ஒன்றைச் செய்துமுடிப்பீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்** – முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், தூர தேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும், காரிய அனுகூலமுண்டு, சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அறிவூட்டும் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக ஊடகவியலாளர்களை அறிவூட்டும் கருத்தரங்கு இம்மாதம் 11 ஆம் திகதி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.




அரசாங்க தகவல் திணைக்களம் யாழ்.மாவட்ட செயலகத்துடன் இணைந்து நடத்தும் இக்கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளதுடன், யாழ்.மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், களனி பல்கலைக்கழக பொதுசனத்தொடர்ப்பு பிரிவின் பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல, கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகத் தொடர்பாடல் கற்கை நெறிப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ரகுராம் உட்பட தேசிய பத்திரிகைகளின் ஆசிரியர்கள் சிலரும் இதில் சிறப்புரை நிகழ்த்தவுள்ளனர். (6)




# கரைவலைப்பகுதியில் சிறகுவலை பயன்படுத்திய மூவர் கைதாகினர்

பிரதிப்பணிப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி தாளையடிப் பகுதியில் கரைவலை மீன்பிடித் தொழிலுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் சிறகுவலைகள் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட ஐந்து பேரில், மூவரை கைதுசெய்ததுடன், அவர்களிடமிருந்து 4 இலட்சம் ரூபா பெறுமதியான வலை உபகரணங்களை மீட்டதாகப் யாழ்.கடற்றொழில் நீரியல்வளத்துறைப் பிரதிப் பணிப்பாளர் நடராசா கணேசமூர்த்தி தெரிவித்தார்.

கற்கோவளம் முதல் முல்லைத்தீவு வரையிலான கடற் பகுதி கரைவலைத் தொழிலுக்கு ஒதுக்கப்பட்ட இடமாகவிருப்பதனால், சிறகு வலைகள் (கலங்கட்டி) பயன்படுத்தி மீன்பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

இதனை மீறி, ஐந்து மீனவர்கள் கலங்கட்டி மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர். வழமையாக கலங்கட்டி மீன்பிடிப்பதற்கு பூவரசம் தடி பயன்படுத்தப்படும் நிலையில் இவர்கள் கம்பிகளை உபயோகித்துக் கலங்கட்டிகளைக் கட்டியுள்ளனர்.

இதனால், கரை வலை மீன்பிடியில் ஈடுபடும், மீனவர் ஒருவருக்கும் காயம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, இது தொடர்பில் எமக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவ்விடத்திற்குச் சென்று, சிறகு வலை மீன்பிடியில் ஈடுபட்ட மூன்று மீனவர்களைக் கைது செய்ததுடன், அவர்கள் பயன்படுத்திய வலைகளையும் மீட்டோம்.

மேற்படி வலைகளைக் கழற்றுவதற்கு சுழியோடிகளே ஈடுபடுத்தப்பட்டனர். இதனால், நீரியல் வளத்துறைக்கு 15 ஆயிரம் ரூபா செலவாகியது என அவர் மேலும் தெரிவித்தார். (6)

# கலந்துரையாடல் இடமாற்றம்

(நல்லூர்)

கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெற்று வந்த கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபையின் பிணக்கு சம்பந்தமான கலந்துரையாடல்கள் இம்மாதம் மட்டும் தற்காலிகமாக கோப்பாய் நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளதாக மத்தியஸ்தசபையின் தவிசாளர் ஜி.மயில்வாகனம் அறிவித்துள்ளார்.

இவ்வாண்டிற்கான க.பொ.த உயர்தர பரீட்சைகள் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியில் இடம்பெற்று வருவதால் இவ் இடமாற்றம் தற்காலிகம் எனவும் பரீட்சைகள் முடிவடைந்தவுடன் மீண்டும் வழமைபோல் பிரதி ஞாயிறுதோறும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கலந்துரையாடல்கள் இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (6-134)

### பரலோக மாதா கொடியேற்றம்

கரவெட்டி பரலோக மாதா ஆலயத்தின் வருடாந்த பெருநாள் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ள பெருவிழாவில் ஒவ்வொரு நாளும் மாலை 4.30 மணிக்கு திருச் செபமாலையோடு திருப்பலி நடைபெறவுள்ளது. (6)

# முழுநிலா நாள் கலைவிழா தென்மராட்சியில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சி பிரதேச மக்களுடன் இணைந்து வடமாகாணக் கல்வித் திணைக்கள அனுசரணையுடன் நடத்தும் முழுநிலா நாள் கலைவிழா-2014 க்கான ஏற்பாடுகளில் தென்மராட்சி வலயக் கல்விச் சமூகத்தினர் முழுமூச்சுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

தென்மராட்சி வலய கல்விப்பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நாளை மறுதினம் 10 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இக் கலைவிழாவிற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவும் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் சி.சத்தியசீலனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இவ் விழாவில் தென்மராட்சிப் பிரதேசத்தை சேர்ந்த ஒன்பது பாடசாலைகளது ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இணைந்து தமது பாரம்பரிய பெருமைகளை பறை சாற்றும் வகையில் ஊர்திப் பவனிகளில் ஊர்வலமாக கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்திப்படி வருவதற்கு ஒழுங்குகள் செய்திருக்கின்றனர்.

இவற்றுடன் கைதடி கண்ணன் தவில் நாதஸ்வரக் குழுவினரது மங்கல இசை, வரவேற்பு நடனம், மெல்லிசைப்பாடல், ஹஸ்தாபினய விபூசன் நடனம், பல்லியம், கானாபாட்டு, அன்பின் ஐந்திணை நடன நாடகம், பெண் பெருமை கருத்தால் நடனம் என்பவற்றோடு மாறுவுவேவுள்ள மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

இக்கலைவிழா நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த போரதனைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைப் பேராசிரியர் க.அருணாசலம் அறிஞர் கௌரவிப்பில் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார். (6)



அகில இலங்கை தமிழ் திறன் பிரிவு 1 இற்கான பேச்சுப் போட்டியில் தேசிய மட்டத்தில் தங்கப் பதக்கத்தினை வென்ற யாழ்/ஆனைப்பந்தி மெதடிஸ்தமிசன் வித்தியாலய மாணவி சாளினி பாலமுரளி என்ற மாணவிக்கு பாடசாலை ரீதியாக கௌரவிக்கப்பட்டு அதிபர் யோ.யெகஆனந்ததினால் பரிசில் பொருட்கள் வழங்கப்படுவதையும் அருகில் மாணவியை நெறிப்படுத்திய ஆசிரியை திருமதி.கண்ணதாசன் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:-என்குமார்)

# அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி 20ஆம் திகதி போராட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளான எமது சகோதர, சகோதரிகளை இலங்கை அரசாங்கம் பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்யவேண்டும் என வலியுறுத்தி, எதிர்வரும் 20 ஆம் திகதி முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை யாழ். மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை நடத்த இருப்பதுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு மகஜர் ஒன்று கையளிக்கப்படவுள்ளதாகவும் முற்போக்கு தமிழ் தேசிய கட்சி செயலாளர் எஸ்.விஜயகாந் அறிவித்துள்ளார்.

இந்த போராட்டம் தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 30 ஆண்டுகாலமாக நடைபெற்று வந்த தமிழ் தேசிய உரிமைப் போராட்டத்தில் ஆயிரக் கணக்கான தமிழ் சகோதர, சகோதரிகள் பல்வேறு வகையான போராட்டங்களில் ஈடுபட்டு எமது தமிழ் தேசியத்தின் உரிமைக்காக உயிர்த் தியாகங்களையும் உடற் தியாகங்களையும் சொத்து இழப்பு தியாகங்களையும் உணர்வு ரீதியான தியாகங்களையும் செய்து வந்தார்கள்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதியுடன் இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளை அழித்து தாம் யுத்தத்தை வெற்றி கொண்டதாக அறிவித்தார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவராக இருந்த கருணா, தற்போது இலங்கை அரசாங்கத்தின் பிரதி அமைச்சராக இருந்து வருவதுடன் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பக்க துணையாக இருந்த கே.பி.பத்மநாதன் போன்றவர்கள் இலங்கை அரசாங்கத்தின் கைகோர்த்து தமது உல்லாசமான வாழ்க்கையை வாழ்ந்து வருகிறார்கள்.

இறுதிக்கட்ட யுத்தத்தில் ஈடுபட்ட 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முன்னாள் விடுதலை போராளிகள் புனர்வாழ்வு அழிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டு தற்போது சமுதாயத்துடனும் தங்களுடைய குடும்பத்துடனும் இணைந்து அன்றாட வாழ்வை வாழ்ந்து வருகிறார்கள்.

ஆனால் போராட்ட காலங்களில் தாக்குதல்களுக்கு உதவி புரிந்தார்கள் என்றும் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் என்றும் சந்தேகத்தின் அடிப்படையில் ஆயிரத்து 300 இற்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் கடந்த பல ஆண்டுகாலமாக சிறைகளில் தமது இளமைக்காலத்தையும், வசந்த காலத்தையும் தமது குடும்பத்தினரையும் உற்றார் உறவினர்களையும் இழந்து இலங்கையின் பல்வேறு சிறைகளில் தமது எதிர்காலத்தை தொலைத்து வாழ்க்கை கொண்டிருக்கிறார்கள்.

இவர்களை இலங்கை அரசாங்கம் முன்னாள் போராளிகளுக்கு எவ்வாறு புனர்வாழ்வு அழித்து விடுதலை செய்ததோ அதே போன்று தமிழ் அரசியல் கைதிகளான எமது சகோதர, சகோதரிகளையும் இலங்கை அரசாங்கம் பொது மன்னிப்பு அழித்து விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தி, எதிர்வரும் 20 ஆம் திகதி முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் வரை யாழ்.மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை நடத்த இருப்பதுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு மகஜர் ஒன்றினை கையளிக்கவும் உள்ளோம்.

எனவே இக் கவனயீர்ப்பு போராட்டத்திற்கு ஏனைய அனைத்து அரசியல் கட்சியினரையும், மக்கள் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அகதிகள் இருவர் தமிழ் நாட்டில் கைதாகினர்

(கொழும்பு)

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு அகதிகளை அனுப்பும் விவகாரம் தொடர்பாக, தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு இலங்கை அகதிகளை சென்னையைச் சேர்ந்த கியூ பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பணம் வாங்கிக் கொண்டு, மீன்பிடிப் படகின் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு இலங்கை அகதிகளை அனுப்புவதற்கு ஏற்பாடுகளைச் செய்துவந்த குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

மகேந்திரன் என்ற டேனியல், விஜயா என்ற இருவரும் கும்மிடிபபூண்டியில் உள்ள இலங்கை அகதி முகாமைச் சேர்ந்தவர்கள் என கண்டறியப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள திசையன்விளை என்ற ஊரில் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். அந்த ஊரில் இருக்கும் பேருந்து நிலையத்திற்கு அருகில் இருந்த தங்கும் விடுதியில் இவர்கள் தங்கியிருந்த நிலையில், சென்னையிலிருந்து சென்ற கியூ பிரிவு பொலிஸார் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

மகேந்திரன் என்பவர்தான் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு அகதிகளை அனுப்பும் குழுவின் மூளையாகச் செயற்பட்டார் என்று கருதப்படுகிறது.

அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல விரும்பும் அகதிகளை திரட்டுவதற்காகவே இவர்கள் திசையன்விளையில் தங்கியிருந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே இது தொடர்பாக கன்னியாகுமரி மாவட்ட கியூ பிரிவு பொலிஸார் 10 பேரை கைது செய்துள்ள நிலையில், இந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலியில் இவர்களை விசாரித்த பொலிஸார், அவர்களை ஏற்கனவே கைது செய்யப்பட்டவர்களுடன் சேர்த்து விசாரிப்பதற்காக நாகர்கோவில் அழைத்துச் சென்றுள்ளனர்.

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல விரும்புவர்கள் தமிழக கடற்கரைப் பகுதியிலிருந்து சாதாரண ஃபைபர் படகுகளில் முதலில் ஏற்றப்படுவார்கள். அதன் மூலம் நடுக்கடலுக்குச் சென்று, பெரிய மீன்பிடிப் படகுகளுக்கு அவர்கள் மாற்றப்படுவார்கள். அகதிகளை ஃபைபர் படகுகளில் ஏற்றுவதற்கு சரியான கடற்கரைப் பகுதியைத் தேடி, உவரி, இடிந்தகரை, கூத்தங்குழி போன்ற இடங்களை இந்த இருவரும் பார்த்துச் சென்றதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதேபோல அகதிகளைச் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பும் விவகாரத்தில் சுகந்தன், சுதன் எனற இரண்டு இலங்கை அகதிகளும் அருண் என்ற இந்தியரும் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் கியூ பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

திண்டுக்கல் மாவட்ட் நீதிமன்றத்தில் நடந்து வந்த இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் மூவருக்கும் தலா மூன்று ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (6)

**வாழ்க்கையில் வெறுப்பா?**

*பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்*

*காலை 9.00 - பி.ப 1.00*

**கைகொடுக்கும் நண்பர்கள்**

*104,4 ஆம் குறுக்குத் தெரு,*

*யாழ்ப்பாணம்.*

*021 222 8117*

(7871)

## பாதுகாப்புச் செயலாளர்

# அரசியல் பிரவேசம் குறித்து இன்னும் அறிவிக்கவில்லை





அரசியலில் பிரவே சிப் பது தொடர்பாக பாதுகாப்பு செயலாளர் கோத்த பாய ராஜபக்ஷவிடம் இருந்து தனக்கு எவ்வித கோரிக்கையும் விடுக்கப்ப டவில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் கடந்த செவ் வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளு டனான சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இச்சந்திப்பில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அரசியலில் பிரவேசிப்பதற்கு சாத்தியம் உள்ளதா என்று கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவரிடம் இருந்து அத்தகைய கோரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை என்றும், இது தொடர்பில் முன்னர் தான் விடுத்த வேண்டுகோளை கோத்தபாய ராஜபக்ஷ நிராகரித்து விட்டார் என்றும் தெரிவித்தார். அதே வேளை, ஜனாதிபதி அழைத்தால், தான் அரசியலுக்கு வருவேன் என்று செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஊடகங்களுக்கு வழங்கிய செவ்விகளில் முன்னர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# அரசாங்க அறிவித்தல்

## பகிரங்க ஏல விற்பனை -2014

## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

*யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மற்றும் கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேச செயலகங்களின் அலுவலகப் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட தளபாடங்கள், கணனிகள், பிரிண்டர்கள், தட்டச்சுப்பொறிகள், ரயர்கள், போட்டோப்பிரதி இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்சார உபகரணங்கள், குளிரூட்டிகள், தொலைக்காட்சி போன்ற் பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.*

*ஏல விற்பனையில் பொருட்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் மாவட்டச் செயலகம் மற்றும் உரிய பிரதேச செயலகங்களின் களஞ்சியக் கிளைகளுடன் தொடர்பு கொண்டு ஏல விற்பனை நடைபெறவுள்ள நாளுக்கு முன்வரும் அலுவலக நாளில் மட்டும் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை பொருட்களை பார்வையிடலாம். ஏல விற்பனையில் பொருட்களைப் பெறுகின்றவர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் ஏல விற்பனைக்குரிய காசாளரிடம் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் (பொது 172) பெற்று அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு முன்னர் பொருட்களை அவ்விடங்களில் இருந்து அகற்றுதல் வேண்டும்.*

| இல | அலுவலகம் | ஏலவிற்பனை நடைபெறவுள்ள திகதி | நேரம் | ஏலவிற்பனை நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01 | பிரதேச செயலகம் நல்லூர் | 18.08.2014 திங்கட்கிழமை | மு.ப 10.00 | பி.செ. நல்லூர் |
| 02 | பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் | 18.08.2014 திங்கட்கிழமை | மு.ப 11.00 | பி.செ. யாழ்ப்பாணம் |
| 03 | பிரதேச செயலகம் காரைநகர் | 18.08.2014 திங்கட்கிழமை | மு.ப 10.00 | பி.செ. காரைநகர் |
| 04 | பிரதேச செயலகம் ஊர்காவற்றுறை | 19.08.2014 செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | பி.செ. ஊர்காவற்றுறை |
| 05 | பிரதேச செயலகம் பருத்தித்துறை | 19.08.2014 செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | பி.செ. பருத்தித்துறை |
| 06 | பிரதேச செயலகம் சாவகச்சேரி | 20.08.2014 புதன்கிழமை | மு.ப 11.00 | பி.செ. சாவகச்சேரி |
| 07 | பிரதேச செயலகம் கோப்பாய் | 20.08.2014 புதன்கிழமை | மு.ப 10.00 | பி.செ. கோப்பாய் |
| 08 | பிரதேச செயலகம் கரவெட்டி | 20.08.2014 புதன்கிழமை | மு.ப 10.00 | பி.செ. கரவெட்டி |
| 09 | பிரதேச செயலகம் மருதங்கேணி | 20.08.2014 புதன்கிழமை | மு.ப 11.00 | பி.செ. மருதங்கேணி |
| 10 | பிரதேச செயலகம் வேலணை | 20.08.2014 புதன்கிழமை | மு.ப 10.00 | பி.செ. வேலணை |
| 11 | மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் | 21.08.2014 வியாழக்கிழமை | மு.ப 10.00 | நாவற்குழி களஞ்சியசாலை |

**சுந்தரம் அருமைநாயகம்,**
**அரசாங்க அதிபர்,**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

**கல்யாண மாலை**

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 4
கி.பா: 52 ¾ செவ் 1இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: A/L / தனியார் வேலை (சுவிஸ் PR)
தொ.இ: B/3481

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 25 உயரம்: 5'6"
தகைமை/தொழில்: HNDA / அரச தொழில்
தொ.இ: B/3482

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 35 ½ செவ் 7 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில் A/L/ சொந்த வியாபாரம்
தொ.இ: B/3483

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 3
கி.பா: 62 ½ சூரி செவ் 8 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்:B.COM, HNDA, AAT, M.COM / அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொ.இ: B/3484

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 3
கி.பா:11 ¾ செவ் 2 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/2412

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூசம் 1
கி.பா: 8 ¼ உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L,DIPLOMA IN Preschool / முன்பள்ளி ஆசிரியர்
தொ.இ: G/2415

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூராடம் 4
கி.பா: 48 செவ் 8 இல்
உயரம்: 156cm
தகைமை/தொழில்: A/L / தற்காலிக தனியார் வேலை
தொ.இ: G/2419

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 3
கி.பா: 18 ¾ செவ் 4 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில் A/L /தனியார் வேலை
தொ.இ: G/2422

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைது செய்யப்பட்ட மாணவன் தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறையீடு

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவனான வவுனியா, கனகராயன் குளம், சின்னடம்பன் பகுதியைச் சேர்ந்த யோகநாதன் நிரோஜன் (வயது 25) பயங்கரவாத புலனாய்வுத் துறையினால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாணவனின் பெற்றோர் நேற்று வியாழக்கிழமை வவுனியா மனித உரிமை ஆணைக குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பில் மாணவனின் தந்தையான எஸ்.யோகநாதன் தெரிவிக்கையில், எனது மூத்த மகன் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞான மற்றும் மொழிகள் துறையில் 3ஆம் வருட மாணவனாக கற்று வருகின்றார்.

தனக்கு லீவு எனக் கூறி கடந்த 5 நாட்கள் சின்னடம்பனில் உள்ள எமது வீட்டில் நின்றுவிட்டு, பரீட்சை இருப்பதாகத் தெரிவித்து கடந்த சனிக்கிழமை மீண்டும் பல்கலைக்கழகம் சென்றிருந்தார். அங்கு பரீட்சை எழுதிக் கொண்டிருந்த பொழுது கடந்த 05.08.2014 அன்று எனது மகனை சிலர் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக தகவலறிய கனகராயன்குளம் பொலிஸ் நிலையம் சென்றோம். அவர்கள் தமக்கு தகவல் கிடைத்துள்ளது, எனது மகனை பலாங்கொட பொலிஸார் கைது செய்து கொழும்பில் தடுத்து வைத்துள்ளனர் என்று தெரிவித்தனர். இதனையடுத்து நேற்று வியாழக்கிழமை வவுனியாவில் உள்ள மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளோம். தற்போது எனது மகனைத் தேடி கொழும்பு செல்கின்றோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த செவ்வாய்க் கிழமை பிற்பகல் குறித்த மாணவனின் கனகராயன்குளம், சின்னடம்பன் பகுதியில் உள்ள வீட்டிற்கு சென்ற புலனாய்வு துறையினர், அவரது விபரங்களைப் பெற்றுள்ளனர். எதற்காக விபரம் எடுக்கின்றீர்கள் என கேட்ட போது எதுவும் வேலை வந்தால் கொடுப்பதற்கு என்று கூறினார்கள் என மாணவனின் தாயார் தெரிவித்தார்.

மேற்படி மாணவனை கைது செய்யும் போது நேரில் கண்ட சக மாணவன் ஒருவன் கருத்து தெரிவிக்கையில், கடந்த 5 ஆம் திகதி அன்று பரீட்சை எழுதிவிட்டு பல்கலைக்கழக வளாகத்தில் நாங்கள் நின்றிருந்தோம்.

அப்போது எமது பல்கலைக் கழத்தைச் சேர்ந்த இந்திக்கா என்ற விரிவுரையாளர், நிரோஜனின் பரீட்சை இலக்கத்தை கூறிஅவரை வருமாறு அழைத்து, அங்கிருந்து கூட்டிச் சென்றார்.

இந்த நிலையில் பல மணி நேரங்களுக்கு பின் நிரோஜனை வளாகம் முழுவதும் தேடிய போதும் காணவில்லை. பின்னர் பல்கலைகழக நிர்வாகம் ஊடாக நிரோஜனை பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று அறிந்து கொண்டோம் என அவர் மேலும் தெரிவித்தார். (6-250)



தென்மராட்சி இலக்கிய அணியினரால் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அண்மையில் நடத்தப்பட்ட கம்பன் விழாவில் இவ்வாண்டுக்குரிய ஆன்றோர் விருது கலாபூசணம் கே.ஆர்.டேவிட்டுக்கு கம்பவாரதி இ.ஜெயராஜினால் வழங்கி கௌரவிக்கப்பட்டபோது

## அம்பாள் ஆலயத்தில் வரலட்சுமி விரதம்

கரணவாய் கிழக்கு அருள் மிகு ஆண்டி புலம் காளி அம்பாள் ஆலயத்தில் வரலட்சுமி விரதம் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

இவ் விரதத்திற்கான பூஜையை சிவஸ்ரீ க.சிவகுமாரக்குருக்கள் மற்றும் சிவஸ்ரீ.தி.சுப்பிரமணியக் குருக்கள் ஆகியோர் ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

இதன்போது வரலட்சுமி காப்பும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே இவ் விரதத்தினை அனுஷ்டித்து இஷ்ட சித்திகளை பெற்றுக்கொள்ள அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.(6-60)

## பௌர்ணமி விழா

கரவெட்டி கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம் நடத்தும் பௌர்ணமி விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.45 மணிக்கு ஜெயச்சந்திரன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக சின்னத்தம்பி சற்குணம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். இந்நிகழ்வில் பரந்தன் அரச விதை உற்பத்திப் பண்ணை முகாமையாளர் சின்னமணி சிறீதரனின் வாழ்க்கை வாழ்வதற்கே என்ற தலைப்பில் சிறப்பு சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது என தலைவர் சி.ஜி.திருமாலழகன் அறிவித்துள்ளார். (6)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 40 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 300 |
| தக்காளி | 60 | 70 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 80 | 90 | 100 |
| கரட் | 120 | 120 | 140 |
| பூசணி | 30 | 40 | 50 |
| புடோல் | 60 | 50 | 50 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 120 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 300 | 70 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 80 |
| பயற்றங்காய் | 60 | 120 | 80 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 120 | 150 | 120 |
| முருங்கைக்காய் | 30 | 50 | 40 |
| போஞ்சி | 120 | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 60 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 80 | 100 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 99


மதீசன் கணேஷ்

குழந்தை வெகுளித்தனமாக தன் தாயைக் கேட்டது, அம்மா நம் வீட்டு வேலைக்காரியிடம் உன்னுடைய பர்ஸையும், நகைகளையும் கொஞ்ச நேரம் பார்த்துக்கொள்ளச் சொல்லி கொடுப்பாயா?

அம்மா : அதெப்படி முடியும்... அவளை நான் நம்புவதில்லையே

குழந்தை : அப்புறம் ஏன் என்னை மட்டும் அவளிடம் விட்டு செல்கிறாய்?

தீபன் சற்குணம்




சுஜீவன் சுஜீ



வங்கி அதிகாரி : ஹலோ... நீங்க காருக்காக லோன் வாங்கியிருந்தீங்க. மாசம் தவணை கட்டாததால, நாங்க காரை எடுத்துக்கிட்டு போகிறோம்.

கடன் வாங்கியவர் : இப்படி நீங்க செய்வீங்கன்னு தெரிஞ்சிருந்தா என்னோட கல்யாணத்துக்கும் லோன் வாங்கியிருப்பேனே.

ரோஜா சிவா



நல்லாத்தானே இருக்கேன். அப்புறம் ஏன் ஒருத்தன் கூட நம்மள பார்க்க மாட்டேங்குறாங்க...!!!


கரொலின் கெனி

காதலும் நட்பும் சந்தித்த போது
காதல் கேட்டது, நான் வந்துவிட்டபின் நீ எதற்கு என்று?
நட்பு சொன்னது, நீ விட்டு சென்ற கண்ணீரை துடைக்க என்று...!!!



டிசா டிலா விபூ வித்தி குகன்

புரிஞ்சவங்க Like போடுங்க!




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தலையீடுகளுக்கு இடம் கொடுக்கப்படமாட்டாது

## மாகாண சுகாதார அமைச்சு திட்டவட்டம்

**வடமாகாண சுகாதார அமைச்சின் சிற்றூழியர் நியமனங்களில் அரசியல் தலையீடுகளுக்கு இடமளிக்கப்படமாட்டாது என வடமாகாண சுகாதார அமைச்சின் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் வடமாகாண சுகாதார அமைச்சின் ஊடகப் பிரிவு நேற்று வியாழக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வட மாகாண சுகாதார அமைச்சில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுகின்ற அதேவேளை வைத்திய நிபுணர்களிலிருந்து சாதாரண சிற்றூழியர்கள் வரையிலும் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றது.**

தற்போது படிப்படியாக இந்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் அதேவேளை- வடமாகாணத்தில் நீண்ட காலமாக சுகாதார தொண்டர்களாக கடமையாற்றியவர்களில் சிலருக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கையும் மேறகொள்ளப்பட்டுள்ளது.

இந்த நியமனங்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் ஏற்கனவே சம்பந்தப்பட்ட மாவட்ட சுகாதார பணிப்பாளர்களினால் நடத்தப்பட்டுள்ள நிலையில் இவர்களுக்கான நியமனங்களில் எந்தவித அரசியல் தலையீடுகளிற்கும் இடமளிக்கப்படமாட்டாது.

எதிர்காலத்தில் மேலும் ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மத்திய முகாமைத்துவ சேவைகள் பிரிவிலிருந்து அனுமதி கிடைத்துள்ளது.

எனினும் கடந்த காலங்கள் போலல்லாது பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்ட பின்னர் முறையாக நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டு தகுதியானவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படும்.

எனினும் சில அரசியற்கட்சியினர் வடமாகாண சுகாதார அமைச்சில் நியமனங்கள் பெற்றுத்தருவதாக மக்களை ஏமாற்றி பெயர்களை பதிவு செய்துவருவதாக அறியமுடிகிறது.

இவ்வாறான நடவடிக்கைகளுக்கு மாகாண சுகாதார அமைச்சு எந்த விதத்திலும் பொறுப்பேற்க மாட்டாதெனவும் அந்த அறிக்கை யில் மேலும் தெரிவிக்கபபட்டுள்ளது. (6-250)

# அமைச்சரின் இணைப்பாளரின் வாகனம் விபத்துக்குள்ளானது

வவுனியா, மாவட்ட செயலகம் முன்பாக வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீனின் இணைப்பாளர் பயணம் செய்த வாகனம் எதிரே வந்த ஹென்ரயினர் ரக வாகனத்துடன் மோதியதில் வாகனம் சேதமடைந்துள்ளதாக தெரியவருகிறது.


நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை 5 மணியளவில் வவுனியா மாவட்ட செயலகத்தில் இருந்து ஏ9 வீதியை நோக்கி பிரதான வாயில் வழியாக வர்த்தக கைத்தொழில் அமைச்சரின் இணைப்பாளர் பயணம் செய்த வாகனத்தை ஏ9 வீதியில் வவுனியாவில் இருந்து கிளிநொச்சி நோக்கி இன்னும் ஒரு வாகனத்தை ஏற்றிக் கொண்டு புறப்பட்ட ஹென்ரயினர் ரக வாகனம் மோதியுள்ளது.




இதனால் அமைச்சரின் இணைப்பாளர் பயணம் செய்த வாகனம் சிறியளவில் சேதமடைந்துள்ளது. அமைச்சரின் இணைப்பாளர் பயணம் செய்த வாகன சாரதி வாகனத்தை பிறேக் போட்டு நிறுத்தியதால் ஏற்பட இருந்த பாரிய விபத்து தடுக்கப்பட்டுள்ளது.

உடனடியாக சம்பவ இடத்திற்கு வவுனியா போக்குவரத்து பொலிஸார் வந்து விசாரணைகளை மேற கொண்ட போதும் இரு தரப்பும் விட்டுக் கொடுப்புடன் சமரசம் ஆகியமையால் பொலிஸார் இரு வாகனங்களையும் செல்ல அனுமதி வழங்கினர். (6-250)

# வவுனியாவில் கைக்குண்டு மீட்பு



(குருமன்காடு)

வவுனியாவில் குளம் துப்புரவு செய்யும் நடவடிக்கையின் போது கைக்குண்டு ஒன்று வெளிப்பட்டதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்ட அதேவேளை குண்டு செயலிழக்கும் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது .

வவுனியா இறம்பைக்குளம் ராணி மில் வீதியில் குளக் கரையில் கைக்குண்டு ஒன்று பழுதடைந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட் டுள்ளது.

நகரை அழகுபடுத்தும் செயற்றிட்டத்துக்கு அமைவாக குறித்த குளம் அழகுபடுத்தப்பட்டு வருகின்றது.

இன்று துப்புரவு பணியில் ஈடுபட்டிருந் தவர்கள் கைக் குண்டை அவதானித்து பொலிஸாருக்கு தகவல் கொடுத் துள்ளனர்.

அங்குவந்த பொலிஸார் கைக்குண்டை அடையாளப்படுத்தியுதுடன் குண்டு செயலிழக்கும் பிரிவுக்கு தகவல் கொடுத்து கைக்குண்டை மீட்டுள்ளனர். (6-250)

# 14 இந்திய வீடுகள் கையளிப்பு





முல்லைத்தீவு மாவட்ட மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் நெல்லிப்பிளவு, செல்வபுரம் ஆகிய கிராமங்களில் இந்திய வீட்டுத்திட்டத்தில் அமைக்கப்பட்ட 14 வீடுகள் கடந்த செவ்வாய்க்கிழமை பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

மேற்படி வீடுகள் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் அமைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், யாழ். இந்தியத் துணைத்தூதரகதற்காலிககொன்சல்ட் ஜெனரல் எஸ்.டி.மூர்த்தி, முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகம் ஆகியோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


இதன்போது கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் மேற்படி கிராமங்களுக்கு மின்சாரம், தண்ணீர் மற்றும் வீதி வசதிகள் ஆகியன விரைவில் ஏற்படுத்தித் தருவதாக உறுதியளித்திருந்தார். (6)

# பயிற்சிப் புத்தகங்கள் வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது

## உறுப்பினர் ரவிகரனால்

பாடசாலைகளுக்கான பயிற்சிப் புத்தகங்கள் வழங்கும் செயற்றிட்டத்தின் இரண்டாம் கட்டம் கடந்த இரு வாரகாலமாக துணுக்காய் கல்வி வலயத்தில் முன்னெடுக்கப் பட்டுவருகிறது. வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனால் முன்னெடுக்கப்பட்டுவரும் இச்செயற்றிட்டத்தின் முதலாவது கட்டத்தில் முல்லைத்தீவு கல்வி வலய பாடசாலைகள் உள்வாங்கப்பட்ட நிலையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இரண்டாம் கட்டத்தின் நிறைவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அனைத்து உயர்தர, சாதாரணதர பாட சாலைகளும் உள்வாங்கப்பட்டு விடும் என்று தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது

கடந்த மாதம் முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு கல்வி வலயத்திலுள்ள அனைத்து உயர்தர, சாதாரணதர பாடசாலைகளுக்கு சென்று பயிற்சிப்புத்தகங்களை வழங்கிய ரவிகரன் பாடசாலைகளின் பௌதீக, ஆளணி வள பற்றாக்குறை தொடர்பிலும் தக்வல்களை திரட்டியிருந்தார்.



இவற்றின் அடுத்தகட்டம் துணுக்காய் கல்வி வலய பாடசாலைகளில் செயற்படுத்தப்படும் என்று தெரிவித்த நிலையில், கடந்த இருவார காலமாக அவ்வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு சென்று அங்குள்ள பாடசாலைகளின் குறைகளையும் தேவைகளையும் ஆராய்ந்ததோடு அப்பாடசாலைகளுக்கான உயர்தர, சாதாரணதர பாட பயிற்சிப புத்தகங்களையும் வழங்கினார்.

இச்செயற்றிட்டத்தின் முதலாம் கட்டம் மூலமாக முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட 25 பாடசாலைகள் உள்வாங்கப்பட்டு 96 ஆயிரத்து 265 ரூபாவிற்கான பயிற்சிப்புத்தகங்கள் வழங்கப்பட்ட நிலையில் இதன் இரண்டாம் கட்டம் மூலமாக துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட 22 பாடசாலைகள் உள்வாங்கப்பட்டு 78ஆயிரத்து 350 ரூபாவிற்கான பயிற்சிப்புத்தகங்கள் வழங்கப்பட்டவண்ணம் உள்ளன.

நட்டாங்கண்டல் அ.த.க பாடசாலை, வன்னிவிளாங்குளம் அ.த.க பாடசாலை, விநாயகபுரம் அ.த.க பாடசாலை, துணுக்காய் அ.த.க பாடசாலை, கோட்டைகட்டியகுளம் அ.த.க பாடசாலை, தேறாங்கண்டல் அ.த.க பாடசாலை, தண்டுவான் அ.த.க பாடசாலை, கரிப்பட்ட முறிப்பு அ.த.க பாடசாலை, ஒலுமடு தமிழ் வித்தியாலயம், கூழாமுறிப்பு அ.த.க பாடசாலை, முத்தையன் கட்டு இடதுகரை அ.த.க பாடசாலை, பெரிய புளியங்குளம் அ.த.க பாடசாலை, திருமுறிகண்டி இந்து வித்தியாலயம் ஆகிய 13 சாதாரண தரம் வரையிலான பாடசாலைகளும் பாலிநகர் மகாவித்தியாலயம், பாண்டியன் குளம் மகாவித் தியாலயம, மல்லாவி மத்திய கல்லூரி, யோக புரம் மகா வித்தியாலயம், ஐயன் கன்குளம்அ.த.க பாடசாலை, ஒட்டுசுட்டான்மகாவித்தியாலயம், கற்சிலைமடு அ.த.க பாடசாலை, முத்தையன கட்டு வலது கரை மகா வித்தியால யம் ஆகிய 9 உயர்தரம் வரையி லான பாடசாலைகளும் இச் செயற் றிட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் உள்வாங்கப் படுகின்ற பாடசாலை களாகும். (6-250)

# மின்சார வேலைகள் துரிதகதியில்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் சில கிராமங்களுக்கு மின்சார வேலைகள் துரிதகதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கல்மடு நகர் கிராம சேவையாளர் பிரிவிற்கு உட்பட்ட கல்மடு நகர், சம்புக்குளம், நாவல் நகர், ரங்கன் குடியிருப்பு ஆகிய குடியிருப்பு பகுதிகளுக்கே மின்சார வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவிக்கையில்,

இவ் வருடம் டிசெம்பர் மாத இறுதிக்குள் கிளிநொச்சி மாவட்டத்தில் அனைத்துப் பிரதேசங்களுக்கும் மின்சார வசதி வழங்கப்படவுள்ளது என்று தெரிவித்தார்.

இதற்கமைய இம் மின்சார வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு துரித கதியில் இடம்பெற்று வருகின்றது.

இதில் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள பெரியகுளம், பிரமந்தனாறு, புன்னைநீராவி என்பனவற்றிற்கும் விரைவில் மின்சார வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (6-263)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# பஞ்சத்தினால் கிடைத்த அரச பதவி

...அதன்படி நாராயணியை வழிபட்டான் சந்திரன்.

நாள்தோறும் தேவி நாராயணி அந்தக் காட்டுக்குத் தன் பணிப் பெண்களுடன் வந்து வைரவரை வழிபட்டுச் செல்வது வழக்கம்.

அதனால் தேவியின் வருகையை எதிர்பார்த்துச் சந்திரன் ஒரு மரத்தின் உச்சியில் ஏறி அமர்ந்து இருந்தான்.

தேவியோடு வந்திருந்த பணிப் பெண்களில் ஒருத்தி, மரத்தின் உச்சியில் இருந்த சந்திரனைப் பார்த்து ஆசைப்படலானாள்.

ஆனால், அதே சமயம் சந்திரனும் அவளை ஏதோ மயக்கத்தில் பார்த்தான்.

அதைக் கண்ட தேவி, சந்திரனைக் கீழே இறங்க வைத்து இவளை நீ விரும்புகிறாயா? என்று கேட்டாள்.

சந்திரன் அங்கே வந்ததன் நோக்கத்தைக்கூறி தேவி! கட்டிய மனைவி ஒருத்தி இருக்கையில் இவளை நேசிப்பது குற்றம் என்று சொன்னான்.


அவனுடைய நற்குணத்தைப் பாராட்டி, நஞ்சை முறிக்கும் மலர் ஒன்றை அவனுக்குப் பரிசு அளித்துவிட்டுச் சென்றாள் தேவி.

அதைப்பெற்றுக் கொண்டதும் சந்திரன் புறப்பட்டுச் சென்று தாரகாபுரியில் அமைச்சன் அனங்கரங்கன் இல்லத்திலேயே தங்கினான்.

என்றாலும் அங்கே தன் மகனையும் மகளையும் பார்த்தும்கூட விதி வசத்தால் சந்திரனால் அடையாளம் தெரிந்துகொள்ள இயலவில்லை.

ஒருநாள், திடீரென்று பலர் அழும் குரல் கேட்டு அதைத் தெரிந்துகொள்ள சந்திரன் அங்கே சென்றான்.

ஒரு இளைஞனின் உயிர்போகும் தறுவாயில் கிடப்பதையும் சுற்றிலும் கூட்டம்கூடி நிற்பதையும் சந்திரன் பார்த்து என்ன விவரம் என்று விசாரித்தான்.



காட்டில் தந்தையைக் காணாமல் தவித்த சிறுவனையும் சிறுமியையும் ஒரு வர்த்தகன் அழைத்து வந்ததையும் அந்தச்சிறுவனை அமைச்சன் அனங்கரங்கன் சுவீகாரம் எடுத்துக்கொண்டதையும்கூறி அவன் பாம்பு கடித்து இறந்துவிட்ட செய்தியையும் ஒருவன் தெரிவித்தான்.

அவனே தன் மகன் மகிபாலன் என்பதை அறிந்துகொண்ட சந்திரன் தன்னிடம் இருந்த நஞ்சு முறிக்கும் பூவை, அவன் மூக்கில் வைத்து நுகரச் செய்தான்.

மகிபாலன்உடனே உயிர் பெற்று எழுந்தான்!

கூடி இருந்தவர்கள் அனைவரும் வியப்படைந்தனர்.

அகமகிழ்ந்த அமைச்சன் அனங்கரங்கன் சந்திரனுக்குப் பொன்னும் பொருளும் பரிசு அளித்துக் கௌரவித்தான்.

சந்திரன் மகிபாலனையும் சந்திரமதியையும் தனிமையில் கண்டு நீங்கள் இருவரும் என் மக்கள் என்று கூறி ஊரை விட்டுப் புறப்பட்டது முதல் நடந்தவைகளைத் தெரிவித்து உங்களுடைய அதிர்ஷ்டத்தால் பெற்றோரான எங்களுக்குப் பெருமை ஏற்பட்டது.

உங்கள் தாய் நம்மைக் காணாமல் தவிப்பாள்.

அவளைத் தவிக்க விடுவது குற்றம்.

ஆகையால் உடனே போய் அவளை இங்கே அழைத்து வருவோம் என்றான்.

மகிபாலனும் சந்திரமதியும் அதற்குச் சம்மதித்தனர்.

அமைச்சனிடம் அனுமதி பெற்று மூவரும் அரச மரியாதையுடன் கமலபுரம் சென்று தாய் தேவகியைக் கண்டு மகிழ்ந்தனர்.

பின்னர் தாயுடன் எல்லோரும் தாரகாபுரிக்குத் திரும்பினர்.

தாரகாபுரி அரசனுக்கு மக்கட்பேறு இல்லாததால் மகிபாலனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டி மகிழ்ந்தான்.

(முற்றும்)

## 08.2014 08 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1509 - கிருஷ்ணதேவராயன் விஜயநகரப் பேரரசின் மன்னனாக முடிசூடினான். இவனது ஆட்சிக் காலமே பேரரசின் மிக உயர்ந்த நிலை ஆகக் கருதப்படுகிறது.
- 1768 - ஜேம்ஸ் குக் தனது கடற்பயணத்தை பிளைமவுத்திலிருந்து ஆரம்பித்தான்.
- 1863 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: டென்னசியின் இராணுவ ஆளுநர் அண்ட்ரூ ஜோன்சன் தனது தனிப்பட்ட அடிமைகளை விடுவித்தான். இந்நாள் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் டென்னசியின் ஆபிரிக்க அமெரிக்கர்களினால் விடுமுறையாகக் கொண்டாடப்பட்டது.
- 1908 - வில்பர் ரைட் தனது முதலாவது வான்பயணத்தை பிரான்சில் “லெமான்ஸ்” என்ற இடத்தில் மேற்கொணடார்.
- 1942 - இந்திய காங்கிரஸ் பம்பாயில் கூட்டிய மாநாட்டில வெள்ளையனே வெளியேறு என்னும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் ஒன்றியம ஜப்பான் மீது போரை அறிவித்து மன்சூரியா நகரினுள் ஊடுருவியது.
- 1945 - ஐ.நா சாசனம் ஐக்கிய அமெரிக்காவினால் ஏற்றுக கொள்ளப்பட்டது. ஐ.நாவில் இணைந்த மூன்றாவது நாடு இதுவாகும்.
- 1947 - பாகிஸ்தானின் தேசியக் கொடி அங்கீகாரம் பெற்றது.
- 1963 - இங்கிலாந்தில் இடம்பெற்ற பெரும் தொடருந்துக் கொள்ளையில் 15 பேரடங்கிய கொள்ளையர் குழு 2.6 மில்லியன் ஸ்டேர்லிங் பவுன் பணத்தைக் கொள்ளையடித்தது.
- 1967 - ஆசியான் அமைப்பு உருவாக்கப்பட்டது.
- 1973 - தென்கொரிய அரசியல்வாதி (பின்னர் தென் கொரிய அதிபர்) கின் டாய்-ஜுங் கடத்தப்பட்டார்.
- 1974 - வாட்டர்கேட் ஊழல்: ஐக்கிய அமெரிக்க அதிபர் ரிச்சார்ட் நிக்சன் தனது பதவியைத் துறப்பதாக அறிவித்தார்.
- 1988 - மியான்மாரில் மக்களாட்சியை வலியுறுத்தி 8888 எழுச்சி நிகழ்ந்தது.
- 1989 - ஓர் இரகசிய இராணுவ விண்வெளித் திட்டத்தை முன்னெடுத்து நாசா கொலம்பியா விண்ணோடத்தை விண்ணுக்கு அனுபபியது.
- 1990 - ஈராக் குவைத்தைக் கைப்பற்றி அதனைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது.
- 2000 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்பினரின் எச். எல். ஹன்லி என்ற நீர்மூழ்கிக் கப்பல் 136 ஆண்டுகளுக்குப் பின்னர் கடலினுளிருந்து வெளியே எடுக்கப்பட்டது.
- 2007 - நாசா விண்வெளி ஆய்வு மையம் என்டெவர் விண்ணோடத்தை கிறிஸ்டினா மெக்காலீப் என்ற ஆசிரியர் உட்பட ஏழு விண்வெளி வீரர்களுடன் அனைத்துலக விண்வெளி நிலையத்திற்கு கென்னடி விண்வெளிமையத்திலிருந்து வெற்றிகரமாகச் செலுத்தியது.

### பிறப்புகள்

- 1924 - அ. ந. கந்தசாமி, ஈழத்து முற்போக்கு எழுத்தாளர் (இ. 1968)
- 1927 - எஸ்.வரலட்சுமி, நடிகை, பாடகி (இ. 2009)
- 1941 - டிரோன் பர்னான்டோ, இலங்கை அரசியல்வாதி (இ. 2008)
- 1948 - ஸ்வெட்லானா சவீத்ஸ்கயா, ரஷ்ய விண்வெளி வீராங்கனை
- 1981 - ரொஜர் ஃபெடரர், சுவிட்சர்லாந்து டெனிஸ் வீரர்

### இறப்புகள

- 1909 - மேரி மக்கிலொப், ஆத்திரேலிய அருட்சகோதரி, புனிதர் (பி. 1842)
- 1946 - உமையாள்புரம் சுவாமிநாத ஐயர், கர்நாடக இசைக் கலைஞர் (பி. 1867)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## "சாதனை நாயகனின் சரித்திரம்"






29

...சித்து மற்றும் சச்சின் ஜோடி 101 ரன்களை சேர்த்தது. சச்சின் 57 ரன்கள் எடுத்த நிலையில் அவுட் ஆக, சித்து 97 ரன்களுடன் அடிக்கொண்டிருந்தார். இந்த ஆட்டமும் டிராவில் முடிந்தது. ஆக, நான்கு டெஸ்ட் போட்டிகளுமே டிராவில் முடிந்தன. பாகிஸ்தானை வெற்றிகொள்ள முடியாவிட்டாலும் டிராவிலாவது முடித்தோமே என்று இந்திய அணியினர் சந்தோஷப்பட்டனர்.

ரொம்ப நாட்கள் கழித்து ஸ்போர்ட்ஸ் வேர்ல்ட் பத்திரிகைக்கு இந்த நிகழ்ச்சி குறித்து சச்சின் பேட்டி அளித்தான். அப்போது செய்தியாளர் மூக்கில் அடிபட்டு ரத்தம் வழிந்தவுடன் உங்கள் மனநிலை எப்படி இருந்தது என்று கேட்டார். சச்சின் பழைய நினைவலைகளில் மூழ்கியவாறு அதற்கு பதிலளித்தான். எனது முதல் சுற்றுப் பயணத்திலேயே அம்மாதிரி நடந்ததற்காக நான் வருத்தப்படவில்லை. மாறாக மகிழ்ச்சி அடைந்தேன்.



பல நூறு ஆலோசனைகள் மற்றும் பாடங்களைவிட ஒரு நேரடி அனுபவம் நல்ல பயனைத் தரும் என்று கூறுவார்கள். அது என் வரையில் மிகவும் சரியாகவே நிரூபணம் ஆகியிருக்கிறது. வேகப்பந்து வீச்சாளரால் ஒரு பேட்ஸ்மேனுக்கு ஏற்படும் அதிகபட்ச காயம் இதுதான். அதுவும் ரத்தக் களறியுடன். இதற்குமேல் நடப்பதற்கு ஒன்றும் இல்லை என்பதால், எனக்கு இருந்த பயம் போயே போய்விட்டது. இனி எந்த வேகப்பந்து வீச்சாளரையும் தைரியத்துடன் சமாளிப்பேன். எனக்கு தன்னம்பிக்கையை வழங்கிய வாக்கர் யூனுஸுக்கு மனதார நன்றி என்றான். பைபிளில் கோலியத் மற்றும் டேவிட் என்ற சிறுகதையில் பலசாலியான கோலியத் தனது அஸ்திரங்களை வீசி சின்னஞ்சிறுவனான டேவிட்டைக் காயப்படுத்த பதிலுக்கு டேவிட் சிறிய கல்லை எடுத்து அவன்மீது வீசி அவனைத் தோற்கடித்தான் என்று வரும். வாக்கரின் பந்தால் தாக்கப்பட்டு மூக்கில் ரத்தம் வழியும் நிலையிலும், அடுத்தடுத்து வந்து பந்துகளை மைதானத்தின் நான்கு புறங்களிலும் அடித்து நொறுக்கிய சச்சினின் விளையாட்டை எண்ணும்போது பைபிளில் வரும் கோலியத்தை புறமுதுகிட்டு ஓட வைத்த டேவிட்டின் வீரம்தான் நினைவிற்கு வருகிறது.

## குழந்தையே இங்கு உனக்கு என்ன வேலை?

இந்து நாளிதழில் முதன்மை கிரிக்கெட் செய்தியாளரான மோகன் 1989 ஆம் வருடம் இந்த டெஸ்ட் மேட்ச் முடிவு பெற்ற நிலையில் தனது கட்டுரையில், சச்சின் மைதானத்தில் காட்டிய வீரம், அசாத்தியமானது. அவனைப் பற்றிப் பலர் பலவிதமாக ஆருடம் கூறி வருகின்றனர். ஆனால் அவற்றை எல்லாம் தாண்டி உலகளவில் பல சாதனைகள் செய்வான் என்று தோன்றுகிறது. தனது ரோல் மாடலாக, கவாஸ்கர், கபில் மற்றும் விவ் ரிச்சர்ட்ஸ் ஆகியோரை அவன் கருதுகிறான். ஆனால்; இவர்கள் அனைவரையும் இவன் ஓரம் கட்டிவிடுவான் என்றே தோன்றுகிறது. அவன் கிரிக்கெட்டிற்காகவே பிறந்தவன் என்று வாயார வாழ்த்தி இருக்கிறார். அந்த தீர்க்கதரிசி கூறியது எவ்வளவு தூரம் இன்று உண்மையாகியுள்ளது என்று கூறத் தேவையில்லை.

டெஸ்ட் போட்டிகள் வெற்றி, தோல்வி இன்றி முடிந்ததால் பாகிஸ்தான் அணியினர் பயங்கரக் கடுப்பில் இருந்தனர். குறிப்பாக சச்சினைக் காயப்படுத்திய பிறகும் அவன் காட்டிய தீரம் பல பத்திரிகைகளில் வெளிவந்து அவர்களை இன்னும் உசுப்பிவிட்டன.

வாக்கரிடமிருந்து வந்த பந்து எதிர்பாராத நேரத்தில் சச்சினின் மூக்கில் வந்து வேகமாகத் தாக்க சச்சின் நிலை தடுமாறினான். பலமாக அடிபட்டு மூக்கிலிருந்து ரத்தம் ஒழுக சச்சின் கீழே விழுந்தான். உதிரம் சொட்டச் சொட்ட நிற்கும் ஆட்டைச் சுற்றி ரத்த வெறி பிடித்த ஓநாய்க் கூட்டங்கள் நின்று ரசிப்பது போன்று பாகிஸ்தான் அணியினர் சச்சினைச் சுற்றி நின்றிருந்தனர். பாகிஸ்தான் ரசிகர்களோ எங்களுக்கு இந்த ரத்தம் போதாது. இன்னும் வேண்டும் என்று கூறுவதுபோல் கரகோஷம் எழுப்பி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படு த்தினர்.

**கே. ரமேஷ்** (தொடரும்)



# உங்கள் பிறந்த எண் 08 இல் கூட்டெண் 03 இன் பலன்கள்

59

### தோற்றம்

சனியுடன் குரு சேர்ந்து வரும் ஆதிக்கப் பலன். சம உயரம் இருக்கும். குருபலம் அதிகமானால் உயரம் கூடும். பொன்னிறம் அமையும். உருண்டைத் தலை உருண்டை முகம் இருக்கும். மேல் முன் பல் இரண்டு பெரிதாக இருக்கும். பற்கள் வரிசையாக இருக்கும். முகம் மலர்ச்சியாக இருக்கும். மறந்தும் சிரித்துவிட மாட்டார்.

கூனல் முதுகு, சின்னக் கழுத்து இருக்கும். மூக்கு குண்டாகப் பெரிதாக இருக்கும். முடி அடர்ந்து இருக்கும்.

### குணம்

தெய்வ பக்தி, பூசை, புனஸ்காரம் உள்ளவர். காரியம் நிறைவேற சிரித்தபடி பேசுவர். தந்திரம் அதிகமிருக்கும். பழிவாங்கிவிடுவர்.

நேரடியாகச் சண்டை பிடிக்காமல் பிறரை நமக்கெதிராகத் தூண்டிவிடுவர். பொதுவாக நல்லவர். வல்லமையும் உள்ளவரே. நீதி நேர்மை எல்லாம் ஓரளவு வரை இவரால் பார்க்கலாம். நாணயமாகவே நடப்பர். சுயநலம் குறைபட்டால் வேறு மாதிரி ஆகிவிடுவர். குடும்பப் பாசம், காதல், மொழி, இனப்பற்று இருக்கும்.

வெற்றிவரச் சரியாகத் திட்டமிட்டுக் காரியத்தை இரவு பகல் பாராமல் செய்து முடிப்பர். வாக்குக் கொடுத்தால் காப்பாற்றாமல் விடமாட்டார். மொழிக்காக, தேச நலனுக்காக இன முன்னேற்றத்திற்காகப் போராடுவர். கடுமையாக உழைப்பர்.

நன்கு கருத்துக்களைப் பிரசாரம் செய்வர். ஆன்மிகத்திற்காகப் பேசி வேலை செய்வர். புது அமைப்புகளைத் தொடங்குவர்.

பிறருக்கு உதவுவர். தம் புகழுக்கும் ஆசைப்படுவர். விரைந்து முன்னேறும் இவர்களுக்கு முட்டுக்கட்டை உண்டு. வெற்றி பெறுவர். நிர்வாகம் சீராக நடைபெறக் கோபத்தை பயன்படுத்துவர்.

தாங்களே தங்களுக்கு சிரமம் வரும்படி நடப்பர். அதிகம் பேசமாட்டார். பொதுநன்மைக்காகச் சிலர் சிரமப்பட்டாலும் பரவாயில்லை எனப் பலர் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் திட்டங்களைப் போட்டு நடைமுறைக்குக்கொண்டு வருவர்.

விரோதிகளுண்டு. விபத்துக்களும் உண்டு. தந்திரமாக அவற்றைச் சமாளிப்பர். மீண்டெழுந்து தோல்வியைக் கூட வெற்றியாக மாற்றிக் கொள்ளுவர்.

காரிய வெற்றிக்காகக் கடவுளைத் தொழுவர். இடையூறு செய்பவரைக் கூர்மையான சொற்களால் சுட்டெரிப்பர். சகோதரருடன் ஒற்றுமை இராது.

### குடும்பம்

தொடக்கத்தில் பல சங்கடங்களைச் சந்திப்பர். அழகாக இருக்கும் இவர்களுக்குக் குடும்பத்திலேயே விரோதிகளிருப்பர். வறுமையும் சிக்கலாயிருந்திருக்கும். காதல் துக்கமிருக்கும்.

மனைவி சரியாக அமைய மாட்டார். மணமாகியும் ஆகாத நிலை வாட்டும். எப்படியும் திருமண வாழ்க்கை நல்ல சுகம் தராது.

வாரிசு பிறந்தாலும் விரோதம் கொண்டு பிரிந்து போவர். உடனிருந்தால் சொன்னபடி கேட்காமல் தகராறு செய்வர்.

மனைவி எதிலும் ஏமாற்றுவாள். இவர்களால் குடும்பத் துடன் ஒத்துப் போக முடியாது. குடும்ப வாழ்க்கை மனவேதனையே தரும்.

### தொழில்

நல்ல கல்வியை எப்படியாவது கற்றுவிடும் இவர்கள் சுயமாகவே தொழிலைத் தேடிக் கொள்வர். ஆசிரியராக, பேராசிரியராக, என்ஜினியராக, அரசாங்க அதிகாரிகளாகக்கூடப் பணிபுரிவர். மோட்டார் தொழிற்சாலை, பாடப் புத்தகத் தயாரிப்பு நிறுவனம் அறநிலையத்துறை, ஆலயங்கள், மடங்கள் சார்ந்த பணிகளில் இருப்பர். யோக ஆசிரியராகலாம். பேச்சை மூலதனமாகக்கொண்ட அரசியலில் அசெம்பிளி பார்லிமென்ட்டில் உறுப்பினராக இருப்பர். வக்கீலாக இருப்பர்.

கட்டடக் காண்ட்டாக்டர், பொன் வேலை செய்பவர், தங்க நகைக்கடை முதலாளி என்றிருப்பர். வட்டிக்குத் தந்து வாங்குவர்.

### நோய்

தொண்டை, தோல் பாதிக்கப்படும். காலில் எக்சிமா வரும். வயிற்றில் அமிலத் தொல்லை, அஜீரணம் இருக்கும். பித்த வாந்தி, மலேரியா காய்ச்சல் உண்டாகும். அடிதடியில் காயம் படலாம். விபத்தில் சிக்கலாம். வாத பாதிப்பு ஏற்படும். வலிகள் தலைவலி படுத்தும். சொறி ஏற்படலாம். கபத் தொல்லையால் மூச்சுக் கோளாறு, மூச்சுப் பை பாதிப்பு ஏற்படும்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## யாழ். குடாநாட்டில் கடல் பாம்புகளின் பல்வகைமை

பாம்புகள் அனைத்தும் ஊர்வன (Reptiles) வகுப்பைச் சேர்ந்தனவாகும். அவற்றின் வாழிடத்தின் அடிப்படையில் பிரதானமாக இருவகைப்படுத்தலாம், தரை வாழ்க்கைக்குரியவை, நீர்வாழ்க்கைக்குரியவை. நீர்ப்பாம்புகளின் பல்வகைமை நன்னீர் தொடக்கம் சமுத்திரங்கள் வரை காணப்படுகின்றன. நீர் நிலைகள் சார்ந்து வாழ்கின்ற பாம்பு இனங்களை பிரதானமாக பின்வரும் முறையில் பிரித்துக் கொள்ளலாம். அவையாவன:

File snake (Family: Acrochordidae).Mud snake (Family: Colubridae, Subfamily: Homalopsinae), Water snake (Family: Colubridae, Subfamily: Natricinae), Seakraits (Family: Laticaudidae), Seasnakes (Family:Hydrophiidae) இவற்றில் கடல் நீரிலும், கடல் சார்ந்த சூழற்தொகுதியிலும் வாழ்வன Mudsnake, File snake, Sea kraits மற்றும் Sea snakes என்பவை யாகும்.




படம்:-1 உலகளாவிய ரீதியில் கடல் பாம்புகளின் பரம்பல்

File Snake, கடல்நீர் ஏரிகள் (Lagoon), கழிமுகங்கள் (Estuaries) போன்ற உவர்தன்மை குறைந்த பகுதிகளில் காணபடுகின்றன. இவை ஆதியான இனங்களாக கருதப்படுகின்றன. இதேபோல் Mud snake கும் கடல் சார்ந்த கழிமுகம், கண்டல் சூழற் தொகுதிகளில் காணப்படுகின்றன. ஏனைய இருவகைகளும் கடல், சமுத்திரங்களில் காணப்படுகின்றன.

இலங்கையில் 19 வகையான கடல் சார்ந்த பாம்பு இனங்கள் காணப்படுகின்றன, இவை பின்வரும் பிரிவுகளில் உள்ளடக்கப்படுகின்றன,1 Acrochoridid, 2 Homalopsids, 16 Elapids (15Hydrophiinae, 1 Laticauda.)

இவற்றுள் யாழ்குடாநாட்டின் கடற்பரப்பில் Acrochordid குடும்பத்தைச் சேர்ந்த Acrochordus granulatus என்ற பாம்பு இனம் யாழ்கடல் நீர் ஏரிப் பகுதியில் வாழ்வதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவை நச்சுத்தன்மை அற்ற பாம்பு இனம் ஆகும். அத்துடன் இவற்றினைப் பாதுகாப்பது அவசியமான ஒன்றாக கருதப்படுகின்றது. Hydrophiidae குடும்பத்தைச் சேர்ந்த 8 வகையான பாம்பு இனங்கள் யாழ்குடாநாட்டைச் சூழ உள்ள கடற்பரப்பில் காணப்படுவதாக யாழ் பல்கலைக்கழக விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அபிராமி சிவரூபனால் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவையாவன,


1. Hydrophis cyanocinctus
2. Hydrophis fasciatus fasciatus
3. Hydrophis gracilis
4. Hydrophis lapemoides
5. Hydrophis spiralis
6. kerilia jerdonii jerdonii
7. Lapemis curtus
8. Thalassophina viperina



*Hydrophis spiralis*

இவற்றுள் மிகப்பெரிய பாம்பு இனம் Hydrophis spiralis ஆகும். அதேபோல் சிறிய இனம் Thalassophina viperina இவற்றுள் Hydrophis fasciatus fasciatus பாம்பு இனம் பருத்தித்துறை கடற்பரப்பில் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவை இலங்கையின் வடபகுதிக் கடற்பரப்பில் மட்டும் இருப்பதாக நம்பப்படுகின்றது. நாட்டின் ஏனைய கடற்பகுதிகளில் இது வரை அறியப்படவில்லை.

எமது கள ஆய்வின் போது வடமராட்சி கடற்பரப்பில் மேலதிகமாக Hydrophis ornatus எனும் கடற்பாம்பு இனம் காணப்படுவதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. Hydrophiidae குடும்பத்தைச் சேர்ந்த இப் பாம்பு இனங்களே உண்மையான கடற்பாம்புகள் (True Sea Snakes) என அழைக்கப்படுகின்றன. இவை தமது வாழ்க்கையின் முழுப் பகுதியையும் கடலிலேயே கழிக்கின்றன. ஆனால் Family: Laticaudidae ஐ சேர்ந்தவை தமது இனப்பெருக்கத்திற்காக தரைப் பகுதிக்கு வருகின்றன. இக் கட்டுரை உண்மை




a-விலாங்கு மீன்
b-கடற்பாம்பு
c-தரைப்பாம்பு

யான கடற்பாம்புகளைப் பற்றியே பகிரவுள்ளது.

இவை உலகின் Trophical, Subtrophical கடற்பரப்புக்களிலேயே காணப்படுகின்றன. இந்து, பசுபிக் சமுத்திரத்தில் ஆபிரிக்காவின் கிழக்கு கடற்பரப்பு தொடக்கம் Gulf of Panama வரை காணப்படுகின்றது. அதிகமான இனங்கள் மலேசியா, சீனா, இந்தோனேசியா, அவுஸ்ரேலியாவின் கடற்பரப்புக்களில் காணப்படுகின்றன.

உண்மையான கடற்பாம்புகளை அவற்றின் வாற்பகுதியின் கட்டமைப்பு மூலம் இலகுவாக ஏனைய நீர் பாம்புகளில் இருந்து வேறு பிரித்து அறிந்து கொள்ள முடியும். பெரும்பாலான இடங்களில் உள்ள மீனவர்கள் மத்தியில் கடற்பாம்புகளை விலாங்கு (Eel fish) இல் இருந்து வேறுபடுத்தி அறிய முடியாத நிலமை காணப்படுகின்றது. இருப்பினும் வடமராட்சி, வடமராட்சி கிழக்கு பகுதியில் உள்ள மீனவர்களில் பெரும்பாலானோர் கடற்பாம்புகள் பற்றி போதிய அறிவினைக் கொண்டுள்ளமை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. கடற்பாம்புகளின் வாற்பகுதி பக்கவாட்டில் தட்டையாக்கப்பட்ட Paddle போன்ற அமைப்புடையது. இது அவை கடல் நீரில் நீந்துவதற்கு வாய்ப்பாகவுள்ளது.

பொதுவாக நீர்வாழ்க்கைக்குரியவை பூக்கள் (Gills) எனப்படும் ஒரு உறுப்பை நீரில் கரைந்துள்ள ஒட்சிசனைச் சுவாசிப்பதற்கு பயன்படுத்துகின்றன. பெரும்பாலான மீன் இனங்கள் பூக்களேயே தமது சுவாச அங்கமாக கொண்டுள்ளன. ஆனால் கடற்பாம்புகளில் சுவாச அங்கமாக பூக்களிற்கு பதிலாக நுரையீரலே காணப்படுகின்றது ஏனெனில் இவை வளிமண்டல ஒட்சிசனையே பிரதானமாக சுவாசிக்கின்றன. இதற்காக இவை கடல்நீரின் மேற்பகுதிக்கு வருகின்றன. ஒரு முறை சுவாசித்ததிற்கு பின்னர் அவை 30 நிமிடம் தொடக்கம் 2 மணித்தியாலங்கள் வரை நீரினுள் இருக்கக் கூடிய தன்மையைக் கொண்டுள்ளன.


இதற்காக அவற்றின் நுரையீரல் விசேட கட்டமைப்பினைக் கொண்டுள்ளது. இவற்றின் நுரையீரல்கள் நீளமானதாகவும், உருளை வடிவானதாகவும் காணப்படுவதுடன் அவற்றின் உடலின் முழு நீளம் வரை நீண்டு காணப்படும். அத்துடன் அவற்றின் தோலின் மூலம் நீரில் கரைந்துள்ள ஒட்சிசனை சுவாசிப்பதோடு $CO_2$ இனையும் தோலின் மூலமே வெளியேற்றுகின்றன. இவற்றின் மூக்குத் துவாரத்தில் (Nostril) வால்புகள் (Valves) உள்நோக்கிய வண்ணம் காணப்படுகின்றது. இது நீரானது மூக்குத்துவாரத்தின் ஊடாக உள்நோக்கி செல்வதை தடுக்கின்றது. இவை நீரின் மேற்பரப்பில் இருந்து 300 அடி ஆழம்வரை நீரினுள் செல்லக் கூடிய இயல்பினைக் கொண்டுள்ளன.

அதிகமான உப்பு உள்ளெடுக்கப்படுவதை தவிர்ப்பதற்காக Salt Excreting gland இனையும் நாக்கின் கீழ்பகுதியில் Sublingual gland இனையும் கடற்பாம்புகள் கொண்டுள்ளன.

கடற்பாம்புகள் பொதுவாக 2 தொடக்கம் 6 வார காலப்பகுதிக்கு ஒரு முறை தனது தோல்களை கழற்றுகின்றன. இது தரைப் பாம்புகளுடன் ஒப்பிடும் போது அதிக தடவைகள் எனக் கருதப்படுகின்றது. தரைப் பாம்புகளைப் போல் தோல் கழற்றுவதற்கு கடினமான பொருட்களையே பயன்படுத்துகின்றன. பொதுவாக முருகைக்கற்பாறைகளை தோல் கழற்றுவதற்கு கடற்பாம்புகள் பயன்படுத்துகின்றன. கடற்பாம்புகளின் தோலில் அல்காக்கள் Barnacles, Broyozones எனப்படும் சில அங்கிகள் இணைந்து காணப்படுகின்றன. இவற்றிற்கு இடையிலான தொடர்பு ஒட்டுண்ணித் தொடர்பா அல்லது ஒன்றிய வாழ்வுத் தொடர்பா என இதுவரை சரியாக அறியப்படவில்லை. இருப்பினும் இவை உடலில் இருப்பது பாம்புகளின் இடப்பெயர்ச்சியினை கடினமாக்குகின்றன. தோல் கழற்றும் செயன் முறையில் தோலுடன் சேர்ந்து இவையும் விடுவிக்கப்படுவது ஒரு நன்மைக்குரிய விடயமாகும். இருப்பினும் இவ் அங்கிகள் பாம்பின் உடலில் இருப்பதால், பாம்புகள் தமது உடலை சூழலுடன் மறைத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இது தம்மை தமது எதிரியில் இருந்து பாதுகாத்துக் கொள்ளவும், தமது உணவு வேட்டைக்கும் உதவுகின்றது.

பெரும்பாலான இனங்கள் 120 தொடக்கம் 150cm வரை வளரக்கூடியனவாகும்.Hydrophis spiralis அதிகப்படியாக 3m வரை வளரக் கூடியதாகும். கடற்பாம்புகளின் நிற அமைப்பு இனத்துக்கு இனம் வேறுபட்டது ஆகும். பொதுவாக கறுப்பு, மண்ணிறம் கலந்த நிறஅமைப்பு, சாம்பல், மஞ்சள் நிற அமைப்பில் காணப்படும். மெல்லிய நிறமுடைய பட்டிகளும் கருமை நிறமுடைய பட்டிகளும் மாறி மாறி அமைந்து காணப்படும்.

தரைப்பாம்புகளின் வயிற்றுப்புறச் செதி



*Thalassophina viperina*

ல்கள் (Ventral Scales) அகலமானதாக காணப்படும். இடப்பெயர்ச்சியின் போது இது அவற்றினை உராய்வில் இருந்து பாதுகாக்கின்றது. ஆனால் கடற்பாம்புகளில் வயிற்றுப் புறச் செதில்களின் தேவை இல்லாததால் அவை ஒடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் சில இனங்களில் வாழ்விட அமைப்பிற்கேற்ப சில மாறுபட்ட அமைப்புக்கள் வயிற்றுப்புறச் செதில்களில் காணப்படுகின்றன. Lape mis curtus இல் வயிற்றுப்புறச் செதில்களில் முள்போன்ற அமைப்பு காணப்படுகின்றது. இதன் மூலம் அவை கடினமான பாறைகள் நிறைந்த வாழிடத்தில் வாழ்கின்றன என்பதை ஊகித்து அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். இதேபோல் Thala ssophina viperina இல் கிட்டத்தட்ட உடலின் முன் அரைப்பகுதியில் அகலமான வயிற்றுப் புறச் செதில்கள் காணப்படுகின்றது.

(தொடரும்...)

புஸ்பலிங்கம் சுரேந்தர்
Demonstrator
விலங்கியல் துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 115

ஓசோன் மண்டலம் அழிவடைதல் தொடர்பாக முதன்முதலில் எந்த வருடத்தில் "nature" சஞ்சிகையில் அறிக்கையிடப்பட்டது?

**புதிர் 115 இற்கான விடைகளை 18.08,2014 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

திரு.க.கஜபதி
ஆசிரியர் பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர், விலங்கியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
P.D.BOX 57, திருநெல்வேலி.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக தாவரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.A.C.தவரஞ்சித்திடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி
யாழ். பல்கலைக்கழகம்

**புதிர் 114 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கே.இராஜகோபால், அடைக்கலம் தோட்டம், கந்தசாமி கோவிலடி, வட்டுக்கோட்டை.

**புதிர் 114 க்கான கேள்வியும் விடையும்:**

மனிதத் தொகுதிச் சுற்றோட்டம் பற்றி முதலில் முழுமையான விளக்கம் அளித்தவர் யார்?

William Harvey

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 115

சரியான விடை:-..............................
முழுப்பெயர்:-..............................
முகவரி:-..............................
தொ.பே. இல:..............................
கையொப்பம்:..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.வின் கோரிக்கையை உதாசீனம் செய்தது அரசு

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான முகவர நிறுவனம் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் உதாசீனம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இலங்கையில் அடைக்கலம் பெற்றுக்கொண்டுள்ள பாகிஸ்தானிய புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்த வேண்டாம் என இலங்கை அரசாங்கத்திடம், ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் கோரியிருந்தது.

எனினும், இந்தக் கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்து 36 பாகிஸ்தானிய புகலிடக் கோரிக்கையாளர்களை இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களம் நாடு கடத்தியுள்ளது.

இரண்டு மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் அண்மையில் நாடு கடத்தப்பட்டனர்.

நாடு கடத்தப்பட்ட பாகிஸ்தானியர்களில் அதிகமானவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்தின் பேச்சாளர் அரியேன் ரமொரி தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், இவர்களின் நிலைமை குறித்து கண்காணிக்கப்படக் கூடிய சாத்தியங்கள் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் புகலிடக் கோரிக்கையாளர்களின் நிலைமை ஆபத்தானதாகவே காணப்படுகின்றது என தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்ந்தும் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாகவும், புகலிடக் கோரிக்கையாளர்களை பராமரிப்பதில் சிரமங்கள் நிலவி வருவதாகவும் இலங்கை அரசாங்கம் அண்மையில் தெரிவித்திருந்தது. (6)

# இனவாதத்துடன் செயற்படும் மத்திய கல்வி அமைச்சு

## அரசுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் பிரபா கணேசன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மஹிந்தோதய திட்டத்தின் மூலம் வெளிநாடுகளில் பின்பற்றப்படும் தொழில்நுட்பவியல் ஆய்வுகூட கல்வி முறைமையில்மேல்மாகாண தமிழ் பாடசாலைகளுக்கு இடமளிக்காமல் மத்திய கல்வியமைச்சு இனவாதத்துடன் செயற்படுகின்றது. இது சம்பந்தமாக மத்திய கல்வியமைச்சர் பந்துல குண வர்தவுடன் கடிதம் மூலமும் நேரடியாகவும் எனது கண்டனத்தை தெரிவித்த போதும், வேறு நோக்கங்களை முன்வைத்து தனது இனவாதத்தை வெளிப்படுத்துகின்றார் என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்து இணைந்திருப்பது கொழும்பு மாவட்ட தமிழ் பாடசாலைகளின் நலனைக் கருத்திற் கொண்டேயாகும். அதேபோல் பொருளாதார அபி விருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மூலமாக கொழு ம்பு மாவட்ட அபி விருத்தி குழு இணைத் தலைவர் என்ற முறையில் பல கோடி ரூபாய்களைப் பெற்று பல பாடசாலைகளை முழுமையான முறையிலே அபிவிருத்தி செய்து வருகின்றேன். இவ் ஆண்டிற்கு மட்டும் ஐந்து கோடி ரூபாய்க்கும் அதிகமான நிதியினை பெற்று பாடசாலைகளுக்கு ஒதுக்கியுள்ளேன்.

ஆனால், புதிய வெளிநாட்டு கல்வி முறைமைக்கமைய மஹிந்தோதய திட்டத்தின் கீழ் தொழில்நுட்பவியல் ஆய்வுக்கூடங்கள் பாடசாலைகளில் அமைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இது வெறுமனே க.பொ.த உயர்தர கல்வியல்ல. மாறாக இந்த திட்டத்தின் உள்ளார்த்தங்களை தமிழ் கல்வி ஆர்வலர்களும், கல்வி சமூகமும் ஊடகவியலாளர்களும் புரிந்து கொள்ள வேண்டும். இந்த புதிய கல்வி முறைமையானது உயர்தர கல்வியிலே சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்ல முடியாதவர்களுக்காகவும் க.பொ. த சாதாரண தரத்தில் சித்தியடைந்து விட்டு நேரடியாக இந்த தொழில்நுட்ப கல்வி திட்டத்திற்குள் தம்மை இணைத்துக் கொள்பவர்களுக்காகவும் உருவாக்கப்பட்டதாகும்.

இன்று பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய பட்டதாரிகள் பலர் வேலைவாய்ப்பின்றி இருக்கின்றார்கள். இப்படியான ஒரு நிலைமை மாற்றியமைக்கப்படுவதற்காகத்தான் இந்த புதிய தொழில்நுட்ப ஆய்வுக்கூடங்கள் பாடசாலை மட்டத்திலே ஆரம்பிக்கப்படவுள்ளன.

1970களில் பல்கலைக் கழகங்களுக்கு தமிழ் மக்கள் அதிகமாக தெரிவு செய்யப்படுகிறார்கள் என்பதற்காக பிரதேச ரீதியான வெட்டுப் புள்ளி முறையைக் கொணடு வந்து க.பொ.த உயர் தரத்தில் திறமை சித்தியடைந்த வடக்கு மாணவர்களுக்கு இடமளிக்காது செய்தனர். இதனால்தான் அன்று இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி போராட வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

அதே போன்றுதான் இன்று நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் புதிய தொழில்நுட்ப ஆய்வுகூட முறைமையில் தமிழ், முஸ்லிம் மாணவர்களை ஓரங்கட்டுவதற்கான அடிமட்ட சதி நடந்து வருகின்றது. நாடு முழுவதிலும் மொத்தம் 225 பாடசாலைகள் இதற்கு தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றன.

இப்பாடசாலைகளில் தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் அமைக் கப்படுவதற்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இது சிறியரக பல்கலைக்கழகத்திற்கு ஒப்பானதாகும என அவர் தெரிவித்தார். (6)

## வடமாகாணத்தில் கடும் வரட்சியால் 67151 குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன



வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக 67 ஆயிரத்து 151 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபர்கள் மற்றும் இடர் முகாமைத்துவ நிலையத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


மன்னார் மாவட்டத்தில் 20 ஆயிரத்து 928 குடும்பங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 16 ஆயிரம் குடும்பங்களும், வவுனியா மாவட்டத்தில் 6 ஆயிரம் குடும்பங்களும் வறட்சி காரணமாக குடிநீரை பெற முடியாது கஷ்டங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 30 ஆயிரத்து 223 குடும்பங்கள் குடிநீரை பெறுவதில் கஷ்டங்களை எதிர் நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் மாத்திரமல்லாது, கிழக்கு மற்றும் தெற்கிலும் கடும் வறட்சியான காலநிலை நிலவுகிறது.

இதனால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் குடி நீர் இன்றி அவதிக்குள்ளாகியுள்ளனர். (6)

# ஜே.வி.பியினர் கைவிட்டதை முதலாம் முன்னணி தொடரும்



இலங்கையின் அரசியலில் தசாப்த காலத்திற்கு மேலாக ஜனநாயகம் மற்றும் சுதந்திரம் தொடர்பில் பாரதூரமான பிரச்சினைகள் இருந்து வருவதாக முதலாம் முன்னணி என்ற அமைப்பின் நடவடிக்கை குழுவின் உறுப்பினர் கெலும் அமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஜே.வி.பி ஆரம்பித்த போராட்டத்தை அவர்கள் இடையில் கைவிட்டு விட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.


இலங்கையின் அரசியலில் இல்லாது போயுள்ள ஜனநாயகம் மற்றும் மனித சுதந்திரத்தை மீண்டும் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக மக்களை அணி திரட்டும் நோக்கில் இந்த முதலாம் முன்னணி அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

முதலாம் முன்னணியின் செயற்பாடுகள் குறித்து எதிர் வரும் 15 ஆம் திகதி நடைபெறும் அமைப்பின் அறிமுகத்திற்கான முதலாவது கூட்டத்தில் வெளியிடப்படும் எனவும் கெலும் அமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில், முன்னாள் மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சரும் ஜே.வி.பியின் முன்னாள் அரசியல் சபை உறுப்பினருமான சந்திர சேன விஜேசிங்க, சட்டத்தரணி நந்த முருத் தெட்டுவேகம ஆகியோர் கலந்து கொண்டனர். (6)

# அழுத்தங்களை கொடுத்து தண்ணீர் பெற்ற ஆளும் தரப்பு

## மக்கள் கடும் அவதி



(கொழும்பு)

கொழும்பில் நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டிருந்த நேரத்தில் பிரதியமைச்சர் நிருபமா ராஜபக்ஷ தனக்கு மூன்று பவுசர் தண்ணீரை வழங்குமாறு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு அழுத்தம் கொடுத்துள்ளார்.

நிருபமா ராஜபக்ஷ, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உறவு முறை சகோதரியாவார்.

அதேவேளை நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மாளிகாகந்த நடவடிக்கை அலுவலகத்தை தொலைபேசியில் தொடர்பு கொண்ட பிரதமர் டி.எம். ஜயரத்னவின் மகள் திலினி ஜயரட்ன, அவசரமான தண்ணீர் பவுசர் ஒன்றை வழங்குமாறு அழுத்தம் கொடுத்துள்ளார்.

பிரதமரின் மகளுக்கு தண்ணீர் விநியோகிக்குமாறு சபையின் தலைவர் உத்தரவிட்டார்.

இதனடிப்படையில் 5 ஆயிரம் லீற்றர்கொள்ளளவு கொண்ட தண்ணீர் பவுசர் கொழும்பு கிருளபனை பொல்லயாங்கொட பிரதேசத்தில் உள்ள பிரதமரின் மகளது வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட தண்ணீர் இரவு 10.30 முதல் அதிகாலை 2 மணி வரை வீட்டின் மூன்றாவது மாடியில் உள்ள நீச்சல் குளத்தில் நிரப்பப்பட்டது.

இதன் காரணமாக தண்ணர் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தண்ணரை விநியோகிக்க தேவையான பவுசர்கள் மற்றும் ஊழியர்கள் இன்றி நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை பெரும் சிரமங்களை எதிர்நோக்கியதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

# வரலட்சுமி விரதம்

யாழ்.புன்னாலைக்கட்டுவன் தெற்கு மத்தாளோடை கருமாரி அம்மன் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 03 மணிக்கு வரலட்சுமி காப்பு கட்டும் வைபவம் இடம் பெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

இதில் அனைவரும் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (6)

# கூட்டுத்தாபனம் முன்னிலை

இலங்கையின் அரசத்துறையில் 2013 ஆம் ஆண்டு பாரிய நட்டங்கள் அடைந்த நிறுவனங்களாக பெற்றோலிய கூட்டுத்தாபனம், மிஹின் எயார், இலங்கை மன்பிடி கூட்டுத்தாபனம் எனபன வெளிப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளன.

அரச நிறுவனங்களுக்கு இடையிலான நாடாளுமன்றக்குழு (கோப்) இடைக்கால அறிக்கையில் இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.


இதன்படி பெற்றோலிய கூட்டுத்தாபனம் 2013 ஆம் ஆண்டில் 6.3 பில்லியன் ரூபாய்கள் நட்டமடைந்தது என்று அறிக்கையை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த கோப் குழுவின் தலைவர் அமைச்சர் டியு குணசேகர தெரிவித்தார்.

இதேபோன்றே மிஹின் எயார் மற்றும் மீன்பிடி கூட்டுத்தாபனம் என்பனவும் பில்லியன் ரூபாய்களில் நட்டம் அடைந்துள்ளதாக அமைச்சர் கூறினார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனை ராஜீவ் - ராஜீவை பிரபாகரன் யார் யாரை ஏமாற்றியது? உண்மை எது?

ஜூனியர் விகடன்



ராஜீவ் காந்தி, கள்ளம், கபடம் இன்றி பிரபாகரனை நம்பினார். ஆனால், பிரபாகரன், ராஜீவ் காந்தி உள்பட அனைவரையுமே ஏமாற்றி விட்டார் என முன்னாள் மத்திய அமைச்சர் நட்வர் சிங் தனது சுய சரிதையான one life is not enough என்ற புத்தகத்தில் கூறியுள்ளார்.

பிரபாகரனை ராஜீவ் காந்தி ஏமாற்றினாரா? அல்லது ராஜீவ் காந்தியை பிரபாகரன் ஏமாற்றினாரா? எது உண்மை?

விமானப்படையைச் சேர்ந்த உலங்கு வானூர்தியை அனுப்பி பிரபாகரனையும் அவரது தோழர்களையும் தில்லிக்கு வரவழைத்தார் பிரதமர் ராஜீவ் காந்தி. ஆனால், இலங்கைத் தூதுவராக இருந்த தீட்சித், புலனாய்வுத் துறையின் தலைவர் எம்.கே.நாராயணன் மற்றும் பல உயர் அதிகாரிகள் பிரபாகரனைச் சந்தித்து இலங்கையுடன் இந்தியா செய்து கொள்ளப்போகும் உடன்பாட்டினை ஏற்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். ஒரு கட்டத்தில் மிரட்டினார்கள். பிறகு தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களை தில்லிக்கு வரவழைத்து பிரபாகரனுடன் பேசும்படி செய்தார்கள்.

இந்திய- இலங்கை உடன்பாட்டினை ஏற்றுக்கொள்ள மறுப்பதன் காரணத்தை எம்.ஜி.ஆர் கேட்டார். பிரபாகரனும் பாலசிங்கமும் அதற்குத் தக்க பதில் கூறினார்கள். அதற்குப் பிறகு பிரபாகரன் எத்தகைய முடிபு எடுக்கிறாரோ, அதற்கு தனது முழு ஆதரவும் இருக்கும் என்று கூறினார். அதன் பின்னர் ஜூலை 28 ஆம் திகதி நள்ளிரவு பிரபாகரனையும் பாலசிங்கத்தையும் பிரதமர் ராஜீவ் சந்தித்தார். உடன்பாட்டை ஏற்றுக்கொள்ள மறுப்பதாக அறிந்தேன். அதில் உள்ள குறைபாடுகள் குறித்து எனக்கு விவரமாகக் கூறுவீர்களா? என்று கேட்டார்.

ஒற்றையாட்சி அரசியல் அமைப்பைக் கொண்டிருக்கிற இலங்கையில் இந்த உடன்பாட்டின்படி அதிகாரப் பகிர்வு செய்வது என்பது இயலாத காரியம். மேலும் மாகாண சபைக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் மிகவும் குறைவானது. இந்த உடன்பாடு தமிழ் மக்களின் நலனுக்கு எதிரானது என்றார் பாலசிங்கம். அதற்கு ராஜீவ் காந்தி உங்கள் நிலைப்பாடு எனக்கு நன்றாகப் புரிகிறது. இந்த உடன்பாட்டை நீங்கள் ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை. ஆனால், இந்த உடன்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமலிருந்தால் போதும் என்றார்.

இறுதியாக வடகிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாக ஆட்சி நிறுவப்பட்டு அதில் விடுதலைப் புலிகளுக்குப் பெரும்பான்மை பிரதிநிதித்துவம் வழங்குவது என முடிபு செய்யப்பட்டது. இடைக்கால ஆட்சியின் அதிகாரம் செயற்பாடு போன்ற விடயங்களை ஜெயவர்த்தனவுடன் பேசி முடிபு காண்பதாக ராஜீவ் உறுதி அளித்தார்.

தமிழர்களின் பாரம்பரிய நிலத்தில் சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்பட வேண்டும் என்றும் தமிழப் பகுதிகளில் சிங்கள அரசு காவற்றுறை நிலையங்களைத் திறக்கக்கூடாது என்றும் பிரபாகரன் கூறினார். அதற்கு ராஜீவ் காந்தி இணக்கம் தெரிவித்தார். ஆயுதங்கள் ஒப்படைப்புப் பற்றிய பிரச்சினையில் சிறிதளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் ஒப்படைத்தால் போதுமென ராஜீவ் கூறினார்.

இந்தப் பேச்சு முடிவடைந்த நேரத்தில் அருகே இருந்த தமிழக அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரனிடம் பாலசிங்கம், ராஜீவ் காந்தி- பிரபாகரன் உடன்பாடு பற்றி இங்கு பேசப்பட்டது. பிரதமரும் பல வாக்குறுதிகள் அளித்திருக்கிறார். இவை அனைத்தையும் எழுத்தில் வரைந்து இரு தலைவர்களிடம் இருந்தும் கையெப்பம் பெற்றால் நல்லது. அது இந்த இரகசிய உடன்பாட்டுக்கு வலிமை சேர்க்கும் எனக் கூறினார். இதற்குப் பதிலளித்த ராஜீவ், நீங்கள் எதற்கும் கவலைகொள்ளத் தேவையில்லை. கொடுத்த வாக்குறுதிகளை நான் நிச்சயமாக நிறைவேற்றி வைப்பேன். இது எழுதப்படாத உடன்பாடாக இருக்கட்டும் என ராஜீவ் கூறி



னார். அதற்குப் பின்னர் விடுதலைப் புலிகளின் தியாகம் பெரிது. அவர்களின் தியாகம் இல்லாவிட்டால் ஜெயவர்த்தன இந்த உடன்பாட்டுக்கு வந்திருக்கவே மாட்டார் என்பதை நான் நன்கு உணர்ந்திருக்கிறேன் என்று கூறினார். இவ்வாறெல்லாம் கூறிய ராஜீவ் காந்தி, ஜெயவர்த்தனவுடன் உடன்பாடு செய்துகொண்டார். அந்த உடன்பாட்டில் சொல்லப்பட்டவற்றை நிறைவேற்றுவதற்கு ஜெயவர்த்தன மறுத்தபோது அவரைத் தட்டிக்கேட்கவில்லை.

1.பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட்ட தமிழர்களை விடுதலை செய்யவில்லை.

2.வடகிழக்கு மாநிலங்களில் சிங்களக் குடியேற்றங்களை நிறுத்தவில்லை. இடைக்கால அரசு அமைந்த பிறகே, பொலிஸ் நிலையங்கள் திறக்கப்பட வேண்டும் என்பது மீறப்பட்டு பொலிஸ் நிலையங்கள் திறக்கப்பட்டன.

3.சிங்கள ஊர்க்காவல் படையிடமிருந்து ஆயுதங்களைத் திரும்பப் பெறவில்லை.

உடன்பாட்டிலுள்ள மேற்கொண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற ஜெயவர்த்தன மறுத்தபோது திலீபன் சாகும் வரை உண்ணா நோன்பு போராட்டத்தைத் தொடங்கினார். சிங்கள அரசு செய்யத் தவறியவற்றை உடனே நிறைவேற்றுமாறு இந்திய அரசு வற்புறுத்த வேண்டும் என்றுதான் அவர் கேட்டார். ஆனால், பிரதமர் ராஜீவ் காந்தி வாயைத் திறக்கவில்லை. இதன் பின்[illegible] திலீபன் உயிரைத் தியாகம் செய்ய நேரிட்டது. சென்னையிலுள்ள தங்கள் அலுவலகத்தைக் காலி செய்து, அங்கிருந்த ஆவணங்களை எடுத்து வருவதற்காக இந்திய இராணுவத் தளபதியின் அனுமதி பெற்று புலேந்திரன், குமரப்பா உட்பட 17 பேர் சென்ற படகை நடுக்கடலில் 1987 ஆம் ஆண்டு அக்டோபர் 3 ஆம் திகதி மறித்து சிங்களக் கடற்படை அவர்களைக் கைது செய்தது.

ஆனால், யாழ்ப்பாணத்தில் இருந்த அமைதிப் படையின் தளபதி மேஜர் ஜெனரல் ஹர்ஹரத் சிங் சிங்களக் கடற்படையின் செயலைக் கண்டித்தார். சிங்கள இராணுவக் கட்டுப்பாட்டில் சிறை வைக்கப்பட்டிருந்த 17 விடுதலைப் புலிகளைக் காப்பாற்றுவதற்காக இந் திய இராணுவத்தை அவர்களைச் சுற்றி நிறுத்தினார். இதை ஜெயவர்த்தன விரும்பவில்லை.

17 விடுதலைப்புலிகளுக்கு ஏதேனும் நேருமானால் அதன் விளைவு மிக மோசமானதாக இருக்கும் என அமைதிப்படையின் தலைமைத் தளபதியான திபீந்தர் சிங் தில்லிக்குச் செய்தி அனுப்புகிறார்.

ஆனால், அத்தனையும் செவிடன் காதில் ஊதிய சங்கானது. முழுமையாக ஜெய வர்த்தனவின் சூழ்ச்சி வலையில் சிக்கியிருந்த ராஜீவ், யாருடைய அறிவுரையையும் கேட்க மறுக்கிறார். எதிலும் தலையிட வேண்டாம் என அமைதிப்படையின் தளபதிக்குச் செய்தி அனுப்புகிறார். இதன் விளைவாக 17 விடுதலைப் புலிகள் சிறை வைக்கப்பட்டிருந்த இடத்தைக் காவல் காத்து வந்த இந்திய அமைதிப் படை வீரர்கள் திரும்பப் பெறப்பட்டனர். சிங்கள இராணுவ வீரர்கள் அந்த இடத்தைச் சூழ்ந்துகொண்டனர். இதில் 17 விடுதலைப்புலிகள் நச்சுக் குப்பிகளை கடித்தனர். அதில் 12 பேர் உயிர்த் தியாகம் புரிந்தனர். எஞ்சிய ஐவர் மருத்துவமனையில் பிழைத்துக் கொண்டனர்.



ஒருபுறம் பிரபாகரனுக்கு வாக்குறுதிகள் தந்து அவரிடமிருந்து ஆயுதங்களை ஒப்படைக்க வைத்த ராஜீவ் காந்தி, மறுபுறம் துரோக இயக்கங்களுக்கு நவீன ஆயுதங்களைக் கொடுத்து விடுதலைப் புலிகளை ஒழிப்பதற்கு ஏவிவிட்டார். அவர்களை இந்திய இராணுவத் துணையுடன் இலங்கைக்கு அனுப்பி வைத்தார். விடுதலைப் புலிகளிடம் இடைக்கால அரசை ஒப்படைப்பது என்ற நோக்கம் ராஜீவ் காந்திக்கு இருந்திருந்தால் துரோக இயக்கங்களுக்கு ஆயுதம் வழங்கி ஏவிவிட்டது ஏன்?

இந்திய அமைதிப்படையில் தளபதியாக இருந்த திபீந்தர் சிங், இலங்கையில் இந்திய அமைதிப்படை என்னும் தலைப்பில் எழுதியுள்ள நூலில் குறிப்பிட்டிருக்கும் விவரங்கள் போருக்குக் காரணம் யார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளக்குகின்றன. பிரபாகரனும் விடுதலைப் புலிகளும் போரைத் தொடங்கவில்லை என்று இந்த விவரங்கள் அம்பலப்படுத்துகின்றன. விடுதலைப் புலிகளுடன் உடனடியாகப் போர் தொடுக்காவிட்டால் இந்தியாவுடன் செய்துகொண்ட உடன்பாட்டை ரத்துச்செய்யப் போவதாக ஜெயவர்த்தன பயமுறுத்தினார். இதைக் கண்டு அச்சமடைந்த ராஜீவ் காந்தி இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் கே.சி.பந்த், இந்தியப் படையின் தலைமைத் தளபதி ஜெனரல் சுந்தர்ஜி ஆகியோரை கொழும்புக்கு அனுப்பினார். அவர்களுடன் திபீந்தர் சிங்கும் சென்றிருந்தார். இந்த மூன்று பேர் முன்னிலையில் மீண்டும் ஜெயவர்த்தன மேற்கண்ட மிரட்டலை விடுத்தார். பதறிப்போன அமைச்சர் பந்த், உடனடியாக ராஜீவுக்கு விடயத்தைத் தெரிவித்தார். உடன்பாடு ரத்துச் செய்யப்படுமானால் தனது செல்வாக்கு அதலபாதாளத்துக்குச் சரிந்து விடும் என்பதை உணர்ந்த ராஜீவ் அதிர்ச்சியும் பதற்றமும் அடைந்தார்.

போஃபர்ஸ் ஊழலினால் சரிந்து விட்ட தனது செல்வாக்கைத் தூக்கி நிறுத்தவே இலங்கையுடன் உடன்பாடு செய்த ராஜீவ் அது ரத்தானால் தனது உலக மரியாதையே போய்விடும் என்ற பயத்தில் ஜெயவர்த்தனவை திருப்திப்படுத்த எதை வேண்டுமானாலும் செய்வதற்குத் தயாரானார். விடுதலைப் புலிகளுடன் போர் தொடுக்குமாறு இந்திய அமைதிப் படைக்கு உத்தர விடப்பட்டது. ராஜீவ் என்ற தனிமனிதனின் போலி கௌரவத்தை நிலை நிறுத்த இந்திய நாட்டின் கௌரவம் சீரழிக்கப்பட்டது. போஃபர்ஸ் பிரச்சினையில் தன்மீது படிந்த ஊழல் கறையை ஈழத் தமிழர்களின் குருதியைக் கொண்டு கழுவ ராஜீவ் முடிபு செய்தார். இதன் விளைவாக பெரும்போர் மூண்டது. துரோகம் செய்தது ராஜீவே தவிர, பிரபாகரன் அல்ல என்பதை வரலாற்றுச் சான்றுகள் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன!

-பழ.நெடுமாறன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தசாசனத்தை அழிக்கும் திட்டம் சூசகமாக முன்னெடுப்பு



(கொழும்பு)

இன்று அரசாங்கத்தின் கீழ் புத்த சாசனத்தை அழிவுக்குட்படுத்தும் வேலைத்திட்டம் சூசகமாக இடம் பெற்று வருகின்றது. பௌத்த மத பிக்குகள் என்ற வகையில் இதனை எந்த பயமும் இல்லாமல் எம்மால் கூற முடியுமென்றும் அஸ்கிரிய மகா நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை தஹம் பாட சாலை தினத்தின் 119 ஆவது வைப வம் கடந்த 3 ஆம் திகதி மாத்தளை ஹோட்டல் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது அனு சாசனம் வழங்குகையிலேயே அவர இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்று கையில்,

பௌத்த விகாரைகளில் நிர்மா ணப் பணிகள் எதுவும் நடைபெறும் சந்தர்ப்பங்களில் எழுத்து மூலமாக விகாரைகளை அரசுக்கு ஒப்ப டைக்க வேண்டுமென ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. பௌத்த விகாரைகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் நிதி தொடர்பான ஆவணங்களில் கையொப்பமிட வேண்டாம். அப்படி கையொப்ப மிட்டால் அந்தக் காணியின் உரிமை அரசுக்கு சென்று விடும். எதிர் காலத்தில் வரப்போகும் தேர்த ல்களில் இவ்வாறு பௌத்த சாசன த்தைப் பாழடிப்பவர்களுக்கா வாக்க ளிக்கப் போகிறீர்கள்? என்று பிர சாரங்கள் வரலாம்.

அது தவிர்க்க முடியாதது. அர சால் மேற்கொள்ளப்படும் இந் நடை முறை பற்றி பிரதமருக்குத் தெரி யுமா என்பது பற்றி எமக்குத் தெரியாது. நமது நாட்டின் பிரதமர் இது பற்றித் தெரிந்திருக்க வேண்டும். விகா ரைக்குச் சொந்தமான காணியை எழுத்து மூலமாக அரசுக்கு எடுக்கும படி மாகாண சபைகள் அறிவித் துள் ளன.

உங்களை பிரதமர் பதவியி லிருந்து நீக்கும்படி எமக்கு இரகசிய தகவல் வந்தது என்றாலும் நாங் களே உங்களை பிரதமராக நியமிக்க கோரிக்கை விடுத்தோம். புத்த சாச னத்தை இல்லாதொழிக் கும் நடவ டிக்கையை மேற்கொள்ளும் மாகாண சபை அறிவித்தல்களை நாம் கண்டி க்கிறோம் என்றார். (6)

# இரட்டை வேடம் போடும் தே.சு.மு- ஐ.தே.க.விசனம்

ஊவா மாகாண சபைத் தேர்த லில் தேசிய சுதந்திர முன்னணி யின் வேட்டை நாயுடன் ஓடிக் கொண்டு முயல் வேட்டையில் ஈடுபடுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சுமத் தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்தி ப்பில் அவர் இதனை தெரிவித்தார். ஊவா மாகாண சபைத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் தனித்து போட்டியிட தீர்மானித்துள்ள தேசிய சுதந்திர முன்னணி மௌனராக லையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து போட் டியிடுகிறது. இதன் மூலம் தேசிய சுதந்திர முன்னணி மக்களை ஏமாற்ற முயற்சித்து வருகிறது.

இந்த தந்திரம் மற்றும் இரட்டை நிலைப்பாடுகளுக்கு பின்னால் இருக்கும் காரணம் என்ன?

அதேவேளை அரசியலமை ப்பை திருத்துவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேசிய சுதந்திர முன்னணியிடம் இண க்கம் தெரிவித்துள்ளது என்றாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணியை நம்ப முடியாது. அடுத்த ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்கு முன்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை முறையை ஒழிக்க வேண்டும்.

தேசிய சுதந்திர முன்னணி அண்மைய காலமாக அரசாங்க த்தின் மீது பல்வேறு குற்றச்சாட் டுக்களை சுமத்தி வந்ததுடன் அர சாங்கம் சரியான பாதையில் பய ணிக்கவில்லை என குற்றம் சுமத்தி வந்தது.

அத்துடன் அரசாங்கத்தில் ஊழல் இருப்பதாகவும் சரியான பாதையில் நாட்டை வழி நடத்த வில்லை எனவும் அந்த கட்சி கூறியது. இது மக்களை ஏமாற்றும் முயற்சி எனவும் தேசிய சுதந்திர முன்னணியின் நடவடிக்கையில் சந்தேகம் இருந்து வந்ததாகவும் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்தார். (6)

# கட்டுரை தொடர்பில் விசாரணை நடத்துக

## அதிகாரிகளுக்கு உத்தரவு போட்டார் மஹிந்த

பாதுகாப்பு அமைச்சு இணைய தளத்தில் வெளியான கட்டுரை தொடர்பில் விசாரணை நடத்து மாறு ஜனாதிபதி மஹிந்த ராஜப க்ஷ உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில் பாதுகாப்பு அமை ச்சின் இணைய தளத்தில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் தமிழகத்தின் முதலமைச்சர் ஜெய லலிதா ஆகியோரை அவதூறு செய்யும் வகையில் கட்டுரையொ ன்று பிரசுரமாகியிருந்தது. இந்த கட்டுரை தொடர்பில் விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி அதிகாரிக ளுக்கு உத்தர விட்டுள்ளார்.

அலரி மாளிகையில் இடம்பெ ற்ற ஊடகப் பிரதானிகளுடனான சந்திப்பின் போது ஜனாதிபதி மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இந்த கட்டுரை தொடர்பில் வருத் தத்தை வெளியிடுவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமர் மற்றும் தமிழக முதல்வருக்கு எதிராக வெளியிட ப்பட்டிருந்த ஆக்கம் பின்னர் பாது காப்பு அமைச்சின் இணையதளத் திலிருந்து அகற்றிக் கொள்ளப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை அவதூறு கட்டுரை எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ள கட்டு ரையில் அவதூறு ஏற்படுத்தும் கருத் துக்கள் இடம்பெற்றிருக்கவில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் ஊட கப் பேச்சாளர் மறுப்பு தெரிவித் திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# 2285 புதிய பேருந்துகள்

## வருட இறுதிக்குள் சேவையில்

பயணிகளுக்கு சிறந்த போக் குவரத்து சேவையை வழங்கும் பொருட்டு இவ்வருட இறுதிக்குள் 2ஆயிரத்து 285 புதிய பேருந்து வண்டிகளை சேவையில் ஈடுப டுத்த திட்டமிடப் பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவிக் கின்றது.

இதன் நிமித்தம் கடந்த மாதம் 300 புதிய பேருந்து வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள துடன் இம்மாதம் மேலும் 500 பேருநத் வண்டிகள் சேவையில் இணைத் துக்கொள்ளப்படவுள்ளன.

அதேவேளை, 500 பேருந்து வண்டி கள் செப்டெம்பரிலும் ஒக்டோ பர் மற்றும் நவம்பர் [illegible] 900 பேருந்து வண்[illegible] வரத்துச் சேவையில் ஈடுபடுத்தப்பட வுள்ளதாகவும் அமைச்சு சுட்டிக்காட் டுகிறது.

அத்துடன் 15 முதல் 20 வருட ங்கள் பழைமை வாய்ந்த தற்போது சேவையில் ஈடுபடும் பேருந்துகளை பயன்படுத்தாதிருக்கவும் பேருந்துக ளின் பராமரிப்பு குறித்த புதிய நடைமுறைகளை அமுல்படுத்த [illegible] மேலும் சுட்டிக்[illegible] (6)

# இன்று ஒரு தகவல்

## மூன்று குருமார்கள்

ஒரு ஊரில் ஒரு ஞானி இருந்தார். (சூபிஞானி–ஹசான்) நல்ல அனுபவசாலி. அவரிடம் கலந்து உரையாடுவதற்காக சில பேர் வந்தார்கள்.

"உங்கள் குரு யார்?" என்று கேட்டார்கள். அவர் நிமிர்ந்து பார்த்தார். எனக்கு ஆயிரக்கணக்கான குருமார்கள் இருக்கிறார் கள். அவர்களது பெயர்களை எல்லாம் சொல்ல ஆரம்பித்தால் காலம் போதாது. அதனால் முக்கியமான மூன்று பெயரைப் பற்றி மட்டும் உங்களுக்குச் சொல்கிறேன் என்றார்.

அந்த மூன்று பேரிலே ஒருவன் –ஒரு திருடன்.

ஒரு சமயம் நான் பாலைவனம் வழியாகப் போய்க் கொண்டி ருந்தேன். அப்பொழுது வழி தவறிப் போய் ஒரு கிராமத்துக்குப் போய் விட்டேன். நள்ளிரவு ஆகிவிட்டது.

ஊரே உறங்கி விட்டது. அந்த நேரத்தில் ஒரு ஆள் மட்டும் ஒரு வீட்டின் சுவர் மீது ஏதோ செய்து உள்ளே நுழைவதற்கு முயன்று கொண்டிருந்தான்.

அவனிடம் போய், "நான் இன்றைக்கு இங்கு எங்காவது தங்க முடியுமா?" என்று கேட்டேன். அதற்கு அவன் "இந்த வேளையில் அதுமிகவும்சிரமம். ஒருதிருடனுடன்உங்களால் தங்கமுடியுமானால் நீங்கள் என்னுடன் தங்கலாம்" என்றான்.

நான் அவனுடன் ஒருமாதம் தங்கியிருந்தேன். ஒவ்வொரு நாள் இரவும் "இப்பொழுது நான் என்னுடைய வேலைக்குப் போகிறேன். நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டுப் போவான்.

திரும்பி வந்ததும், "உனக்கு இன்றைக்கு ஏதாவது கிடைத்ததா?" என்று கேட்பேன். அதற்கு அவன் "இன்றைக்கு ஒன்றும் இல்லை. நாளைக்கு மறுபடியும் முயற்சி செய்வேன்!" என்பான். ஒரு போதும் அவன் நம்பிக்கை இழந்ததே இல்லை. எப்பொழும் சந்தோச மாகவே இருந்தான். நானும் நெடுங் காலமாக தியானம் செய்து கொண்டே இருந்தேன். ஒன்றும் நடக்கவில்லை. ஆனால் நான் நம்பிக்கை இழந்து விடுவேன். அப்பொழுதெல்லாம் அந்த திருடனு டைய விடா முயற்சிதான் ஞாபகத்துக்கு வரும்.

என்னுடைய இரண்டாவது குரு–ஒரு நாய்.

ஒருசமயம்எனக்குமிகவும்தாகமாகஇருந்தது. ஒருநதியை நோக்கி போய்க் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு நாயும் ஆற்றில் தண்ணீர் குடிப்பதற்காக வந்தது. அதன் நிழல் ஆற்றின் மேல் தெரிந்தது. அதைப் பார்த்த அந்த நாய் பயந்து குரைக்கத் தொடங் கியது. பின் ஓடிப் போனது. இப்படியே சில தடவைகள் செய்தது. பின்னர் தைரியமாக தண்ணீரில் குதித்தது.

அதன் உருவம் மறைந்து விட்டது. இதைப்பார்த்ததும் எவ்வளவு தான் பயமிருந்தால்கூட ஒருவன் தைரியமாக காரியத்தில் இறங்க வேண்டும் என்பதை புரிந்து கொண்டேன். இந்தப் போதனை எனக்கு அந்த நாயிடமிருந்து கிடைத்தது.

என்னுடைய மூன்றாவது குரு– ஒரு சின்னக்குழந்தை.

நான் ஒரு சமயம் நகரத்துக்கு போனேன். அங்கே ஒரு குழந்தை எரியும் மெழுகுவர்த்தி ஒன்றை எடுத்துக் கொண்டு வந்தது. நான் அந்தக் குழந்தையைப் பார்த்து, "இதை நீ தான் கொழுத்தி வந்தாயா?" என்று கேட்டேன். "ஆமாம்" என்றது அந்தக் குழந்தை. "சரி... இந்த மெழுகுவர்த்தி முதல் எரியாமல் இருந்தது. இப்பொழுது எரிகிறது. இதற்கு எங்கிருந்து வெளிச்சம் வந்தது என்று எனக்கு காட்ட முடியுமா?" என்று கேட்டேன்.

இதற்கு அந்த குழந்தை சிரித்துக் கொண்டு மெழுகுவர்த் தியை ஊதி அணைத்தது. அதற்கு பின் என்னைப் பார்த்து...

"இப்பொழுது இந்த மொழுகுவர்த்தியின் வெளிச்சம் போனதை பார்த்தீர்கள் அல்வா, அது எங்கே போனது? என்று எனக்குச் சொல்லுங்கள்" என்றது.

அந்தக் குழந்தை இப்படிக் கேட்டதும் என்னிடமிருந்த ஆணவம் அழிந்தது. படித்ததெல்லாம் அந்த விநாடியில் சுக்குநூறாகி விட்டது.

எனது முட்டாள்தனத்தை நான் உணர்ந்தேன் என்று அந்த ஞானி எல்லாவற்றையும் விபரமாகக் கூறினார். அதனால் நாம் இன்னாரிடமிருந்துதான் இதைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதில்லை. யாரிடமிருந்தும் எதையும் கற்றுக் கொள்ளலாம்.

ஒருவன் நாய் ஒன்றை வளர்த்து வந்தான். அந்த நாய்க்கு வால் கிடையாது. வாலை யாரோ ஏற்கனவே வெட்டி விட்டார்கள்.

"இந்த நாய் தான் எனக்கு குரு. அதனிடமிருந்துகூட நான் பாடம் கற்றுக் கொண்டேன்" என்றான்.

"அப்படி என்ன தான் கற்றுக்கொண்டாய் அந்த வாலில்லாத நாயிடமிருந்து" என்று கேட்டேன்.

"யாரிடமும் வால் ஆட்டக் கூடாது என்ற பாடத்தை அதனிட மிருந்துதான் கற்றுக் கொண்டேன்!" என்றான் அவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வங்கிக்கடன் சார்ந்த நிதித்திறன்களை வலுப்படுத்த விசேட பயிற்சிப்பட்டறை

சிறுதொழில் முயற்சியாளர்களை சக்திப்படுத்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வங்கிக் கடன் சார்ந்த நிதித்திறன்களை வலுப்படுத்தும் பயிற்சிப்பட்டறை யாழ்ப்பாணத்தில் இல.286, பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையக மண்டபத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து நடத்தவிருக்கும் இப்பயிற்சிப் பட்டறையானது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஆரம்பித்து வைக்கப்படும்.

இதில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி, இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் மற்றும் வளவாளர்கள், யாழ்.மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், அமைச்சின் பணிப்பாளர் எம்.சி. கமகே மற்றும் பல உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த நிகழ்வில் 500 இற்கும் மேற்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பங்குபெறுவர் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

மஹிந்த சிந்தனை எதிர்கால தொலைநோக்கிற்கு அமைவாக சிறுதொழில் முயற்சியாளர்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்துவதற்கான ஒரு உபாயமாக வங்கிக் கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் செயற்பாடு ஒரு முக்கிய விடயமாக அமுலாக்கப்படுகின்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் வழிகாட்டலிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமைத்துவத்திலும் நாடளாவிய ரீதியில் இது இடம்பெற்று வருகின்றது.

இதனை மேலும் சக்திப்படுத்த நிதித்திறனை வலுப்படுத்தும் இப் பயிற்சிப் பட்டறை யாழ்.மாவட்டத்தில் நடைபெறும்.

இதனடிப்படையில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து இலங்கை மத்திய வங்கியின் வளவாளர்கள் பல்வேறு வகையான பயிற்சிகளை அளிக்கவுள்ளார்கள்.

வங்கிக்கடன் வசதிகள், சிறு நடுத்தர முயற்சிகளுக்கான கடன் வசதிகள், கருத்திட்டங்கள் தயாரித்தல், வட்டி, வட்டிவீதம், மீள் செலுத்தல் பற்றிய விபரங்கள், மீள்நிதியீட்ட முறையிலான கடன்கள். உதாரணமாக சௌபாக்யா, வறுமை ஒழிப்புக்கடன், சுயதொழில் முயற்சிக் கடன் பற்றிய விரிவான விளக்கங்கள் அளிக்கப்படும்.

மேலும் சிறு நடுத்தர முயற்சியாளர்களுக்கு தங்களது கைத்தொழில்களை மேற்கொள்வதற்கு நிதிப் பற்றாக்குறை ஒரு தடையாக இருப்பதனால் அதனை நிவர்த்தி செய்வதற்கு அரச மற்றும் தனியார் வங்கிகளுக்கூடாக எவ்வாறு இக்கடன்களை இலகுவாக பெற்றுக்கொள்வது தொடர்பான விளக்கங்கள் அளிக்கப்படும்.

இவ்வாறான பயிற்சிப் பட்டறைகள் எதிர்வரும் காலங்களில் அம்பாறை, அம்பாந்தோட்டை மற்றும் ஏனைய மாவட்டங்களிலும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதென அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (6)

## விபச்சார குற்றச்சாட்டில் 10 பெண்கள் கைது

கொள்ளுப்பிட்டி அல்பிரட் ஹவுஸ் பகுதியில் மசாஜ் நிலையம் என்ற பெயரில் நடத்தப்பட்டுவந்த விபச்சார நிலையமொன்றில் பொலிஸார் மற்றும் குற்றப்பிரிவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின போது, விபச்சாரத்தில் ஈடுபட்ட 10 பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்

கைதுசெய்யப்பட்டவர்களை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (6)

# கொழும்பில் உள்ளவர்கள் வெளியேற்றப்படமாட்டார்கள்

(கொழும்பு)

கொழும்பு நகரில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது நகரின் சில பிரதேசங்களில் இருந்து அப்புறப்படுத்தப்பட்ட மக்கள் மீண்டும் கொழும்பு நகரிலேயே மீள்குடியமர்த்தப்படுவார்கள். அவர்கள் ஒருபோதும் கொழும்பிலிருந்து வெளியேற்றப்படமாட்டார்கள் என காணி முகாமைத்துவ திட்டமிடல் நடவடிக்கை நகர அபிவிருத்தி அதிகார சபையின் வீடமைப்பு திட்டமிடல் பொறுப்பதிகாரி ஈ.ஏ.சீ. கிரிசாந்த தெரிவித்தார்.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனை தெரிவித்தார்.

கொழும்பு நகரின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்பட்டுள்ள வீட்டுத்திட்டங்கள் தொடர்பில் பல்வேறு தவறான கருத்துக்கள் வெளியாகியுள்ளன அவை உண்மையானவை அல்ல.

உண்மையில் அடிப்படை வசதிகளற்ற வீடுகளில் குடியிருக்கும் மக்களை சிறந்த வசதி வாய்ப்புக்களுடன் கூடிய வீடுகளில் குடியமர்த்துவதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்படி புதிதாக நிர்மாணிக்கப்படும் வீடுகள் சகல வசதிகள் நிறைந்தவையாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அவ்வீடுகளில் சமயலறை, இரண்டு படுக்கையறைகள், வரவேற்பறை உட்பட குளியலறை மற்றும் கழிவறை என அனைத்து வசதிகளும் கொண்டதாக அமையும் என அவர் தெரிவித்தார்.

மேலும், இந்த அபிவிருத்தி திட்டங்களை எதிர்வரும் 2020 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்ய ஏதிர்பார்த்துள்ளோம். அதற்கமைவாக இந்த அபிவிருத்தி திட்டங்கள் துரித கதியில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (6)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

**தெய்வீக இசையரங்கு**

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் முருகன் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு தினமும் 6.45 மணி முதல் 8.15 மணிவரைநல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

எட்டாம் நாளான இன்று வெள்ளிக்கிழமை வீணை இசையில் வீணை கீர்த்திகா சண்முகரட்ணமும் மிருதங்கம் கே.நந்தகுமார் ஆகியோர்வழங்கவுள்ளனர்.

இசையரங்தில் பாடல் ஷயன் சண்முகரட்ணமும் வயலின் ஆருஜா சண்முகரட்ணமும்மிருதங்கம் கே. நந்தகுமார்ஆகியோரும் வழங்கவுள்ளனர்.


**(சொற்பொழிவு)**

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டப முன்றிலில் இடம் பெற்று வருகின்றது.

இன்றைய நிகழ்வுகளாக சைவப் புலவர் பு.சந்திரவேல் வழங்கும் திருவாசகம் எனும் தேன விடயத்திலான சொற்பொழிவும் திருநெல்வேலி சிவயோகர் அறநெறிப் பாடசாலை, புத்தூர் கன்னியர் ஸ்ரீ ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை மற்றும் திருநெல்வேலி ஸ்ரீ ஞான வைரவர் அறநெறிப் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரான் திருவடிக்கு இன்று எட்டாம் திருவிழா



## வெண்பா

நல்லூர் கதிர்காமம் சந்திதிமா விட்டபுரம்
எல்லாமே ஈழத் திருத்தலங்காண்-நல்லூரே
ஆண்ட தமிழர் பரம்பரையின் அற்புதங்கள்
பூண்டதல மென்பார் புகழ்ந்து

வைத்திய கலாநிதி சி.இராசத்தினம்

## நல்லூரின் நாயகன்

நல்லூரின் நாயகனே
மூன்று பக்கம் -உனக்கு
தங்கக் கோபுரம்-ஐயா
எந்தப்பக்கம் பார்த்தாலும்
வேல் முகம் ஐயா
அதுதான் பணக்கார முகம் ஐயா
அதைக் கண்டால் -கண்களில்
ஆனந்தக் கண்ணீர் ஐயா!

வீ-அருள்ராஜன் வவுனிக்குளம்

## நலம் வாழ வழிகாட்டுவான்

அதிக பாடல் கொண்ட
ஆறுமுக சுவாமியே!
போற்றியுனை வழிபடின்
வளமது பெருகுமே!
குன்றிருக்கும் இடமெல்லாம்
குமரனவன் ஆட்சி
நல்லை பதி வாழும் அழகன்
நலம் வாழவழிகாட்டுவான்

வே.வே. தரணிகா(மருதங்கேணியூர்)

## நல்லூரான் திருவடியை நாடு

சித்திபுத்தி பாகற்குச் சோதரனாய்-வந்து
முத்தி தந்து அருளும் முருகனின் -சித்தி நிறை
நல்லருளைப் பெற்றுமே நானிலத்தில் உயர
நல்லூரான் திருவடியை நாடு
சங்கரனார் திருமகனாய்ச் சரவணப் பொய்கையில்
பங்கமின்றிப் பிறந்த பாலகனை-இங்கிதமாய்
வெல்லவரும் பகையெலாம் வீறுகொண் டழிக்க
நல்லூரான் திருவடியை நாடு

செ.சுதாகரன் (சாவகச்சேரி)

## நல்லூர் வேந்தனே!

நல்லூர்க் கோவிலில் வீற்றிருக்கும் நல் வேந்தனே
நம் அடியார்க்கு நன்னருள் செய்பவனே
ஓம் முருகா ஓம் முருகா என்று அழைத்தேன்-உன்னை
ஓங்கார வடிவிலே நான் கண்டுகளித்தேன்

உனைப்பாட இவ்வுலகில் வார்த்தை இல்லையே
உன்புகழை யான் பாட வரம் வேண்டுமே
என் மனக் கோவிலில் உறைகின்ற சோதிச்சுடரே
என் வாழ்க்கைக்கு ஒளி தருவாய் என் குமரவேலா!

சி.தாட்சாயினி(யா/உரு.சை.த.வி)


## நல்லைக் கந்தன் நனிவெண்பா

முச்சங்கம் வளர்த்திட்ட முறையான செந்தமிழைக்
கச்சைகட்டிக்காக்கும் கதிர்வேலன்–நச்சரவம்
பூண்ட சிவன் மைந்தன் புகழ் நல்லூர்ப் பதிநின்று
வேண்ட வரமீவான் விரைந்து

கலாபூஷணம் சந்தக் கவிஞர் நவ.பாலகோபால்

# வவுனியா மாவட்டத்தில் அழிக்கப்படும் பனைவளம்

## சமூக ஆர்வலர்கள் கவலை



வவுனியா மாவட்டத்தில் பனை வளம் பல்வேறு தேவைகளுக் காகவும் அழிக்கப்பட்டு வருவதாக பலரும் கவலை வெளியிட்டுள் ளனர்.

கற்பகதருவான பனை மரம் தமிழர் பாரம்பரியத்தில் முக்கிய தொரு கருப்பொருளாகக் காணப் படுவதுடன்- பனை இருக்கும் இட மெல்லாம் தமிழன் வாழ்ந்தான் என்ற அடையாளச் சின்னமாகவும் கருதப்படுகின்றது.

பனையின் அடி முதல் நுனி வரை மனிதனுக்கு ஏதோவொரு வகையில் பயனுள்ளதாகவும் பல ருக்கு பொருளாதாரத்தை ஈட்டித் தரும் மூலப்பொருளாகவும் காண ப்படுகின்றது என்பது மறுப்பதற் கில்லை.

இவ்வாறான கற்பகதரு மர த்தை அண்மைய காலங்களாக பல்வேறு தேவைகளுக்காக அழிக் கப்படுவதானது பல சமூக ஆர்வ லர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தும் விடயமாக மாறியுள் ளது.

குறிப்பாக வீடு கட்டுமானப்ப ணிகள்- மின்சார இணைப்புகள் என்பவற்றினை காரணப்படுத்தி பல மரங்களை வியாபாரத்திற்காக வெட்டி அழித்து வருகின்றனர்.

இதன் காரணமாக பனையை நம்பி தமது ஜீவனோபாயத்தை கொண்டு தொழில் செய்பவர்கள் பெரும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்படுவதுடன் அவர்கள் தமது தொழிலை கைவிட வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கும் உள்ளாகின் றனர்.

இந்நிலையில் புதிய பனை களின் உருவாக்கம் என்பது வவு னியா மாவட்டத்தில் முழுமையாக முடங்கியுள்ள நிலையில் இவ் வாறு பனைகளை அழிப்பதனை பனை அபிவிருத்தி சபை மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் களின் கவனத்தில் எடுக்க வேண் டும் என்பதே இன்றைய தேவை யாகவுள்ளது.

இது தொடர்பில் வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ். தேவராஜா தெரிவிக்கையில், பனை அழிப்பு என்பது ஏற்கனவே உள்ள பனை மரங்கள் தற்கால தேவைகளுக் காக தறிக்கப்பட்டு பனையின் வாழ்வை முடிவடையச் செய்கின றார்கள். தமிழர் உருவாக்கத்தின் பாரம் பரியச் சின்னமான பனையை அழிக்கும் நிலைதான் ஏற்படுகின் றதே தவிர பனையை புதிதாக உற்பத்தி செய்வதற்கு யாரும் முன்வர வில்லை எனத்தெரிவித்தார்.(6-250)

# ஜயசூரியவின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பணிப்பு

## நீதிமன்றம் விடுத்தது

இலங்கை சட்டத்தரணிகள் சங்க தலைவர் உப்புல் ஜயசூரிய வின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உடனடியான நடவடிக்கை எடுக் கப்படவேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலப்பிட்டிய இதற்கான உத்தரவை நேற்று முன்தினம் பிறப்பித்தார்.

அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பில் அரசாங்கம் மேற் கொண்டு வரும் எதிர் நடவடிக் கைகளை கண்டித்து உப்புல் ஜய சூரிய கருத்துக் கூறியமையை அடுத்து அவர் வாகனத்தில் பய ணம் செய்யும் போது அடையாளம் தெரியாதோர் மோட்டார் சைக் கிளில் பின்தொடர்வதாக முறை யிடப்பட்டது.

எனினும் பொலிஸார் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை களை எடுக்கவில்லை. இதனை யடுத்தே சட்டத்தரணிகள் சங்க தலைவர் நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்தார். (6)

# தமிழ் அகதி மீது கடும் சித்திரவதை

அவுஸ்திரேலிய அரசினால் இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்ட தமிழ் புகலிடக்கோரிக்கையாளர் கள் மிக மோசமாக சித்திரவதை செய்யப்பட்ட சம்பவத்தை சர்வதேச செய்தித்தாள் அம்பலப்படுத்தியுள் ளது. கடந்த மாதம் மட்டக்களப்பு கடற்பரப்பில் வைத்து இலங்கை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் பட்டவர்களில் தமிழர்களே இவ் வாறு சித்திரவதை செய்யப்பட்டுள்ள னர்.

அவுஸ்திரேலிய அரசினால் இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்ட புகலிடக்கோரிக்கையாளர்களில் தமிழர்கள் 4 பேரும் தனியாக பிரிக்கப்பட்டனர்.

நெல்சன் என அழைக்கப்படும் தமிழரின் முகத் தில் அதிகாரி ஒருவர் தாக்கியதில் அந்த தமிழரின் முகத்திலிருந்து இரத்தம் கொட்டியது. அதிகாரிகள் தொடர்ந்து அவரிடம் ஆவேசமாக கேள்வி கேட்டனர். விடுதலைப் புலிகளுக்கு நீ பணம்கொடுத்தாயா? அவர்களை உனக்கு தெரியுமா என கேட்டு தாக்கினர், காலால் உதைத்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# சிறுவனை கடத்தியவர்களுக்கு 15 ஆம் திகதி வரை விளக்கமறியல்

(கொழும்பு)

கல்கமுவ மீகலேவ பிரதேசத் தில் நான்கு வயது சிறுவனை கடத்திச் சென்று சுமார் ஒரு கோடி ரூபா கப்பம் பெற முனைந்த சந் தேக நபர்கள் நால்வரையும் எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க கல்கமுவ நீதவான் நீதிமன்ற நீதிபதி ருவன் தம்மிக திஸா நாயக்க உத்தர விட்டார். இதன்படி சந்தேக நபர்கள் நால்வரும் குருநாகல் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆர்.சீ.பந்துல சந்தகெலும், டபிள்யூ. ஏ.சனத் சத்துரங்க குமார, ஜயலத் எஹ்.எம்.தினேஷ் பிரசாத், டபிள்யூ.என். ஏ.சஞ்சீவ விஜேசேகர ஆகிய நான்கு சந்தேக நபர்களே இவ்வாறு விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளனர்.

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் பெற்றுக்கொண்ட தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் விசாரிக்கப்பட்டு வந்த சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் கல்கமுவ நீதவான் நீதிமன்ற நீதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ஆஜர்படுத்தப்பட்டனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன, உதவி பொலிஸ் அத்தியட்சகர் சமந்த வீர சேகர, பிரதான பொலிஸ் பரிசோ தகர் எட்ரியன் நிஸாந்த சில்வா, உதவி பொலிஸ் அத்தியட்சகர் பீ. எச்.சீ. உபாலி,எச்.பீ.பீ.அமரவங்ஸ ஆகியோர் அடங்கிய குற்றப் புல னாய்வுப் பிரிவினரும் வடமேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரே ஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜகத் அபேசிறி குணவர்தன,

நிகவரட்டிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்தன அழககோன் மற்றும் மஹோ பிராந்தியத்துக்குப் பொறுப்பான உதவி பொலிஸ் அத் தியட்சகர் சமன் திஸாநாயக்க, நிகவரட்டிய உதவி பொலிஸ் அத்தி யட்சகர் உபுல்சந்தன அபேசிங்க ஆகியோரின் கீழ் கல்கமுவ, மீக லேவ, கிரிபாவ, அம்பன்பொல மற்றும் பொல்பித்திகம ஆகிய பொலிஸ் நிலையங்கள் ஊடாக சிறுவனை கண்டுபிடிக்கும் முயற் சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில் நீதவானின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் சந்தேக நபர்களை ஆஜர்படுத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர், சிறுவனை கடத்த பயன்படுத்தப் பட்ட மோட்டார் சைக்கிள்கள் இரண்டையும் மறைத்து வைத் திருந்த இடத்தை கண்டு பிடித்து விட்டதாக நீதவானிடம் தெரி வித்துள்ளனர். அத்துடன் குறித்த நால்வரும் ஒரு கோடி ரூபாவை கப்பமாக கேட்டுள்ளதாகவும் அவர் கள் பேரம் பேசி அத்தொகையை 35 இலட்சம் வரை குறைத்துள் ளதாகவும் புலனாய்வுப் பிரிவினர் நீதவானிடம் சுட்டிக்காட்டியுள் ளனர்.

சிறுவனை கடத்தியது தொடர் பில் தானும் கவலை கொண் டதாகவும் குறைந்த வயதுடைய இளைஞர்கள் நால்வர் இந்த சம் பவத்துடன் தொடர்புபட்டுள்ளமை குறித்து தான் மேலும் கவலை கொள்வதாகவும் இதன் போது நீதவான் சுட்டிக்காட்டியே சந்தேக நபர்களை அடையாள அணி வகு ப்புக்கு உட் படுத்தும் வரை விளக் கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக் கது. (6)

# தங்கூசி வலைகளுடன் நான்கு மீனவர்கள் கைது

யாழ்.வேலணைக் கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட தங்கூசி வலை களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட நான்கு மீனவர்களை நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்ததாக யாழ்.கடற்றொ ழில் நீரியல் வளத்துறைப் பிரதிப் பணிப்பாளர் நடராசா கணேசமூ ர்த்தி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட மீனவர்க ளிடமிருந்து, 4 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கூசி வலை களையும் மீட்டதாக அவர் தெரி வித்தார்.

தங்கூசி வலைகள் பயன் படுத்தி மீன்பிடியில் ஈடுபடுகின்றனர் என தமக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே அவ்விடத் திற்குச் சென்று மேற்படி நான்கு மீனவர்கள்ளையும் கைது செய்ததாக தெரிவித்தார்.

தொடர்ந்து, மேற்படி நான்கு மீனவர்களையும் ஊர்காவற் றுறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (6)

## பிரிவுத்துயர் பகிர்வு

### நிக்லஸ் ஜோய்



சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் டென்மார்க் Kolsrappuro ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நிக்லஸ் ஜோய் கடந்த 4 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 10 Holstebro,Viborgvej 7500,Denmark என்னும் முகவரியில் நடைபெறும்.

### அந்தோனிப்பிள்ளை மரியநாயகம்



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை மரியநாயகம் கடந்த 2 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு Prince Of Peace,Alton Towers, Scarborough,ON M1V 4E7 Canada என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

### திருமதி பாலநாதன் சிவபாக்கியம்



சைவமடம் வளமாரி கட்டுவன் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் இலந்தைகட்டி வைரவர் கோயிலடி ஏழாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பாலநாதன் சிவபாக்கியம் கடந்த 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் ஏழாலை மேற்கு, உசத்தியோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### ஞானப்பிரகாசம் சூசைமுத்து



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டை, 475/5, இராமநாதபுரம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் சூசைமுத்து கடந்த 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று முற்பகல் 10 மணிக்கு புனித ஆரோக்கிய நாதர் ஆலயத்தில் (இராமநாதபுரம்) ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் முரசுமோட்டை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

### வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம்



நெடுந்தீவு கிழக்கு, 12 ஆம் வட்டாரம் மருதவல்லியா வளவினைப் பிறப்பிடமாகவும் இல.59/1,மருதடி வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம் நேற்று முன்தினம் புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாதுகாப்பு ஆலோசகராக அரவிந்த் குப்தா நியமனம்

இந்தியாவின் துணைத் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக முன்னாள் இராஜதந்திரி அரவிந்த் குப்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

1979 ஆம் ஆண்டு குழுவைச் சேர்ந்த இந்திய வெளிவிவகார அமைச்சின் அதிகாரியான அரவிந்த் குப்தா, தேசிய பாதுகாப்புச் சபை செயலகத்தின் செயலாளராகவும் பணியாற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாதுகாப்பு கற்கைகள் மற்றும் ஆய்வு நிறுவனத்தின் பணிப்பாளராகப் பணியாற்றிய அரவிந்த் குப்தா, இந்தியாவின் துணைத் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு பணிபுரிவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் துணைத் தேசிய பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்றிய நேச்சல் சந்து பதவி விலகியதை அடுத்தே, அவருக்கு இந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவின் உள்ளகப் புலனாய்வுப் பிரிவான ஐ.பியின் முன்னாள் பணிப்பாளரான நேச்சல் சந்து தனிப்பட்ட காரணங்களால் கடந்த வாரம் தனது பதவியிலிருந்து விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)




ஆபிரிக்க. தலைவர்கள் உச்சிமாநாடு நிறைவு நாள் அமெரிக்காவில் நடைபெற்றபோது ஒபாமாவுடன் ஒன்றாக குரூப் போட்டோ எடுத்துக்கொண்ட ஆபிரிக்க தலைவர்களை படத்தில் காணலாம்.

# தடுப்பு முகாமிலுள்ள சிறுவர்கள் விடுதலை!

## ஆஸி. அரசிடம் கோரிக்கை

அவுஸ்திரேலியாவின் அண்மித்த தீவுகளில் தடுப்பு முகாம்களில் தமது இளவயது குழந்தைகளுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள சகல புகலிடக் கோரிக்கையாளர்களையும் விடுவிக்க வேண்டுமென சமய மற்றும் நற்பணி மன்றங்கள் அடங்கிய அமைப்பொன்று கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்கு அவுஸ்திரேலிய கத்தோலிக்க தேவாலயங்களும், அகதிகளுக்காக பணிபுரியும் நற்பணி அமைப்புக்களும் அடங்கிய அமைப்பு மத்திய அரசாங்கத்திடம் தனது கோரிக்கையை சமர்ப்பித்துள்ளதாக அவுஸ்திரேலிய செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

நீண்டகாலம் தொடர்ந்து தடுத்து வைக்கப்படுவதன் மூலம் பிள்ளைகள் மீது வரக்கூடிய உளவியல் தாக்கங்கள் பற்றி தமது குழு கரிசனை கொண்டுள்ளதாக கிறிஸ்தவ மத அமைப்பின் மேற்கு அவுஸ்திரேலிய திருச்சபைக்கான பதில் அமைப்பாளர் வணக்கத்திற்குரிய கென் வில்லியம்ஸ் அடிகளார் தெரிவித்தார்.

முகாம்களில் இருந்து விடுவிக்கப்படும் பெற்றோரின் புகலிடக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் வரையில், அவர்களைத் தங்க வைத்து அவர்களுக்குரிய சகல விதத்திலும் உதவியளிக்க தமது அமைப்பு தயாராக இருக்கிறதென அவர் கூறினார்.

கிறிஸ்மஸ் தீவு தடுப்பு முகாமிலுள்ள பலர் தற்போது தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதாக வெளியான தகவல்களுக்கு மத்தியில், இந்தக் குழுவின் முன்னெடுப்புக்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அதே நேரத்தில் சிறுவர்களது மன நிலைமைகள் தொடர்பாக அவுஸ்திரேலிய குடிவரவு தடுப்பு முறைமையானது சித்திரவதைக்கு ஒத்த சூழ்நிலையை கொண்டிருப்பதாக அகதிகள் தொடர்பான பிரதான மனோதத்துவ நிபுணர் தெரிவித்துள்ளார்.

அகதிகள் தொடர்பில் கடந்த 3 வருடங்களாக பணியாற்றிவரும் பீட்டர் யங்க் என்பவரே இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

அவர், இந்த முகாம்கள் மன நிலை பாதிக்கப்படுவதற்கு காரணமாக அமைந்தது என்பதை கண்டறிய முடிகிறது என குறிப்பிட்டார்.

அவுஸ்திரேலியாவுக்கு அகதிகளாக செல்பவர்கள் சட்டவிரோதிகள் என கருதப்பட்டு கிறிஸ்மஸ் தீவுகள் நவுரு மற்றும் பப்புவா நியுகினியா ஆகிய இடங்களில் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

இந்த இடங்களில் நீண்டகாலமாக அகதிகள் தடுத்து வைக்கப்படும் போது அவர்களுக்கு மன நிலை பாதிப்பு ஏற்படுவதற்கான சாத்தியம் அதிகம் என்றும் பீற்றர் யங்க் குறிப்பிட்டுள்ளார்.

பிந்திய உத்தியோகபூர்வ தகவல்களின் படி ஜூலை 31 வரை பப்புவா நியுகினி - மானஸ் தீவில் ஆயிரத்து 127 அகதிகளும் நவுருவில் ஆயிரத்து 146 அகதிகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

355 பேர் இந்த இடங்களில் இருந்து தமது நாடுகளுக்கு திரும்பியுள்ளனர். (6)

# தமிழின அழிப்பு குறித்து மோடிக்கு கவலையில்லை

## வைகோ கடும் கண்டனம்

இலங்கையில் இடம்பெற்ற தமிழினப் படுகொலை குறித்தோ, தற்போது மனிதவுரிமைகள் நசுக்கப்படுவது குறித்தோ இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான புதிய அரசு கிஞ்சித்தும் கவலைப்படுவதைக் காணோம் என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலட்சக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட அநீதியை மறைத்து, இலங்கை அரசுடன் இந்திய அரசு வர்த்தக, பொருளாதார உறவுப் பாலத்தை அமைக்கும் வேலைகள் வேகமாக நடக்கின்றன.

இலங்கைக்கு வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் ஒரு நிதியையும் அறிவித்து, அதில் தமிழர்களுக்கும் உதவி கொடுக்கப்படும் என்ற மாயாயால வேலைக்கும் ஏற்பாடு நடக்கிறது.

கடந்த 60 ஆண்டுகளில், தமிழர்களோடு இலங்கை அரசு செய்து கொண்ட ஒப்பந்தங்கள் எதையும் நிறைவேற்றியது கிடையாது. தமிழர்களை வதைத்து அடிமை இருளில் நசுக்கியது.

இலங்கை அரசு ஒருக்காலும் தமிழ் இன விரோதப் போக்கை மாற்றிக்கொள்ளாது என்பதற்கு ஓரிரு தினங்களுக்கு முன், கொழும்பில் நடைபெற்ற சம்பவமே எடுத்துக்காட்டு.

உலகத்தில் எத்தனையோ இனங்கள் அழிவுகளையும் அவலங்களையும் அடக்கு முறையாளர்களால் அனுபவித்தபோதும், அதற்கெல்லாம் உரிய நீதியை பல்வேறு கட்டங்களில் அனைத்துலக நாடுகளும், ஐ.நா.மன்றமும் வழங்கி வந்துள்ளன. ஆனால், இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தமட்டில் நாதியற்றுப் போனார்களா? நானிலத்தில் அவர்களுக்கு நீதியே கிடையாதா? என்ற கேள்விகள் விஸ்வரூபம் எடுக்கின்றன.

புண்ணுக்குப் புனுகு பூசி விடலாம், இலட்சக்கணக்கான தமிழர்கள் மண்ணுக்குள் புதைந்ததுபோல் நீதியும் புதைந்து போகட்டும், காலம் அனைத்தையும் மறக்கடித்து விடும் என்ற மனோநிலையில் இந்திய அரசின் போக்கு, குறிப்பாக வெளிவிவகாரத்துறை அமைச்சகத்தின் போக்கு அமைந்து இருக்கிறது என்று வைகோ தனது அறிக்கையில் மேலும் கண்டனம் தெரிவித்துள்ளார். (6)

# தனிநாட்டு கோரிக்கையை கைவிடுமாறு பிரித்தானிய அரசாங்கம் வலியுறுத்தல்

ஸ்கொட்லாந்து மக்கள் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டால், அதிக சலுகைகளைப் பெறலாம் என பிரித்தானிய அரசாங்கம் உறுதி அளித்துள்ளது.

பிரித்தானிய குடியரசில் இருந்து தனிநாடாகப் பிரியும் கோரிக்கையை ஸ்கொட்லாந்து மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 18ஆம் திகதி இதற்கான சர்வஜன வாக்கெடுப்பை நடத்த பிரித்தானிய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதனிடையே, ஸ்கொட்லாந்து மக்கள் தனிநாடு கோரிக்கையை கைவிட்டால், பிரித்தானிய நாடாளுமன்றத்தில் அதிக அதிகாரங்கள் வழங்கப்படும் என்றும், வரி மற்றும் சமூகப் பாதுகாப்பிற்கான வரம்புகள் உயர்த்தப்படும் என்றும் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் உறுதியளித்துள்ளார்.

இதற்கான ஒப்பந்தத்தில் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன், துணைப் பிரதமர் கிலெக், தொழிற்கட்சித் தலைவர் எட் மிலிபான்ட் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

பொதுத் தேர்தல் முடிந்தவுடன் 2015 ஆம் ஆண்டிற்குள் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ள அனைத்து வரம்புகளும் நடைமுறைப்படுத்தப்படும் என்று இந்த ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பிரித்தானியாவுடன் இணைந்து செயற்படும் ஸ்கொட்லாந்தின் நாடாளுமன்ற அதிகாரங்களை வலுப்படுத்த போதுமான ஆதரவு அளிப்பதாகவும் இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆயினும் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனின் இத்தகைய வாகுறுதிகள் மற்றும் திட்டங்களை ஸ்கொட்லாந்து மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (6)

# விமானத் தாக்குதல்; 30 பேர் உயிரிழப்பு

வட ஈராக்கில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள மொசுல் நகரில் நடந்த விமானத் தாக்குதலில் குறைந்தது 30 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர் என நம்பப்படுகிறது.

ஜிஹாதியக் குழுவான இஸ்லாமிய அரசு, அதாவது முன்பு ஐஸிஸ் என்ற அமைப்பு, ஜூன் மாதத்தில் கைப்பற்றிய இந்த நகரில் அந்த அமைப்பின் போராளிகள் ஒரு தளமாக பயன்படுத்திவரும் சிறை ஒன்றின் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக மொசுல் நகரத்திலிருந்து தகவல்கள் கூறுகின்றன.

கொல்லப்பட்டவர்களில் சிலர், தீவிரவாதிகளால் சிறைக்கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் என்று அத்தகவல்கள் கூறுகின்றன.

இந்தத் தாக்குதலில் ஒரு ஆளில்லா விமானம் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று அத்தகவல்கள் கூறுகின்றன.

இந்த தாக்குதல் நடந்ததை உறுதிப்படுத்திய ஈராக்கிய அரச தொலைக்காட்சி, ஆனால் இதில் 60 பேர் கொல்லப்பட்டார்கள் என்றும், அனைவரும் தீவிரவாதிகள் தான் என்றும் கூறியது. (6)

# சீனாவில் நில அதிர்வு

## பலி எண்ணிக்கை 589 ஆக உயர்வு

சீனாவின் தென் மேற்கு மாகாணமான யுன்னானில் ஏற்பட்ட பூகம்பத்தில் குறைந்தது 589 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று சீன அதிகாரிகள் கூறுகிறார்கள்.



இந்த பூகம்பம் ஏற்பட்ட பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் நதி ஒன்று அடைபட்ட நிலையில், அங்கு வெள்ளம் ஏற்படக்கூடும் என்ற கவலைகள் இப்போது புதிதாக ஏற்பட்டிருக்கின்றன.

இந்த நதி இப்போது உடைப்பெடுத்து கீழ்மட்டத்தில் இருக்கும் பகுதிகளை வெள்ளப்பெருக்கில் ஆழ்த்தக்கூடும் என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

ஆயிரக்கணக்கானோர் இப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

மலைப்பகுதி சாலைகளை நிலசரிவுகள் மறித்திருக்கும் நிலையில், மீட்புப்பணியாளர்கள் அங்கு பாதிக்கப்பட்ட மக்களை அணுகுவதை கடினமாக்கியிருக்கின்றனர். பூகம்பத்துக்குப் பின்னர் ஏற்படும் நில அதிர்வுகளும், தொடர்ந்து பெய்து வரும் மழையும் உயிர் தப்பியவர்களின் நிலையை மேலும் சிக்கலாக்கி வருகின்றன. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னையே நீ அறிவாய்!
– சோக்கிரட்டிஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## உங்களைப் பற்றி அறிதல் எனும் திட்டமொன்றை அறிமுகப்படுத்துங்கள்

அரசியல்வாதியாக இருப்பது சுலபம். ஆனால் அரசியல் நடத்துவது கடினம். அரசியல் நடத்துவதாயின் அதற்கு அர்ப்பணிப்புகள் வேண்டும்.

உதாரணத்திற்கு தமிழ்நாட்டுத் தலைவர்கள் கலைஞர் கருணாநிதி, முதல்வர் செல்வி ஜெயலலிதா ஆகியோரை எடுத்துப் பாருங்கள்.

அரசியல் வேலைகளுக்காக அவர்கள் செலவிடும் நேரத்தை. அதிலும் சமகாலத்தில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தமிழ்நாட்டின் பட்டிதொட்டிகளில் நடக்கும் அத்தனை விடயங்களையும் அறிதலிலும் அவை தொடர்பில் நடவடிக்கை எடுப்பதிலும் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றார்.

அது மட்டுமன்றி தமிழகத்தை அபிவிருத்தி செய்வதிலும் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் அவரின் செயற்திட்டங்கள் ஒட்டுமொத்த இந்தியாவிலும் உன்னதமானது என்ற மகுடத்தை சூடவுள்ளது.

எனவே அரசியல் என்பது வெறுமனே மேடைப்பேச்சுக்களால் ஆலாவர்ணம் செய்யும் விடயம் அன்று. அது பரந்தது.

மக்கள் பற்றியும் அவர்களின் தேவைப்பாடு பற்றியும் முழுமையாக அறிந்து அதற்கேற்றால் போல் திட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

எனினும் எங்கள் தமிழ் அரசியல்வாதிகள் அரசியல் நடத்தாமல் வெறும் அரசியல்வாதிகளாக இருக்கின்றனர்.

அவர்களிடம் மக்கள் பற்றிய– பிரதேசம் பற்றிய தகவல்கள் எதுவும் இல்லை.

மாறாக உணர்ச்சி வசப்படுத்தக் கூடியதாக உரையாற்றுகின்ற திறத்தை மட்டுமே அவர்கள் கொண்டிருப்பது தெரிகிறது.

இதனை வடக்கு மாகாண சபையின் அமர்வுகளில் ஆளும் தரப்பு உறுப்பினர்கள் ஆற்றுகின்ற உரைகளில் இருந்து உணரமுடியும்.

எனவே மாகாண சபை உறுப்பினர்கள் முதலில் மாகாண சபையின் சட்டதிட்டங்கள் அதன் இயங்கு நிலை பற்றி முழுமையான அறிவைப் பெற்றிருப்பது அவசியம்.

அதற்காக அவர்கள் நிறையவே வாசிப்பதிலும் தேடுதலிலும் ஈடுபட வேண்டும்

அதேநேரம் வடக்கு மாகாண சபைக்கு உட்பட்ட நிர்வாகத்தை திறம்பட நடத்துவதற்கு அதிகாரிகளின் செயற்பாடுகள், நடவடிக்கைகள், போக்குகள் தொடர்பில் பொதுமக்களின் கருத்தை அறிந்து கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வது மிகவும் முக்கியமானது.

அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் தொடர்பில் அவர்கள் பற்றிய மக்களின் கருத்தை அறிவது நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தி வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்கு கட்டாயமானதாகும்.

இவ்வாறு அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் பற்றி அறிதல் என்பதை இருவழிகளில் மேற்கொள்ள முடியும்.

அதில் ஒன்று குறித்த அதிகாரி தன்னைப் பற்றி அறிவதற்கான ஏற்பாட்டைச் செய்தல்.

உதாரணமாக ஒவ்வொரு பிரதேச செயலர்களும் தங்களைப்பற்றிய மக்களின் கருத்து என்ன என்பதை அறிதல். இதற்காக ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் ஏற்பாடு செய்தல்,

இந்த ஏற்பாட்டை அமைச்சின் செயலாளர்கள், அரச அதிபர்கள் முதல் கிராம உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் என அனைவரும் செய்வது உன்னதமானது.

இதன் மூலம் ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் தங்கள் பற்றிய மக்களின் அபிப்பிராயத்தை அறிந்து அதற்கு ஏற்றால் போல் தங்களை மாற்றிக் கொள்ளவும் தவறான அபிப்பிராயங்களை தெளிவுபடுத்தவும் முடியும்.

இது தவிர இரண்டாவது முறைமை; உயர் அதிகாரிகள் தங்களுக்குக்கீழ் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் பற்றிய மக்களின் கருத்தை அறிவதற்கான ஏற்பாட்டைச் செய்தல்.

இது பொதுமக்கள் முறைப்பாடு செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதாகவும் குறித்த உத்தியோகத்தர்களின் குறைபாட்டை அதிகாரிகள் தெரிந்து கொண்டு அதற்கு ஏற்றால்போல் நடவடிக்கை எடுப்பதற்கும் வழிவகுக்கும்.

இத் திட்டத்தை சகல மட்டங்களிலும் நடைமுறைப்படுத்தும் போது நிர்வாகம் ஒழுங்கு சீர்படுவது உறுதி. இதனை வடக்கு மாகாணசபை நடைமுறைப்படுத்தும் என நம்பலாம்.

## வரம் பலவும் தரும் வரலட்சுமி விரதம்

இறைநம்பிக்கையின் அடிப்படையில் எம்மக்கள் இறைவன் திருநாட்களாகவும் பெருநாட்களாகவும் திதி, வார, நட்சத்திரங்களை சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். மக்களுடைய வாழ்க்கைச் சிறப்பிற்கு வழிபாடுகள் மனதிற்கு அமைதியையும் திருப்தியையும் தருகின்றது.

இந்தவிதத்திலே இவ்வுலக வாழ்விற்கு அத்தியாவசியமான அட்ட ஐஸ்வர்யங்களையும் தரும் மகாலட்சுமியை வருடந்தோறும் ஆவணி மாதத்துப் பூரணை தினத்திற்கு முன்வரும் வெள்ளிக்கிழமை நாளில் வரலட்சுமி விரதமாக நோன்பிருந்து வழிபாடுகள் செய்கின்றார்கள். வரலட்சுமியை இருக்கு வேதமானது அருளுக்கும் ஆக்கத்திற்கும் தெய்வமாகவும் யசுர்வேதமானது சூரிய மண்டலத்தின் மத்தியில் பேரொளிவீசும் மகாலட்சுமியாகவும் அதர்வண வேதமானது நல்லது கெட்டது செய்யும் தேவதைகளை விப ரீத்து அதில் நல்லன செய்யும் மகாலட்சுமியாகவும் போற்றுகின்றன.

வேண்டும் வரம் தரும் மகாலட்சுமியானவள் மக்கள் வாழ்விற்கு அத்தியாவசியமான அட்ட ஐஸ்வர்யங்களையும் தருபவளாக தனலட்சுமி, தான்யலட்சுமி, தைரியலட்சுமி, ஜயலட்சுமி, வீரலட்சுமி, சந்தானலட்சுமி, கஜலட்சுமி, வித்தியாலட்சுமி எனப் பல்வேறு வடிவங்கொண்டு வேண்டுவார் வேண்டும் வரம் தந்து அருள்பாலிக்கின்றார்.

பல்சிறப்பு மிக்க வரலட்சுமி விரதத்தை அனுட்டித்து சாருமதி என்னும் பெண்ணும் நந்தன், விக்கிரமாதித்தன் முதலான பலர் தாம்தாம் வேண்டிய வரங்களைப் பெற்றுச் சிறப்பாக வாழ்ந்ததாக பவிஷ்யோத்திர புராணம் எடுத்துக் கூறுகின்றது. உள்ளன்புடனும் நம்பிக்கையுடனும் வழிபாடு செய்பவர்கட்கு தெய்வம் வேண்டும் வரம் தந்து நல்வழிகாட்டும் என்பதற்கு இத்தகு விரத வழிபாடுகள் வழிகாட்டுவனவாகவுள்ளன.

மணமான மங்கையர்கள் தலை நோன்பு நோற்பதுடன் தங்கள் மாங்கல்யம் நிலைத்திருக்கவும் இல்லத்தில் லட்சுமி கடாட்சம் நிலைத்து மனை சிறக்கவும் மகாலட்சுமி வழிபாட்டில் மஞ்சள் நூல் பூசையில் வைத்து வலது மணிக்கட்டில் கட்டி மகாலட்சுமி தேவியின் திருவருளுக்குப் பாத்திரமாகின்றனர்.

தத்தம் இல்லங்களில் விரதமனுட்டித்து மகாலட்சுமி வழிபாடுகள் செய்து நோன்பு நூல்கட்டமுடியாதவர்கள் இன்று ஆலயங்களில் வரலட்சுமி நூல்கட்டும் வழிபாடுகளில் பங்குகொண்டு வரலட்சுமி விரத நோன்பு வழிபாடுகள் செய்கின்றார்கள்.



இந்நன்னாளிலே நாமும்
ஆதிமுதலே அன்னையே
அனைத்தின் உட்பொருளே
அகரமுதல அன்பிற்கினிய
அமுதே ஞானத்தேனே
அளவிலா அருட்பெருங்
கடலே வாசிமுகமே
அடியேனுள் புகுந்து
விளையாடும் ரவிமதியே
அடிபணிந்தேன் உன்னை
அருள்புரிவாயே

என மகாலட்சுமிதேவியைப் பணிந்து வேண்டும் வரம் பெற்று நல்வாழ்வு காண்போமாக.

–நீர்வைமணி–

## மண்டல மாநாடு

(யாழ்ப்பாணம்)

**கடவுளுடைய அரசாங்கத்தை முதலில் நாடுங்கள்** என்ற பெயர் கொண்ட மூன்று நாள் மண்டல மாநாடு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இன்று 8 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதிவரை காலை 9.20 தொடக்கம் மாலை 4.55 மணிவரை இடம்பெறவுள் ளது.

உலகை ஆளத் தகுதியானவர் யார்? என்ற உற்சாகமூட்டும் பைபிள் சொற் பொழிவு ஞாயிறு காலை இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை பேச்சுக்களும் நாடகங்களும் இடம்பெறவுள்ளன. (6)

### இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

#### சாந்த குணம் வேண்டும்

★ பரிசுத்த நினைவின் காரணமாக எத்தனையோ சிறிய நன்மைகள் பெரிய நன்மைகளாக ஆகிவிடுகின்றன.

★ பரிசுத்த எண்ணமில்லாத காரணத்தினால் எத்தனையோ பெரிய நன்மைகள் அற்பக் காரியங்க ளாகி விடுகின்றன.

★ நீங்கள் சுத்தமுடையவர்களாக இருங்கள். சுத்தமுடையவனே சுவர்க்கத்தில் நுழைவான்.

★ வாங்கும்போதும் விற்கும்போதும் சாந்தகுணத்தைக் கடைபிடிப்பவர் மீது அல்லாஹ்வின் கருணை உண் டாகட்டும்.

★ உழைப்பாளிகளின் கூலியை கால தாமதமாகக் கொடுப்போர் அநியாயக்காரர்களாகும்.

★ நீங்கள் பொய் சத்தியம் செய்து ஒரு பொருளை விற்பனை செய்த போதிலும் அது அபிவிருத்தியை கெடுத்து விடுகின்றது.

★ நீங்கள் இறைவனிடத்தில் பாவ மன்னிப்பை கோருங்கள். நான் ஒரு நாளைக்கு நூறு முறை மன்னிப் பைக் கோருகிறேன்.

★ இறைவன் பெருந்தன்மை மிகுந்த அருளாளன். தண்டிக்கும் ஆற்றல இருந்தாலும் குற்றங்களை மன்னிக்கும் மனப்பான்மை உள்ளவன்.

## எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானவர்களில் அதிகமானோர் இளைஞர், யுவதிகளே

(கொழும்பு)

இலங்கையில் கடந்த ஆறு மாத காலத்தில் கண்டறியப்பட்டுள்ள எச்.ஐ.வி. தொற்றுள்ளவர்களில் நூற்றிற்கு 25 சதவீதமானவர்கள் 25 வயதிலும் குறைந்த இளைஞர், யுவதிகள் எனக் கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் பால்வினை நோய்கள் தொடர்பான தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சிசிர லியனகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இளைஞர், யுவதிகளை மேற்படி பாலவினை நோய்களில் ஒன்றான எச்.ஐ.வி. தொற்று வெகுவாகப் பாதிப்புச் செலுத்தியுள்ளது.

இதுவரை 1950 எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானவர்கள் கண்டறியப்பட்டுள்ள போதும் 3000 முதல் 5000 பேர் வரை இருக்க முடியும் என ஊகிக்கப்பட்டுள்ளது. அநேகருக்கு தாம் எச்.ஐ.வி. தொற்று உள்ளனவர்கள் என்பது தெரியாதுள்ளது.

கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூன் 30 ஆம் திகதி வரை எச்.ஐ.வி. தொற்றுள்ளவர்கள் என 110 பேர் இனம் காணப்பட்டுள்ள போதும் அவர்களில் 25 சதவீதமானவர்கள் 15 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் என்றும் தெரிய வருகிறது.

அத்துடன் இக்காலப் பகுதியில் ஒன்பது பேர் உயிரிந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

## கலட்டி விநாயகரில் வரலட்சுமி விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் வரலட்சுமி விரதம் இன்று காலை 8.30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து மூலமூர்த்தி பூஜையை அடுத்து வசந்த மண்டபப் பூசையுடன் விநாயகப் பெருமான் திருவீதி வலம் வந்து மஹாலட்சுமிபூசையுடன்நோனபுக் காப்பு வழங்கப்படும். (செ)

### அமைதியின் சொற்கள்

உயிரைக்கொடுத்தவர் சந்தோசத்திற்காகக் கொடுத்தார் வேதனைக்காக அல்ல. அவ்வப்போது எம் வாழ்க்கையில் இம்மாதிரியான தருணங்கள் வருவதுண்டு. *(பிரேம் ராவத்)*

## சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

### இந்துவாக வாழ்வோம்

நல்லைக்கந்தப் பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்

**08.08.2014 இற்கான வினா**
**கோவில் என்பதன் பொருள் யாது?**
**07.08.2014 ற்குரிய கேள்வியும் விடையும்**
**கடவுள் என்பவர் யார்?**
கட+உள்: எல்லாவற்றையும் கடந்து உள்ளே இருப்பவர். ஒவ்வொரு பொருளையும் உருவாக்கிய ஒருவர் இருப்பதுபோல இந்தப் பிரபஞ்சத்தையும் உருவாக்கி இயக்கிக்கொண்டிருப்பவர் கடவுள். எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவர்; எதையும் எதிர்பார்க்காமல் அன்பு செலுத்துபவர்; அன்பே உருவானவர்.

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடை என்பவற்றை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் 26.08.2014 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை சின்மய ஞானவேல், சின்மயா மிஷன், இல.09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கையளித்துப் போட்டியில் பங்குபற்றவும்.

சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்

இல.09, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர். 021 2223447

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநகர் பாடும்மீன் வி.கழகத்தின் பொன்விழாவுக்கான உதைபந்தாட்டம்

## யாழ்.பல்கலை சம்பியன்

**குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தின் பொன்விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணி வெற்றிபெற்றுச் சம்பியனானது.**





கடந்த திங்கட்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகமைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

முதற்பாதி ஆட்டம் ஆரம்பமாகி முதலாவது நிமிடத்தில் யாழ்.பல்கலைக்கழக அணி வீரன் ஞானறூபன் தனது அதிரடி ஆட்டத்தினால் எதிர் அணி வீரர்களின் வியூகங்களைத் தகர்த்து தனது அணிக்கான முதலாவது கோலை அடித்தார். இதனால் ஆட்டம் விறுவிறுப்பான கட்டத்தை அடைந்தது.

பதிலுக்குச் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியினர் தமது அணிக்காக கோலினைப் பெறுவதற்காக எதிர் அணியினரின் கோல் பரப்பினை முற்றுகையிட்ட வண்ணம் இருந்தனர்.

இதன்போது சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் நிதர்சன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்தார். இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது.

இதனை அடுத்து இரண்டு அணியினரும் தமது ஆட்டத்தின் வேகத்தை அதிகரித்து எதிர் அணியின் கோல் பரப்பினை முற்றுகையிட்ட வண்ணம் இருந்தனர். ஆனால் கோல்களைப் பெறமுடியவில்லை. இதனால் முதற்பாதி ஆட்டத்தில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாம்பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரண்டு அணியினரும் மிகுந்த உற்சாகத்தோடு களமிறங்கினர். இரு அணிகளின் முன்கள வீரர்களும் தமக்கு கிடைத்த கோல் பெறும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டனர். இரண்டாம்பாதி ஆட்டம் முடிவில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் யாழ்.பல்கலைக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஆட்ட நாயகனாக சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி வீரன் ஜுட் தெரிவானார். ஆட்ட தொடர் நாயகனாக யாழ்.பல்கலைக்கழக அணி வீரன் ஞானறூபன் தெரிவானார். சிறந்த கோல் காப்பாளராக நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரன் நிருசாந் தெரிவானார். (கு)

# அனைத்து பல்கலைக்கழகங்களுக்கிடையிலான உதைபந்து யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பம்



2014 ஆம் ஆண்டுக்கான அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி முதன்முறையாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் இன்று வெள்ளிக்கிழமை நடத்தப்படவுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியில் 14 பல்கலைக்கழகங்கள் பங்குபற்றுகின்றன. லீக் போட்டிகளும் கால் இறுதிப் போட்டிகளும் இன்று, நாளை 8 , 9 ஆம் திகதிகளில் (வெள்ளி, சனி) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மைதானத்திலும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறும்.

அரையிறுதிப் போட்டி கள், 3 ஆம் இடத்துக்கான போட்டி, இறுதிப் போட்டி ஆகியவை 10 ஆம் திகதி (ஞாயிறு) யாழ்.பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெறும்.

ஆரம்ப நாளாக இன்று 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் போட்டிகளுக்கான விருந்தினராக யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறைப் பேராசிரியர் எ.சூசையானந்தனும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறும் போட்டிகளுக்கு விருந்தினராக யாழ்ப்பாணக் கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் பி.எஸ்.மோகனக்குமாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இறுதி நாளான 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறும் முதலாவது அரையிறுதிப் போட்டிக்கு விருந்தினராக யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ்.அன்ரனிப் பிள்ளையும் காலை 9.30 மணிக்கு நடைபெறும் 2 ஆவது அரையிறுதிப் போட்டிக்கு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் ஓய்வு பெற்ற உடற்கல்விப் போதனாசிரியரான எம்.பத்மநாதனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் 3 ஆம் இடத்துக்கான போட்டிக்கும் 4.30 மணிக்கு இடம் பெறும் இறுதிப் போட்டிக்கும் பிரதம விருந்தினராக 12 ஆவது இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளின் தலைவரும் யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞான பீடாதிபதியுமான பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜாவும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபர் வணக்கத்துக்குரிய கலாநிதி டீ.எஸ்.சொலமனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (கு)

வலம்புரி SPORTS
விளையாட்டுச் செய்திகள்

# தவறை கண்டால் தட்டிக் கேட்பேன்



இந்திய அணித்தலைவர் டோனி

தவறு செய்தால் யாராக இருந்தாலும் நான் எதிராக தான் இருப்பேன் என்று இந்திய அணித்தலைவர் டோனி கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

நாட்டிங்காமில் நடந்த முதலாவது டெஸ்டின் 2 ஆவது நாள் உணவு இடைவேளையின் போது, இந்திய துடுப்பாட்டக்காரர் ரவீந்திர ஜடேஜாவுடன் வாக்குவாதம் செய்த இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஆண்டர்சன் அவரை திட்டி, தள்ளி விட்டு அநாகரீகமாக நடந்து கொண்டார்.

இந்தச் சம்பவம் குறித்து ஐ.சி.சி., கமிஷனர் கார்டன் லீவிஸ் விசாரித்தார். இதில், 'ஜடேஜாவை மிரட்டும் வகையில் பேசியது உண்மை தான்' என ஆண்டர்சன் ஒப்புக் கொண்டார்.

இருப்பினும், இதற்கு போதிய ஆதாரம் இல்லாததால், இருவரையும் கார்டன் லீவிஸ் விடுவித்தார். ஆண்டர்சனுக்கு தடை கிடைக்கும் என எதிர்பார்த்த நிலையில், இவர் விடுவிக்கப்பட்டது, அணித்தலைவர் டோனிக்கு கோபத்தை ஏற்படுத்தியது.

இது பற்றி அணித்தலைவர் டோனி கூறுகையில்,

இந்த சம்பவத்தின் போது, ஒரு சில , கடினமான வார்த்தைகள் பேசியிருக்கலாம். ஆனால், இதை நாங்கள் புகாரில் குறிப்பிடவே இல்லை. ஆண்டர்சன், ஜடேஜாவை தள்ளி விட்டார் என்பது தான் முக்கிய குற்றச்சாட்டு.

இதில் ஜடேஜாவுக்கு மட்டும் அபராதம் விதித்தனர். அப்போதே, இவர் மீது ஒரு சதவீதம் கூட தவறு இல்லை எனத் தெரிவித்தேன்.

கடைசியில் போதிய ஆதாரம் இல்லை என்று விடுவித்தது நல்ல விடயம்.

இதில், 'மேட்ச் ரெப்ரி' டேவிட் பூன் பார்வையில், ஜடேஜாவின் செயல் தவறாக பட்டதால், 50 சதவீதம் அபராதம் விதித்தார். இது ஐ.சி.சி.,க்கு தெரியாதது சற்று வித்தியாசமாகத் தான் உள்ளது.

என்னைப் பொறுத்தவரையில் தவறு செய்தால், அது யாராக இருந்தாலும் எதிராகத்தான் இருப்பேன். எனது சக வீரர் எல்லை மீறாத நிலையில், அபராதம் விதிக்கப்பட்டால், எப்படியும் அவருக்கு ஆதரவாகத்தான் இருப்பேன்.

எது சரி, எது தவறு என்று எனக்குத் தெரியும். ஜடேஜா விடயத்தில் சரி என்று பட்டதை செய்தேன் என்று கூறியுள்ளார். (கு)

# மீண்டும் களமிறங்கினார் நெய்மர்

உலக கிண்ண காற்பந்து தொடரில் காயமடைந்த பிரேசிலின் நட்சத்திர வீரர் நெய்மர், மீண்டும் பயிற்சிக்கு திரும்பியுள்ளார்.

பிரேசிலில் சமீபத்தில் உலக கிண்ண காற்பந்து தொடர் நடந்தது. கொலம்பிய அணிக்கு எதிரான காலிறுதிப் போட்டியில் நெய்மருக்கு முதுகெலும்பில் முறிவு ஏற்பட்டது. இதனால் தொடரை விட்டு விலகினார்.


பார்சிலோனா கிளப் அணிக்காக விளையாடும் இவருக்கு, மருத்துவ சோதனைகள் நடந்தன. இதில் தேறியதை அடுத்து மீண்டும் அணிக்கு நெய்மர் திரும்பியுள்ளார்.

தற்போது சக வீரர்களுடன் வழக்கமான முறையில் பயிற்சியில் ஈடுபட்டார். (கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்தின் வேகத்தில் திக்கி திணறிய இந்தியா





இந்தியாவிற்கு எதிரான நான்காவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டமுடிபில் இங்கிலாந்து அணிவலுவான நிலையில் உள்ளது.

இந்தியா-இங்கிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கு இடையேயான 4-வது டெஸ்ட் போட்டி நேற்று மான்செஸ்டரில் தொடங்கியது.

நாணயச்சுழற்சியில் வென்ற இநதிய அணயின் அணித்தலைவர் தோனி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். காலையில் மழை பெய்ததால் ஆட்டம் சிறிது நேரம் தாமதமாக ஆரம்பித்தது.

தொடக்க வீரர்களாக முரளி விஜய்-காம்பீர் களமிறங்கினார்கள். இங்கிலாந்தின் ஆண்டர்சன், பிராட் பந்து வீசசை எதிர்கொள்ள இந்திய வீரர்கள் திணறினார்கள்.

4-வது ஓவரில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 8 ஓட்டங்களாக இருககும்போது காம்பீர் 4 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார்.

அடுத்து முரளி விஜய் 4.2 ஓவரில் ஓட்டங்கள் எதுவும் எடுக்காமல் டக் அவுட் ஆனார்.

அதே ஓவரின் 4-வது பந்தில் கோலி டக் அவுட் ஆனார்.

5.1-வது ஓவரில் புஜாரா டக் அவுட் ஆனார். இந்த இடைவெளியல் ஒரு ஓட்டம் கூட எடுக்கவில்லை.


8 ஓட்டங்களுக்குள் 4 விக்கெட்டுகளை இழந்து தடுமாறிய அணிக்கு தோனியும், ரகானேவும் ஆறுதல் அளித்தனர்.

நிதானமாக ஆடிய ரகானே 24 ஓட்டங்களில் வெளியேற, அவரைத் தொடர்ந்து ஜடேஜா ஓட்டங்கள் எதுவும் எடுக்காமல் பெவிலியன் திரும்பினார். அஸ்வின் 40 ஓட்டங்கள் சேர்த்தார். கடும் போராட்டத்திற்குப் பிறகு அரை சதம் கடந்த தோனி, 70 ஓட் டங்களை எடுத்து விக்கெட்டை இழந்தார். இதனால் இந்தியாவின் முதல் இன்னிங்ஸ் 152 ஓட்டங்களில் முடிவுக்கு வந்தது. இங்கிலாந்து தரப்பில் ஸ்டுவார்ட் பிராட் 6 விக்கெட டுகளை வீழ்த்தினார்.

அண்டர்சன் 3 விக்கெட்டும், கிறிஸ் ஜோர்டான் ஒரு விக்கெட்டும் எடுத்தனர். இதையடுத்து தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸை தொடர்ந்த இங்கிலாந்து அணி முதல் நாள் முடிபில் 3 விக்கெட்டிழப்பிற்கு 113 ஓட்டங்களை எடுத்துள்ளது.

பெல் 45 ஓட்டங்களுடனும் ஜோர்டன் ஓட்டம் எதுவும் எடுக்காமலும் களத்தில் உள்ளனர் போட்டியின இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

# வலுவான நிலையில் பாகிஸ்தான் இலங்கை சிறந்த ஆரம்பம்



பாகிஸ்தான் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடும் இலங்கை அணி, நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர நிறைவில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 99 ஓட்டங்களைப்பெற்றுள்ளது. இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில கௌஷால் சில்வா 38 ஓட்டங்களையும, குமார் சங்கக்கார 36 ஓட்டங்களையும் ஆட்டமிழக் காது பெற்றுள்ளனர்.

இரண்டாவது நாளான நேற்று தமது முதல் இனிங்ஸை தொடர்ந்த பாகிஸ்தான் அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 451 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

பாகிஸ்தான் துடுப்பாட்டத்தில், யூனுஸ் கான் 177 ஓட்டங்களையும, அஷாட் ஷபிக் 75 ஓட்டங்களையும், சப் ராஸ் அஹமட் 55 ஓட்டங்களையும் பெற்று கொண்டனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சில் டில்ருவன் பெரேரா 5 விக்கெட்டுகளையும், ரங்கன ஹேரத் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

போட்டியின் மூன்றாம் நாள் ஆடடம் இன்று நடைபெறவுள்ளது. (க)

# வரலக்ஷ்மி விரத பூசையும் மகிமையும்



மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துஸ்வாமி தீட்சிதர்தன் வரலக்ஷமி நமஸ்துப்யம் க்ருதியில் இந்த விரதத்தைப் பற்றி பாடியிருக்கிறார்.

வரலக்ஷமி விரதத்துக்கு புராணக் கதைகள் உண்டு. அன்னை பார்வதியின் சாபத்துக்கு ஆளான தேவர் உலகின் சித்ரநேமி என்ற கணதேவதை, அப்சரஸ் பெண்கள் கடைப்பிடித்த வரலக்ஷமி விரதத்தைக் கண்டு அனுஷ்டித்து சாப விமோசனம் பெற்றார்.

பூவுலகில் சௌராக்ஷ்டிர நாட்டின் ராணி சுசந்திரா, செல்வ வளத்தின் மமதையால் மகாலட்சுமியை அவமதித்தாள். அதனால் அனைத்து செல்வங்களையும் இழந்து வருந்தினாள். சுசந்திராவின் மகள் சாருமதி தெய்வ அனுகூலத்தால் வரலக்ஷ்மி விரதம் பற்றி அறிந்து அதைக்கடைப்பிடித்தாள்.

அதனால் மகிழ்ந்த மகாலக்ஷமி தாய் அவளுக்கு சகல நலன்களையும் அருளினாள். சுசந்திராவும் தன் மகளைப் பார்த்து வரலட்சுமி விரதம் கடைப்பிடித்து, இழந்த செலவத்தை மீண்டும் பெற்று வளமோடு வாழ்ந்தாள். இப்படி சகல வளங்களையும் தரும் இந்த வரலட்சுமி விரத பூஜையை, ஆடிமாத பௌர்ணமிக்கு முன்வரும் வெள்ளிக்கிழமை அன்று செய்ய வேண்டும்.

முக்கியமாகச் செய்ய வேண்டியவர்கள் பெண்கள். சுமங்கலிகள் தாலி பாக்கியத்துக்காகவும், சுபிட்சம், சௌபாக்கியம் போன்றவற்றுக்காகவும் இந்த விரதத்தை மேற்கொள்ள வேண்டும்.

கேட்கும் வரங்களைத் தரும் லக்ஷமிதேவியை பூஜித்தல் இதன் சிறப்பு. திருமணமான பெண்கள் தங்கள் திருமணத்தை அடுத்துவரும் வரலக்ஷமி பூஜையிலிருந்து இதை ஒவ்வொருவருடமும்செய்யவேண்டும்.

வரலக்ஷமி விரதத்தின் போது வீட்டுக்கு விலக்காக இருந்தால் அடுத்து வரும் வெள்ளிக்கிழமை இந்த பூஜையைச் செய்யலாம். இதைச் செய்யும் போது சிறு பெண்களும் உடனிருநது சரட்டைக் கட்டிக் கொள்ளலாம். மறு நாள் அம்மனுக்கு ஆரத்தி எடுத்த பின்னர் கலசத்தை அரிசி வைத்திருக்கும்பானையில்வைக்க வேண்டும்.

எல்லோராலும் மிக விரிவாகச் செய்ய இயலாவிட்டால் ஈடுபாட்டோடு தெரிந்த பாடல்களைப் பாடி மகாலக்ஷமி அக்ஷடோத்திரம் சொல்லி பூக்களால் அர்ச்சனை செய்து நிவேதனம் செய்து நோன்பு சரடை கையில் கட்டி நிவேதனத்தை எல்லோருக்கும் கொடுத்து வயதான சுமங்கலிப் பெண்களை வணங்கி தானங்கள் செய்து இந்த விரத பூஜையை நிறைவு செய்யலாம்.

கொஞ்சம் சாஸ்திரோக்தமாக விரதமிருந்து பூஜையை செய்ய விரும்பினால் விக்னேஸ்வர பூஜை தொடங்கி சங்கல்பம், கலச பூஜை பிராணப்ரதிக்ஷடை, தியானம், க்ஷோடசோபசாரம், அங்க பீஜை, லட்சுமி அக்ஷடோத்ரம் தோரக்ரந்தி பூஜை, பிரார்த்தனை, ஆரத்தி எனறு விரிவாகச் செய்ய வேண்டும்.

**வரலக்ஷ்மி நோன்பு விரதத்தின் பலன்கள்**

வரலக்ஷமி நோன்பு என்பது பதினாறு வகைச் செல்வத்துக்கும் அதிபதியான லட்சுமியின் அருள் வேண்டி அனுஷ்டிக்கும் இந்துக்களின் நோனபாகும். ஆடி மாதம் வளர்பிறையில் முழுநிலவு வருவதற்கு முந்தைய வெள்ளிக்கிழமையில் கணவன் நலத்தோடும் ஆரோக்கியத்தோடும் செல்வத்தோடும் இருக்கவும் தாலி பாக்கியம் நிலைக்கவும் இல்லத்தில் செல்வம் கொழிக்கவும் இந்த நோன்பை சுமங்கலி பெண்கள் கடைப்பிடிக்கின்றனர்.

இந்நாளில் வீட்டைச் சுத்தம் செயது விளக்கேற்றி வாசனைப் புகையினால் இல்லத்தை நிறைத்து கலசம் ஒன்றில் லட்சுமியை வணங்கித் தொடங்குவர். கலசத்தினுள் பச்சரிசி, எலுமிச்சை, பொற்காசு என்பவற்றை இட்டு கலசத்தைப்பட்டாடையால் அலங்கரித்து தங்கம், வெள்ளி அல்லது பஞ்ச உலோகங்களினாலான இலடசுமியின் உருவச்சிலையை அல்லது படத்தை கலசத்திலுள்ள தேங்காயில் வைப்பர்.

மஞ்சள் சரட்டை குங்குமத்தில் வைத்துக் கலசத்தில் அணிந்து வரலட்சுமியைக் கிழக்குப் பக்கமாக வைத்து வணங்குவர். தீப ஆராதனை செயது இனிப்பான பலகாரங்களைப படைப்பர். பின்னர் கலசத்தில் வைத்த மஞ்சள் சரட்டை விரதமிருந்தவர் கையில் கட்டுவர். பின்னர் படைக்கப்பட்ட பொருட்களுடன் தாம்பூலம், மஞ்சள், புடவை போன்றவற்றை தரித்து தாமும் உண்டு விரதத்தை நிறைவேற்றுவர். அன்று முழுவதும் அக்ஷடலட் சுமி தோத்திரம், லலிதாசகஸ்ர நாமம் பாராயணம் செய்வர். மாலை வேளைகளில் உற்றார், சுற்றார் வீடுகளுக்குச் சென்று ஒருவருக்கொருவர் தாம்பூலம் பெற்றுக் கொள்வர்.

மேற்படி வரலக்ஷமி விரத பூஜை இம் முறையும் சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் கோவிலில் வெகு சிறப்பாக தமிழ் விளக்கங்களுடன் காலை 8 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெறும். அடியார்கள் யாவரும் பூஜையில் பங்குபற்றி ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாளினதும் வரலக்ஷமி அம்பாளினதும் அருளை பெறுவீர்களாக.

கலாநிதி
மகேஸ்வரக்குருக்கள்
பாலகைலாசநாதசர்மா
சிரேஷ்ட விரிவுரையாளர்
சுவாமி விபுலாநந்த
அழகியல் கற்கை நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம்.

# பிக்குமாருக்கு எதிரா...

பொலிஸார் அவர்களுக்கு எதிராக நடவடி க்கை எடுக்க வேண்டும்.

இப்படியான சந்தர்ப்பங்களில் பொலிஸார் உரிய முறையில் செயறபடாதது குறித்து ஏற்கெனவே பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

தடையேற்படுத்துவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்துவதற்கு பதிலாக பொலிஸார், இடையூறுக்கு உள்ளானவர்களின் செயற்பா டுகளை நிறுத்த முயற்சித்து வருகின்றனர்.

அத்தோடு பொலிஸார்தமது பொறுபபுக்கு மாறாக செயற்பட்டு வருகின்றனர் எனவும் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை வெளிநாட்டு தூதுவர்கள் இலங்கையின் அரசியல் மற்றும் சமூக அமைப்புகளுடன் தொடர்புகளை கொண்டி ருப்பது தவறானதல்ல எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இலங்கையில் அவர்கள் செயற்படும் போது நாட்டில் நடப்பவை மற்றும்நாட்டில்காணப்படும்தன்மைகளை அறிந்து கொள்வது அவசியமானது.

எனினும் அவர்கள் தமது வரையறையை மீறி சமூக அமைப்புகளின் பங்காளர்களாக மாறுவார்கள் எனில, அது இந்த நாட்டின் பிரச்சினைகளில தேவையற்ற தலையீடுகளை மேற்கொள்வதாக கருதப்பட வேண்டும்.

இலங்கையின் அரசியல் செயற்பாடுகள் அல்லது சமூக தலையீடுகளுக்குள் அவர்கள் இருக்கக் கூடாது எனவும் வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பௌத்த...

அதனை இன வன்முறையாக வெடிக்கச் செய்வதில் உள்நாட்டு வெளிநாட்டு சக்திகளுக்கு தொடர்பு உண்டு.

கத்தோலிக்க மக்கள் மற்றும் கத்தோலிக்க தேவாலயங்கள் தொடர்பில் தெரிவு செய்யப்பட்ட பௌத்த பிக்குகளுக்கு மட்டும் தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இரகசியமான முறையில் இந்த தக்வல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை சீர்குலைப்பதற்கும் முரண்பாடுகளை ஏற்படுத்துவதற்கும் முயற்சிக்கும் உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அளுத்கம சம்பவம் போன்று கத்தோலிக்க மக்கள் செறிந்து வாழும் இடங்களில் கலகங்கள் ஏற்படுவதனை தடுப்பதற்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (செ-11)

## புதிய தூதுவர்...

பெரேரா, இத்தாலி, நோர்வே, சைப்பிரஸ், மோல்டா, அல்பேனியா ஆகிய நாடுகளில் தூதுவராக பணியாற்றியுள்ளார்.

அத்துடன் நியூயோர்க் மற்றும் ஜெனிவா ஆகிய நகரங்களில் உள்ள ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்திர வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகத்திலும் கென்யாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் தூதரக அதிகாரியாகவும் பெரேரா பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ஞானசார...

ராஜித... இவற்றுக்கு பதிலளிக்க வேண்டாம் வழக்கு தாக்கல் செய்யுங்கள் என ஜனாதிபதி கூறினார். இது ஒரு சதித்திட்டம் என்றும் தனது தேர்தல் செயற்பாடுகளுக்கு ஏற்கெனவே இது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிப்பது முறை என்பதால், இவ்வாறு ஊடகவியலாளர் சந்திப்பை நடத்திய பின் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படும். ஞானசார தேரர் எனக்கு எதிராக சுமத்தியுள்ள அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஒரு பில்லியன் இழப்பீடு கோரி வழக்கு தொடரப்படும்.

வழக்கில் வெற்றி பெற்றால், கிடைக்கும் முழு பணத்தில் சட்டத்தரணிக்கான கட்டணத்தை செலுத்திய பின், மீதமாகும் தொகை தேசிய மீன்பிடி சம்மேளனத்திற்கு வழங்கப்படும்.என்னிடம் எத்தனை வீடுகள் இருக்கின்றது என ஞானசார தேரர் கேட்டிருந்தார். 1983 ஆம் ஆண்டு நிர்மாணித்த ஒரே வீடு என்னிடம் உள்ளது. இதனை தவிர மீனவர்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்துள்ளேன்.

அண்மையில் வாகனம் ஒன்றை விற்று காணி ஒன்றை கொள்வனவு செய்தேன் எனவும் ராஜித சேனாரத்ன மேலும் கூறியுள்ளார். (செ-11)

## புலனாய்வு...

வந்ததையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் காணாமல்போனோர் மற்றும் மன்னார் பிரஜைகள் குழுவினரின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள், அந்த மனிதப் புதைகுழியைத் தொடர்ந்தும் தோண்ட வேண்டும் என்றும், அதன் அருகில் முன்னர் மக்களுடைய பயனபாட்டில் இருந்து பின்னர் மூடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்ற கிணறு ஒன்று தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் நீதிமன்றத்திடம் கோரியிருந்தனர்.

இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் அந்தக் கிணறு தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், அந்தப் பகுதியில் முன்னர் பொது மயானம் அல்லது இடுகாடு எதுவும் இருந்ததில்லை என்பதற்கான ஆதாரங்களாக மன்னார் ஆயர் உட்பட மூன்று பேரிடமிருந்து பெறப்பட்டுள்ள சத்தியக்கடதாசிகளையும் இந்த சட்டத்தரணிகள் நீதிமன்றத்திடம் சமர்ப்பித்துள்ளனர்.

இந்த வழக்கு விசாரணை அக்டோபர் மாதம் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (செ-11)

## சர்வதேச...

விசாரணைகள் நடத்தப்படவில்லை?

போர் இடம்பெற்ற காலத்தில் இடம்பெற்றதாக சுமத்தப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

என்ன காரணத்திற்காக அரசாங்கம் சர்வதேச விசாரணைகளுக்கு அஞ்சுகின்றது.

போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் மூன்று அரச தலைவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள நிலையில் இவ்வாறு அரசாங்கம் அஞ்சுகின்றது.

சர்வதேச விசாரணைக்கு எதிரான கொள்கை நாட்டுக்காகவா அல்லது ஒரு சிலருக்காகவா? என நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அத்தோடு எமது பணத்தில் வெளிவிவகார அமைச்சர் அழகான நாடுகளுக்கு சவாரி செய்து வருகின்றார் என மங்கள சமரவீர கடுமையாக அரசாங்கத்தை விமர்சனம் செய்துள்ளார். (செ-11)

## மும்முரம்...

2014இல்நிறைவேற்றப்பட்ட A/HRC/25/1 இலக்க பிரேரணையில், நல்லிணக்க ஆணைக்குழு கருத்திலெடுத்த காலத்தில் இரண்டு தரப்பினரும் மேற்கொண்டதாக கூறப்படும் கடும் மனித உரிமை மீறல்கள், துஷ்பிரயோகங்கள் பற்றி முழுமையான விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு ஐ.நா. மனித உரிமைப் பேரவை, ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரை கேட்டிருந்தது.

இவ்வாறான குற்றங்கள், அவை நடந்ததாக கூறப்படும் சூழ்நிலை என்பவற்றை உறுதி செய்யுமாறும் குற்றமிழைத்தவர்கள் தண்டனையிலிருந்து தப்பாது இருப்பதையும தொடர்புள்ள நிபுணர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்டவர்களின் உதவியுடன் உறுதி செய்யுமாறு அவரிடம் கேட்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் பேரவை அதன் 27 ஆவது அமர்வின்போது ஒரு வாய்மொழி இற்றைப்படுத்தலை செய்யுமாறும் 28ஆவது அமர்வில் விசாரணை பற்றிய முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் மனித உரிமைகள் ஆணையாளரை கேட்டது.

இந்த பணிப்பாணைக்கு அமைய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் இலங்கை மீது ஜெனிவாவை தளமாக கொண்ட விசாரணை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**கால எல்லை**

நல்லிணக்க ஆணைக்குழு செயற்பட்ட காலம் அதாவது பெப்ரவரி 21, 2002 முதல் நவம்பர் 15, 2011 வரையான காலப்பகுதியையே ஐ.நா.விசாரணையும் கவனிக்கும். சில சமயம் தேவையை பொறுத்து இந்த கால எல்லைக்கு அப்பாலும் சில விடயங்களை விசாரணைக்குழு கருத்தில் எடுக்கும்.

**சட்ட வேலைச் சட்டகம்**

இந்த விசாரணையின் பணிப்பாணை, யுத்தத்தில் பங்குபற்றிய இரண்டு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்செயல்களை விசாரிப்பதாகும்..

இலங்கை சர்வதேச மனித உரிமைகள் ஒப்பந்தங்களில் மூலம் ஒப்புக்கொண்ட கடப்பாடுகளும் வழமையான சர்வதேச சட்டங்களும் இந்த விசாரணைக்கு அடிப்படையாக அமையும்.

அரசல்லாத குழு அல்லது ஸ்தாபனம் மனித உரிமைகள் ஒப்பந்தத்தில் முறைமையான ஒரு தரப்பினராக முடியாது. எனினும் ஒரு நாட்டின் ஒரு பகுதி மீது உண்மை அதிகாரம் செலுத்தும் அரசல்லாத ஸ்தாபனங்களும் அமைப்புகளும் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் மனித உரிமைகள் கடப்பாடுகளை மதிக்க வேண்டும் என்பது இப்போது பரவலாக ஏற்கப்படுகின்றது.

நல்லிணக்க ஆணைக்குழு கடைப்பிடித்த சட்ட வேலை சட்டகத்தையே ஐ.நா. விசாரணையும் கடைபிடிக்கும்.

**நிபுணர்கள்**

பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதி மாட்டி அற்றிசாரி, நியூசிலாந்து மேல்நீதிமன்ற நீதிபதி சில்வியா காட்ரைட், பாகிஸ்தானின் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் அஸ்மா ஜஹன்கீர் ஆகிய மூன்று நிபுணர்க ளையும் மனித உரிமைகள் ஆணையாளர், கடந்த 2013 ஜூன் மாத த்தில் நியமித்தார்.

தேவைக்கேற்ப சட்டத்துக்கு அப்பாலான கொலைகள், காணாமல் போனமை, உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர், எதேச்சதிகாரமான தடுத்து வைத்தல்கள், பெண்களுக்கு எதிரான வன்முறை, சித்திரவதை என் பவை அடங்கலான பல்வேறு விடயங் களில் விசேடமான குறிப்பான பணிப் பாணை உடைய வர்களின் உதவி யையும் இந்த விசா ரணை பெற்று கொள்ளும்.

**தொழிற்படும் முறைகள்**

இலங்கை மீதான ஐ.நாவின் இந்த விசாரணை, தற்போதுள்ள ஆவணங்களின் பரிசீலனை, அரச, சிவில் சமூக அறிக்கைகள், பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்களை பெறுதலும் ஆவணப்படுத்தலும், உயிர் தப்பியோரின் சாட்சியங்களின் மற்றும் குற்றமிழைத்தவர்கள் என கூறப்படுவோரின் கதைகள், செய்மதிப் படங்கள் உண்மையானதாக நிறுவப்பட்ட வீடியோ, புகைப்படங்கள் மற்றும் உத்தியோகபூர்வ ஆவணங்கள் என்பவற்றை பயன்படுத்தும்.

இலங்கை அரசாங்கத்துடன் தொடர்பை பேணும் உயர்ஸ்தானிகர் இந்த விசாரணைக்காக இலங்கைக்கு வந்து உத்தியோகத்தர்களையும் ஏனையோரையும் சந்திப்பதற்கு வசதி செய்யுமாறு இலங்கை அரசாங்கத்தை இந்த விசாரணை தொடர்ந்தும் கேட்கும்.

இந்த ஐ.நா. விசாரணையானது ஐ.நாவின் வேறு நிறுவனங்களுடனும் விசேட முகவர்களுடனும் அக்கறையுள்ள நிறுவனங்களுடனும் அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் தொடர்பிலிருக்கும்.

இவ்விசாரணைக்கு தகவல் வழங்குவதற்கான விலாசம் oislsubmission@ohchr.org எனும் மின்னஞ்சல் முகவரியாகும். இந்த விசாரணை சுதந்திரம், நடுநிலைமை, புறவயத்தன்மை, வெளிப்படைத்தன்மை, நேர்மை தீங்கு செய்யாமல் ஆகிய கோட்பாடுகள் வழிப்படுத்தும்.

**சாட்சியங்களை பாதுகாத்தல்**

சாட்சியமளிப்போர், பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பு தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். சாட்சியங்கள், பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதில் இலங்கை அரசாங்கத்துக்கும் கடப்பாடு உண்டு.

**இரகசிய காப்பு**

வழங்கப்பட்ட தகவல்களையும், தனிப்பட்டோர் பெயர்களையும் பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை இந்த விசாரணையமைப்பு மேற்கொள்ளும். இதன் வேலை முடியும் போது விசாரணை அமைப்பு நியாயமான ஐ.நா முறைக்கு அமைய் சகல ஆவணங்களையும் இரகசியமாக ஆவணப்படுத்தும். (செ-11)


உற்சவகால அதிரடியான கட்டணக்குறைப்புகள்
கனடா முற்பணம் என்கின்ற பேச்சிற்கே
இடமில்லை-படிமுறைகள் வழியே கட்டணஅறவீடு
-சுமார் 3 இலட்சம் வரை கட்டணத்தில் தளர்வு

செங்கென் விசா-100% உறுதிப்பாட்டுடன்
சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, ஜேர்மனி, இத்தாலி
-சுமார் 2 இலட்சம் கட்டணத் தள்ளுபடி

நியூசிலாந்து IELTS தேவையில்லை
25000/= கட்டணக்குறைப்பு

சைப்பிரஸ்-ஐரோப்பிய நாடு-6 மாதம் படித்தால்
கனடா பறக்கலாம்- 1 இலட்சம் கட்டணச் சலுகை

எதிர்வரும் 13.08.2014 வரை (அனைத்தும் நிபந்தனைகளுடன்)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(7242) தொலைபேசி 0212219016, 0215689090



தேவை

கணனி அறிவுள்ள, ரைப்பிங், விண்ணப்பப் படிவங்களை ஆங்கிலத்தில் நிரப்பிக் கொள்ள, ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பு செய்யக் கூடிய பெண் பிள்ளைகள் தேவை.

(724)

தொடர்புகளுக்கு:-
021 222 4713, 0775038925
Email:-brajanthan@gmail.com



சிங்கள வகுப்புக்கள்

அரச உத்தியோகத்தர்கள், O/L பரீட்சை எடுப்பவர்கட்கான வகுப்புக்கள். + மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற சிங்கள ஆசிரியர் S.M.RASAM THARANGA MARASINGHE ஆல் கற்பிக்கப்படும்.

வகுப்புகள் ஆரம்பம்:-09.08.2014 1 PM
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்



SYLO ஐஸ் கிறீம் SWEET YOUR LIFE ORBIT

உங்கள் அபிமான SYLO ஐஸ் கிறீம் நிறுவனத்தினர் இம்முறை நல்லூரில் இல.251c பருத்தித்துறை வீதியில் (கோயில் முன்புற வீதி) தமது விற்பனை நிலையத்தை அமைத்துள்ளதுடன் பிரதி வெள்ளிக்கிழமை சந்நிதி முருகன் கோவிலிலும் ஞாயிற்றுக்கிழமை வல்லிபுர கோவிலிலும் தமது விசேட விற்பனை வாகனத்தை நிறுத்தியுள்ளார்கள் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றார்கள்.

தரம், சுவை, சுகாதாரம் விரும்புபவர்கள் ஒருமுறை சுவைத்துப் பாருங்கள்

இவ்விளம்பரத்தை எடுத்து வந்து இலவசமாக உங்களுக்கான 25/- பெறுமதியான ஐஸ் கிறீமை சுவைத்து மகிழுங்கள்

SYLO FOOD & BAVAREGES (Pvt) Ltd
இல.76, அம்மன் கோவில் வீதி
கொக்குவில், கிழக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.